விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 05 ஞாயிற்றுக்கிழமை (21.10.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 307

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# தமிழருடனான இணக்கப்பாட்டுக்கு அரசு செய்ய வேண்டியவை அதிகம்!

## அவுஸ்திரேலிய எதிர்க் கட்சி சுட்டிக்காட்டு



யுத்தத்தை வெல்வதற்காக எதிர்கொண்ட சவால்களை விட இலங்கை அரசாங்கத்தை பொறுத்தமட்டில் நாட்டில் சமாதானத்தை வெல்வதென்பது மிக முக்கிய மானதாகும். அதில் முதலாவதாக முன்னைய யுத்த வலயங்களில் நிறுத்தப்பட்டுள்ள படையினர் வெளியேற்றப்பட்டு அங்கு ஜனநாயக ஆட்சி மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும் என அவுஸ்திரேலிய எதிர்க் கட்சியின் துணைத் தலைவியான யூலி பிசப் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நிதிப் பொறுப்பாளர் நாடு கடத்தப்படவுள்ளார்!

தமிழீழ விடுதலைப்புலிகளின் கனேடிய நிதிப் பொறுப்பாளர் கண்ணன் என்பவரை நாடு கடத்த உள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கனேடிய அரசு குறித்த நபரை விரைவில் இலங்கைக்கு நாடு கடத்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

1997 ஆம் ஆண்டு முதல் கனடாவில் வாழ்ந்துவரும் கண்ணனை, நாடு கடத்தும் தீர்மானம் கனடாவின் குடிவரவு குடியகல்வுதிணைக்களத்தினால் எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

உலகத் தமிழர் பேரவையின் தலைமைக் காரியாலயத்தை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியபோது, அதன் செயற்பாட்டாளராக கண்ணன் பற்றிய தகவல்கள் தெரியவந்தன என்றும்,

மீட்கப்பட்ட கணனிகளில் புலிகளின் ஆயுதக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி தகவல்களும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-11)

## 29 ஆயிரம் கோடி ரூபாய் பாதுகாப்பிற்கு ஒதுக்கம்

### எதிர்க் கட்சிகள் எதிர்ப்பு

2013 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு என 290 பில்லியன் (29 ஆயிரம் கோடி) ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இது 2012 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் 26 வீத அதிகரித்த தொகையாகும்.

போர் முடிந்த பின்னரும் இந்தத் தொகை நிதி பாதுகாப்பு அமைச்சுக்கு என்று ஒதுக்கப்படுவது குறித்து எதிர்க் கட்சிகள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

அரசாங்கம் தொடர்ந்தும் இராணுவ கட்டமைப்பை பெருப்பித்து வருகிறது.

அத்துடன் அந்த இராணுவத்தை நாட்டின் குடியியல் போராட்டங்களுக்கு எதிராகவும் பயன்படுத்துகின்றது என்று எதிர்க் கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

இந்த நிலையில் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட செலவினம் 2.5 ரில்லியன் ரூபாய்களாக உள்ள (24ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் மத்தியில் கருத்து முரண்பாடு

13வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நீக்கும் விவகாரம் தொடர்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மூத்த அமைச்சர்கள் மத்தியில் கருத்து முரண்பாடு எழுந்துள்ளது.

இதன்காரணமாக அமைச்சரவை இரண்டாகப் பிளவுபட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் (23ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் போராளிகள் சிலர் நேற்று விடுதலை

இறுதி யுத்தத்தின்போது இராணுவத்தினிடம் சரணடைந்த முன்னாள் விடுதலைப் புலிகளில் புனர்வாழ்வு பயிற்சிக் காலத்தை முடித்துக் கொண்ட ஒருதொகுதியினர் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினால் சமூகத்தில் இணைக்கப்பட்டதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

விசாரணை (23ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த கிழக்கிற்கு விஜயம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

நேற்றுக் காலை கிழக்கிற்கு விஜயம் செய்த அவர், கிழக்கு மாகாணத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிட்டதுடன், மட்டக்களப்பு பாசிக்குடாவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஹோட்டல் ஒன்றையும் திறந்து வைத்தார். (ந-1)

## மழையுடன் கூடிய காலநிலை வட மாகாணத்தில் தொடரும்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ச்சியான கடும் மழையுடன் கூடிய காலநிலை தொடருமென யாழ். வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடைப் பருவப் பெயர்ச்சி காலநிலை காரணமாக டிசம்பர் மாதம் வரையில் தொடர்ச்சியாக விட்டு மழை பெய்யும். இது டிசம்பர் மாதத்தின் பின்னர் கடும் காற்று இடியுடன் கூடிய அடை மழையாக மாறும் வாய்ப்புக்களும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் நேற்றும் நேற்று முன்தினமும் இம் மூன்று மாவட்டங்களிலும் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் தாழ்நிலங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளதுடன் அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர்.

குறித்த பகுதிகளில் மழை பெய்யும் வேளையில் வீசக்கூடிய கடுமையான காற்றுக் குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் எனவும்,

வீசக் கூடிய கடுமையான காற்று மணித்தியாலத்திற்கு 20 தொடக்கம் 30 கிலோ மீற்றர் வேகத்தில் வீசலாம் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (ந-1)

## காணாமல்போனவர்களை மீட்க ம.உ.ஆணைக்குழு முன் போராட்டம்

### நாளை நடத்த ஏற்பாடு

காணாமல்போனோரைக் கண்டறியும் குழுவினால் நாளை சத்தியாக்கிரகம் ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட சத்தியாக்கிரக போராட்டமானது கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக் குழு முன்பாக இடம்பெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் இச்சத்தியாக்கிரக போராட்டம் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

இதன்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மகஜர் ஒன்று கையளிக்கப் படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு நாளைய திகதியுடன் ஆயிரம் நாட்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு எக்னெலிகொட சார்பாகவும் ஏனைய காணாமல்போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்கள் சார்பாகவுமே இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் ஏற்பாடு (23ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Band Score 6:0 IELTS

அனுபவமிக்க, Colombo ஆசிரியர் குழுவினால் பயிற்சி வழங்கப்படுகிறது.

IISEEES CAMPUS
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
021 222 4728, 0777444225
(C-1355)



## கையடக்க தொலைபேசி திருத்தும் பாட நெறி

சிறிய முதலீட்டில் உடனடி சுயதொழில் ஆரம்பிக்க உத்தரவாதம்

0777444225
(C-1355)



யாழ்.நகரில்......

## Diploma in Mass Media
அறிவிப்பாளர் பயிற்சி



வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளராக, தயாரிப்பாளராக, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகின்றீர்களா!

இதோ......

வடமாகாணத்தில் (திறமையின் தேடல்) ஊடகத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை தலைசிறந்த அறிவிப்பாளர்களாக உருவாக்கி வரும் வவுனியா Sun British College பெருமையுடன் அறிமுகப்படுத்தும் யாழ். மாணவர்களுக்கான அறிவிப்பாளர் பயிற்சிநெறி

(Diploma Mass Media)

வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பரத் தயாரிப்பு, நேரடி வர்ணனை செய்தி வாசிப்பு, பத்திரிகை வாசிப்பு இன்னும் பல. (பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு 05 நாள் மழை FM வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்ற சந்தர்ப்பம்.

தயாராகுங்கள் பதிவுகளுக்கு விரையுங்கள்.

இலங்கையிலும் சர்வதேசத்திலும் துடிப்புமிக்க ஒரு சிறந்த அறிவிப்பாளராக, ஊடகவியலாளராக வேண்டுமா?...

அனைத்து வகுப்புக்களும் நவம்பர் மாதம் 5ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகும்.

குறிப்பு: எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற்கொண்ட மாணவர்கள் அரச தனியார், வானொலி, தொலைக்காட்சிகளில் அறிவிப்பாளர்களாக கடமையாற்றுகின்றார்கள்.

வவுனியா, முல்லைத்தீவு மாணவர்கள்
Sun British College,
No:26,Station Road,
Vavuniya.
T.P.No:0770584658

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாணவர்கள்
IISEEES NALLUR CAMPUS
No. : 762 Point Pedro Road,
Nallur, Jaffna.
T.P.No:0770584658 / 0242224728
(சி-1348)



## இன்று முதல் முல்லைத்தீவு நகரில்...

சஜீஸ் வெளிநாட்டு பார்சல் சேவை நிறுவனம் தனது சேவையை ஆரம்பிக்கின்றது.



அனைத்து நாடுகளுக்குமான உணவுப் பொருட்கள், கடல் உணவுகள், உடு புடைவைகள் உடனடிக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

லண்டன், சுவிஸ், கனடா போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண கப்பல் சேவையும் எம்மிடம் உண்டு.

கிளைகள்
சஜீஸ் வெளிநாட்டு பார்சல்சேவை
கொன்மென்ட் வீதி, மன்னார்.

சஜீஸ் வெளிநாட்டு பார்சல் சேவை
நீதிமன்றம் முன்பாக
A9 வீதி, கிளிநொச்சி

தொடர்புகளுக்கு
சஜீஸ் வெளிநாட்டு பார்சல் சேவை
(தபாற்கந்தோர் அருகாமை)
தண்ணீரூற்று, முள்ளியவளை.

தலைமை காரியாலயம்
சஜீஸ் கொமினிகேசன்
22 பஸ் நிலையம், வவுனியா.

தொ.பே. இல.: 024 2222166/ 024 2222804
(790)


## தெய்வ தரிசனம் இறுவெட்டு வெளியீடு

தெய்வ தரிசனம் இறுவெட்டு வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மணி மண்டபத்தில் வே. ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய செ. செல்வறமணனின் உருவாக்கத்தில் மாலுசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயத்தின் 3 பக்திப் பாடல்களும் மற்றும் துன்னாலைப் பகுதியில் உள்ள இரு ஆலயங்கள் பற்றிய பக்திப்பாடல்களும் வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கு. அருந்தாகரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் ந. பாலச்சந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ந-3,24)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் இரசாயனவியல், கணிதவியல், பௌதிகவியல் மற்றும் கணணி விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளுக்கான தற்காலிக விரிவுரையாளர்/தற்காலிக செய்முறை வழிகாட்டுநர் (Temporary Lecturer/ Demonstrator) பதவிகளுக்கு உடனடி வெற்றிடங்கள் இருப்பதனால் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் குறித்த துறையில் விஞ்ஞான மாணிப் பட்டம் (B.Sc.) பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து குறித்த துறையினைப் பயின்று இறுதிப் பெறுபேறுகளை எதிர்பார்த்து இருப்போரும் மேற்படி பதவிக்காக விண்ணப்பிக்க முடியும். எனவே விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் பாடவிதானத்தைக் குறிப்பிட்டு தங்களது சுயவிபரக் கோவையினை இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்பாக பிராந்திய இணைப்பாளர், இலங்கை திறந்த பல்கலைக் கழகம், யாழ் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந-8)


## செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



விஜய் இயக்கத்தில் சியான் விக்ரம், அனுஷ்கா, எமி ஜக்சன், சந்தானம் மற்றும் பலர் நடிப்பில்

தாண்டவம்

10.30, 2.30, 6.30, 9.30 D.T.S



## Software Developers Training Programme

Problem and Problem Solving
Program and Programming Techniques
System analysts and Designs
Software Project Management
Software Developing life Cycle
Developing Software by Trained
Course Info: Http//yarlsoft.ueuo.com/Aps/

North Lead Education Center
No. 328, Stanly Road, Jaffna.
(ஆரியகுளம் சந்தி அருகில்)
Tel: 2224459, 0772533390, Fax: 2224460
(C-1351)



## காணி விற்பனைக்கு

வடமராட்சி அல்வாய் தெற்கில் வியாபாரிமூலை வீதியில் மாலிச் சந்திக்கு அண்மையில் ஒரே அடைப்புக்குள் 4 1/4, 6 3/4 பரப்பளவு கொண்ட காணிகள் தேவைக்கேற்ப பிரித்தும், இணைத்தும் விற்பனைக்குண்டு. 4 1/2 பரப்பு காணியில் கிணறும், வீடும் உண்டு. மின் இணைப்பும், பிரத்தியேக பாதையும் உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புக்கு :-
தொ.பேசி. இல.: 0212264685
0779672385
(C-1235)



## வேலையாட்கள் தேவை

வன்னியில் தொடங்க இருக்கும் வைத்திய நிலையத்திற்கும் மருந்தகத்திற்கும் ஆட்கள் தேவையாகவுள்ளது.

★ தாதியர் (Nurse)

★ இலிகிதர் (Clerk)

★ முகாமையாளர் (Manager)

★ வாகனச் சாரதி (முச்சக்கரவண்டி, கார், பஸ்)

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 0727570568

குறிப்பு: ஆங்கில அறிவுடையவராக இருக்க வேண்டும். தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.
(799)



## ஆறு மாத காலத்தில் VISA ஒழுங்குகள்

CANADAவுக்கு குடும்பத்துடன் குடியேறுவதற்கான FAMILY VISA எம்மால் பெற்றுக் கொடுக்க முடியும்.



**தகைமைகள்**

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இளமாணி, முதுமாணி பட்டம் பெற்றவர்கள், அங்கீகரிக் ï ØÅâ¦ ï_s Wç éB! ï^ Jé\Vï DIPLOMA பட்டம் பெற்றவர்கள் ஓராண்டு வேலை அனுபவத்துடன் செல்லமுடியும்.

**NEWZEALAND, AMERICA, LONDON STUDENT VISA**

NEWZEALAND:- (G.C.E. O/L, A/L) தகைமையுடன் மேற்படிப் புக்கு செல்லமுடியும். அங்கு மூன்று ஆண்டுகள் கல்வி கற்ற பின் அந்த நாட்டின் நிரந்தர குடியுரிமையை பெற்றுக் கொள்ள வும் அத்துடன் உங்கள் குடும்ப அங்கத்தவரையும் அழைத்துக் கொள்ள முடியும்.

**CYPRUS/ இத்தாலி**

சைபிரஸ் நாட்டில் உயர்கல்வியை கற்க செல்பவர்கள் அந்நாட்டில் கல்வியை முடித்துக் கொண்டு ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டில் குடியேறுவதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். இத்தாலியில் Work Permit Visa மூலம் குறுகிய காலத்தில் பிரயாணம் மேற்கொள்ளமுடியும்.

**மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு**

மத்திய கிழக்கு நாடுகளான டுபாய், சவுதி அரேபியா, ஓமான், டோகா, கட்டார், குவைத் போன்ற நாடுகளுக்கு ஒரு மாதத்தில் செல்லக் கூடிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.



Seaman தொழில் வேலைசெய்யவிரும்புபவர்கள்6மாதபயிற்சியின்பின்வேலையைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

**Rainbow Travels**
இல. 30/2, 3ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
TEL: 0212219596 / 0778980652

**BANK BALANCE / SPONCER**

வெளிநாடுகளில் கல்வி கற்க செல்பவர் களுக்கும்/ Tourist Visa மூலம் செல் பவர்களுக்கும் தேவையான Bank Bal ance/ Sponcer ஒழுங்குகள் எம் மூலம் செய்து கொள்ளலாம்.
(சி-1354)



"அன்பே சிவம். ஒன்றே குலம். ஒருவனே தேவன்."

## ஸ்ரீவித்தியா குருகுலம்

வழங்கும், ஆசிரியர் முத்துலிங்கத்தின்

'EASY ENGLISH'

* உத்தியோகத்தர்க்கு * ஆசிரியர்க்கு * உயர்கல்வியினர்க்கு
* A/L படித்தவர்க்கு * மகளிர்க்கு * வெளிநாடு செல்பவர்க்கு

குருகுல மரபு : இலவசக் கல்வி

விபரங்கள் + பெயர்பதிவு 773212711 மூலம்
(797)



## Immediate Vacancy

D.M.I அமெரிக்க நிறுவனத்தின் இலங்கையின் வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் புதிய கிளைகளுக்கு Trainee Manager, Assistant Managers, Supervisors, Distributors தேவை. அனுபவம்/அனுபவமற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தகுதி: A/L, O/L. வயதெல்லை : 18-35 வரை

பயிற்சியளிக்கப்பட்டு நிரந்தர தொழில் வாய்ப்பும் வெளிநாட்டு வேலைவாய்ப்பும் வழங்கப்படும்.

பயிற்சியின் போது - ரூ.12000 - 15000

பயிற்சியின் பின் - ரூ. 50000 க்கு மேல்

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா.... முக்கியத்துவம் அளிக்கப்படும். தங்குமிட வசதியுண்டு.

தொடர்பு இல: 0217200867
0775566224
(773)



## COMPUTER CLASSES
CERTIFICATE IN INTERNET TECHNOLOGY

Introduction to Internet & E-Mail.
Create Free E-Mail, Web & Skype ID.
Internet Access (Chrome,Firefox,I.E)
E-Mail Access (Outlook & Webmail)
Community Site (Facebook, Twiter)
Download & Search : Free E-books & Softwars.

Duration: 3Week, Course Fee : 1500

Ms Office, DTP, Hardware, Programming, Web Designing, Kids Program போன்ற புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன (பூரண தமிழ் மொழி விளக்கத்துடன் கற்பிக்கப்படும், ஆர்வம் உள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்)

NORTH LEAD EDUCATION CENTER
No.328, Stanly Road, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460


## மரண அறிவித்தல்

# தம்பிமுத்து சந்திரசேகர்

(சந்திரன், தம்பி அண்ணா)

(யாழ் சிற்றூர்தி சேவை சங்க நேரக் கணிப்பாளர்)



2-ம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து சந்திரசேகர் 18.10.2012 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்ற தம்பிமுத்து ராசமணி தம்பதியினரின் பாசமிகு புதல்வரும், காலம்சென்றவர்களாகிய முத்துபாக்கியம் தம்பதியினரின் மருமகனும், சுகுணமலர் (ராஜினி) யின் பாசமிகு கணவரும், திலீப் (ஜொனி), கிருஷ்ரிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலிஸ்ரோவின் பாசமிகு சித்தப்பாவும், சூரியகலா, சந்திரபோஸ் (மினி), விஜயகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகராசா (அத்தான்), புவனேஸ்வரி, சந்திரசேகரன் (பிரான்ஸ்), சுகிர்தமலர் (ஜெயந்தி), சுதர்சன் (பாப்பன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் அமரர் சோமசுந்தரத்தின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.10.2012 (ஞாயிற்றுக்கிழமை) இன்று காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

169/6, அரசடி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மா. சிவசுப்பிரமணியம் (சிவம்)
(சகோதரன்)
(800)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதுமலையில் இன்று மாணவர் கௌரவிப்பு

சுதுமலை வடக்கு இளைஞர் கழகம் நடத்திய இலவச வகுப்புகளில் பங்குபற்றி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கௌரவிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சுதுமலை சிந்மயபாரதிவித்தியாலயத்தில்நடைபெறவுள்ளது.

எஸ்.செந்தில்குமரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவனும், கௌரவ விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் ஏ.ஜெபநேசனும் கலந்துகொள்ளவுள்ளனர்.(ரு)


# மாதாந்த பொதுக்கூட்டம்

யாழ்.மாநகரசபையின் ஒக்டோபர் மாத பொதுக் கூட்டம் எதிர்வரும் 25-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல்2 மணிக்கு யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக செயலரளர் தா.தர்மரட்ணம் அறிவித்துள்ளார். (அ-9)

# பால வேலைக்காக வீதி மூடப்பட்டது

யாழ்ப்பாணம் சங்கிலித்தோப்பு தொடக்கம் செம்மணி வீதியில் 2 கிலோமீற்றர் தூர இடைவெளியில் பால வேலைகள் நடைபெறுவதால் நேற்று சனிக்கிழமையிலிருந்து மறு அறிவித்தல் வரும் வரையில் இவ்வீதி மூடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியிலாளர் வி. சுதாகர் அறிவித்துள்ளார்.இதன் காரணமாக கண்டி வீதி (ஏ9), ஆனந்தன் வடலி வீதியை மாற்று வீதியாக பாவிக்கும்படி பொது மக்களை கேட்டுள்ளார். (அ-9)

# இந்து ம. வித்தியில் சூறைக்காற்று



கோண்டாவில் இந்து மகா வித்தியாலய சூழலில் சுழிக் காற்று வீசியதால் 700 ஓடுகள் தூக்கப்பட்டு சேதமடைந்தன. இச்சம்பவம் கடந்த வெள்ளிக் கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பாடசாலையில் மாலை வகுப்புக்கள் மேல் மாடியின் கீழ் அறையில் நடத்தப் பட்டமையால் மாணவர்களுக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை என பாடசாலைகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# நீர்ப்பம்பியை திருடிய இருவர் கைதாகினர்

உடுவில் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் புன்னாலைக்கட்டுவன் பாடசாலையில் களவாடப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

கடந்த மாதம் இவ்விரு பாடசாலைகளிலும் நீர் இறைக்கும் இயந்திரம் திருடர்களினால் திருடப்பட்டிருந்தது.

திருட்டு தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தினரால் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இத்திருட்டு தொடர்பில் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல் வழங்கப்பட்டதையடுத்து மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரியின் நடவடிக்கையில் திருடப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்கள் மீட்கப்பட்டதோடு திருடர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர். (அ-4)

# 70 ஆவது குருபூசை

கந்தர்மடம் சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தின் ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளின் 70 ஆவது குருபூசை நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

வேதாந்த மடத்தின் எட்டாவது குரு பீடாதிபதி ஸ்ரீமத் வேத வித்யாசாகர சுவாமிகளின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தாவடியூர் கே.எஸ் திருஞானசம்பந்தனின் பண்ணிசைக் கச்சேரி நடைபெறும்.

தொடர்ந்து சுவாமிகளின் சமாதிக்கு அபிடேக ஆராதனைகளும் நடைபெறும். அத்துடன் சின்மயாமிஷனின் யாழ்.மாவட்டக் கிளை பிரதிநிதி ஜாக்கிரத் சைதன்ய சுவாமி ஆன்மீக உரையாற்றவுள்ளார். (அ-9-8)

# இராசி பலன்

*21.10.2012*
*(ஐப்பசி 5, ஞாயிற்றுக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*
*சப்தமி பின்னிரவு 3.03 மணிவரை*
*பூராடம் முன்னிரவு 11.54மணிவரை*
*இராகுகாலம் 4.32-6.02 மணிவரை*
*சுபநேரம் 9.02-10.32 மணிவரை*
*சரஸ்வதி பூஜை ஆரம்பம், சித்தாமிர்தம்*

**மேடம்** ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுதல்கள் அகலும், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், நேற்றைய பிரச்சினை ஒன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், பயணங்களால் பலனுண்டு

**இடபம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், சிரித்துப்பேசும் நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பழைய சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை கூடும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** உறவினர் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும் நாள், வியாபார விருத்திக்கு வித் திடுவீர்கள், மருத்துவ செலவுகள் குறையும், சுவாரஸ்மான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிங்கம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, அரை குறையாக இருந்த பணிகள் மீண்டும் தொடங்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** கொள்கைப் பிடிப்புடன் செயற்படுவீர்கள், தாய்வழி உறவில் ஆதாயமுண்டு, வாகன சுகமுண்டு கலகலப்பான தகவல் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும், உடன்பிறப்புக்கள் வழியில் உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** சுப காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பணவரவு திருப்தி தரும், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்

**தனுசு** அம்பிகை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு ஆச்சரியப்பட வைக்கும், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்** உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழும் சம்பவம் ஒன்று நடைபெறலாம், இறை வழிபாட்டால் சிந்தனை அதிகரிக்கும், திட்டமிட்ட காரியங்களில் திருப்பங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** நண்பர்கள் ஒத்துழைப்போடு நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உ[illegible]வாகும், அந்நிய தேசத் தொடர்புகள் எ[illegible]ணியபடியே கைகூடும்.

**மீனம்** தொலைபேசி வழி தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், நண்பர்கள் உதவி செய்ய முன்வருவார்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், இஷ்ட சித்தியுண்டு, போசன நன்மையுண்டு.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## நடக்கும் மனிதர்கள்

*1985 ஆம் ஆண்டில் ஒருநாள் வானொலி நிலைய வாசலில் காத்துக் கொண்டிருக்கிறேன்.*

இன்னும் சற்று நேரத்தில் அவர் வரப் போகிறார்.

அவருடைய உரையைப் பதிவு செய்ய வேண்டிய பொறுப்பு எனக்கு தரப்பட்டிருந்தது.

கார் வந்தது.

கதவைத் திறந்தேன். அவர் இறங்கினார். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அழைத்துகொண்டு போய் உள்ளே அமர வைத்தேன்.

அவர் கேட்டார்.

"நீங்கள் இப்போது எந்தப் பிரிவில் இருக்கிறீர்கள்?"

"தமிழ் இலக்கியப் பிரிவு...!"

"இதற்கு முன்பு?"

"விவசாயம் ... கால்நடை..."

"கால்நடை என்றால்?"

"ஆடுகள் ... மாடுகள்"

"அவற்றை ஏன் கால்நடை என்று சொல்கிறீர்கள்?"

"அவை எல்லாம் காலால் நடக்கின்றன..."அதனால் கால்நடை என்கின்றோம்.

"அப்படியானால் மனிதன் காலால் நடப்பதில்லையா?"நான் மயங்க ஆரம்பித்தேன்."

"ஆமாம் ...மனிதன் காலால் தான் நடக்கின்றான்!"

"அவனையும் கால்நடை என்று சொல்ல வேண்டியது தானே?"

என்ன பதில் சொல்வது என்று எனக்குப் புரியவில்லை.

அமைதியாக நின்று கொண்டிருந்தேன்.

அடிகளார் சிரித்து கொண்டே விளக்க ஆரம்பித்தார்.

காலால் நடப்பது மட்டுமே கால்நடைகளின் இயல்பு.

ஆனால் மனிதன் அப்படியல்ல. சிந்தனையாலும் கருத்தாலும் பண்பாட்டாலும் அறிவாலும் நாகரிகத்தாலும் படைப்பாற்றலாலும் நடக்க வேண்டிய பொறுப்பு அவனுக்கு இருக்கிறது.

மனிதன் தான் நடக்க வேண்டிய திடத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

புவி அவனை நடத்தக்கூடாது... புவியை அவன் நடத்தவேண்டும். அடிகளார் பேசிக் கொண்டே போனார்.

நான் சிந்திக்க ஆரம்பித்தேன். உண்மைதான் கருத்தால் நடக்க தெரியாத மனிதர்கள் எல்லாம் காலால் மட்டுமே நடக்க தெரிந்த விலங்குகள் மாதிரிதானே...அப்படியென்றால்...?

ஓ...

இந்த உலகத்தில் எவ்வளவு கால்நடைகள்!

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80. | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80-120 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 50 |
| தக்காளி | 60 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 40 |
| கோவா | 95 | 60 | 75 |
| கரட் | 100 | 80 | 130 |
| பூசணி | 65 | 30 | 50 |
| புடோல் | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 50 | 60 |
| பாகற்காய் | 120 | 110 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 75 | 70 | 60 |
| பயற்றங்காய் | 100 | 110 | 100 |
| லீக்ஸ் | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 70 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 70 | 100 |
| முருங்கைக்காய் | 80 | 90 | 40 |
| போஞ்சி | 110 | 110 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | - |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 280 | 240 | 400 |
| தேங்காய் (சிறு) | 40 | 40 | 27-30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு சிறந்த சேவையாற்றவே உள்ளூராட்சி சட்டமூலத்தில் திருத்தம்

## அமைச்சர் டளஸ் தெரிவிப்பு

கிராமமட்டங்களில் மக்களுக்கு சேவையாற்றுவது, இனங்களுக்கிடையில் ஒற்றுமையை பலப்படுத்துவது போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதாக இளைஞர் விவகார, திறன் அபிவிருத்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல் திருத்த சட்டமூலம், திவிநெகும திணைக்கள சட்டமூலம் ஆகியன தொடர்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்த உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களைத் தெளிவுபடுத்தும் செயலமர்வொன்று இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இச்செயலமர்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நடைமுறையிலிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் சட்டமூலத்தால் ஒரே கட்சிக்குள்ளேயும் இனங்களுக்கிடையேயும் முரண்பாடுகள் தோன்றுகின்றன. அது மட்டுமன்றி கிராமமட்டங்களில் மக்களுக்குச் சேவையாற்றாத பலரும் தேர்தல் மூலம் தெரிவிக்கின்றனர்.

இவற்றைக் கட்டுப்படுத்தி மக்களுக்குச் சிறந்த சேவையாற்றுவது, இனங்களுக்கிடையில் ஒற்றுமையைப் பலப்படுத்துவது உள்ளிட்ட பல நோக்கங்களைக் கொண்டதாகவே இச்சட்டமூலத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறது.

கடந்த 1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உள்ளூராட்சி தேர்தல் சட்டமூலமானது பாராளுமன்றத்தில் எந்தவொரு கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றுக்கொள்வதைத் தவிர்க்கும் வகையிலும் சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலுமே கொண்டு வரப்பட்டதாக அப்போதைய ஜனாதிபதியாகவிருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன கூறினார்.

எனினும் தமது கட்சி தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதற்கும் இடதுசாரிக் கட்சிகளை ஓரங்கட்டுவதற்காகவும் தற்போது நடைமுறையிலுள்ள சட்டமூலம் கொண்டுவரப்பட்டதாக அவர் பின்னர் கூறியிருந்தார்

உள்ளூராட்சி தேர்தல் திருத்த சட்டமூலம் மற்றும் திவிநெகும திணைக்களச் சட்டமூலம் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தும் கடமை உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு உண்டு.

மக்களுக்கு நன்மை ஏற்படக்கூடிய சட்டமூலங்களை அரசாங்கம் கொண்டுவரும் போது அதிலுள்ள நன்மைகள் குறித்துப் பார்க்காமல் எதிர்க்கட்சிகள் எதிர்ப்புக்களை வெளியிடுகின்றன. இவ்வாறன்றி சட்டமூலங்களில் காணப்படும் நன்மைகள் பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றார். (அ-2)

YARL Taxi
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919
(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-60/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)
இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்
36, கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம்.
E-Mail - Yarltaxi@gmail.com

# வன்னிப்பகுதியில் சட்டவிரோத மரக்கடத்தல்கள் தொடர்கின்றன

## கையறு நிலையில் மக்கள்

யுத்தம் நடைபெற்ற பிரதேசங்களில் தொடர்ந்தும் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வன்னிப் பிரதேசத்திலேயே பயன்தரு மரங்கள் வெட்டப்பட்டு தங்களுடைய சுயதேவைக்காகவும் விற்பனை நோக்குடனும் கொண்டு செல்கின்றனர் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பெரிய வாகனங்களில் வரும் மரக் கடத்தல்காரர்கள் தம்முடைய மரங்களை வெட்டிச் செல்லும்போது தாம் வெறுமனே பார்த்துக் கொண்டு இருக்கவேண்டிய நிலையில் காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாரிடம் கேட்டபோது,

இவ்வாறு மரம் வெட்டுதலில் அதிகளவில் சட்டவிரோதமாக ஈடுபடுவது உள்ளூர் வாசிகளே பெரும்பாலும் தமது விறகுத் தேவைக்காகவே இப்போது மரங்களை வெட்டிச் செல்கின்றனர் என தெரிவித்தனர். அத்துடன் சிலர் தமது வீட்டுத் தளபாட தேவைகளுக்காகவும் வில மதிப்புடைய மரங்களினை வெட்டுகின்றனர்.

எனினும் இவ்வாறான சட்டவிரோத மரக் கடத்தல்களில் ஈடுபடுவோரினையும் அனுமதியின்றி மரக்காலைகள் வைத்திருப்பவர்களினையும் பொலிஸார் கைது செய்து வருகின்றனர்.

கடந்த வாரத்தில் கூட ஓமந்தையில் மரம் வெட்டிய இருவரை கைது செய்துள்ளதோடு பாலை மரக்குற்றிகளினையும் அவர்களுடைய உழவியந்திரத்தினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி 40 முதிரை மரப் பலகைகளும் மீட்கப்பட்டதோடு 4 பேர் கைது செய்யப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (அ-4)

# சட்ட ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பன இலங்கை.சட்டத் தரணிகள் சங்கத்துடன் இணைந்து நடத்தும் சட்ட உதவிகள் நடமாடும் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை கண்டாவளை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் இலவச சட்ட ஆலோசனை, சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கான தீர்வு, காணி உறுதி, பிணக்குகளிற்கான ஆலோசனை, சொத்துக்களை பெற்றுக் கொள்ளுதல், குடும்ப வன்முறை, மரணச்சான்றிதழ் பெற்றுக் கொள்ளுதல் போன்றன இடம்பெறவுள்ளன. எனவே, இதில் கலந்து பயன் பெறுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்க ஏற்பாட்டு குழுவினர் அறிவித்துள்ளனர். (அ-3-263)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் புலிச்சந்தேக நபர் ஒருவர் கைது

(கொழும்பு)

சர்வதேச புலம்பெயர் விடுதலைப்புலிகளுடன் சம்பந்தப்பட்ட விடுதலைப்புலிகளின் தலைவர் என்ற சந்தேகத்தின் பேரில் பயங்கரவாத விசாரணை பிரிவினரால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என அரசாங்க புலனாய்வுப் பிரிவை கோடிட்டு கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவர் 1997 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை விடுதலைப்புலிகளின் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராக இருந்துள்ளதாகவும் 2000 ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்றுள்ளார் எனவும் அரச புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தில் 12 வருடங்கள் வசித்து வந்த அவர் விடுதலைப்புலிகளின் வளர்ச்சிக்கு தேவையான பணத்தை சேகரித்து வழங்கியுள்ளார் எனவும் இந்த தகவல்கள் தெரிய வந்ததையடுத்து இந்த சந்தேக நபரை இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களம் கறுப்பு பட்டியலில் சேர்த்துள்ளது.

இந்த நிலையில் மேற்படி சந்தேகநபர் 12 வருடங்களுக்கு பின்னர் இங்கிருந்து மீண்டும் வெளி நாடு செல்ல முயற்சித்த போதே கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யபட்ட நபர் சுமார் ஒரு கிலோ கிராம் தங்க ஆபரணங்களை அணிந்திருந்ததாகவும் அவற்றின் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபா எனவும் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

GREENWICH COLLEGE (PVT) LTD
உடனடி வேலை வாய்ப்புடன் இலவச பயிற்சி

15 வருட பழைமைவாய்ந்த United Kingdom UK (Base) கம்பனியான Greenwich College (PVT) Hd உயர் கல்வி நிறுவனத்திற்கு தகைமையான ஆண், பெண் Marketing Trainee, Promotion Managers தேவைப்படுகின்றனர்.

- Filed Marketing செய்வதற்கு விருப்பமுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும்
- அடிப்படைத் தகைமை G.C.E.O/L மட்டுமே (பரீட்சைக்கு தோன்றியிருந்தால் போதும்)
- தூர பிரதேசத்திலிருந்து வரும் (ஆண், பெண்) ஆகியோருக்கு பாதுகாப்பான தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.
- பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் அடிப்படைச் சம்பளம் 15,000 வழங்கப்படுவதோடு பயிற்சியின் பின் மாதாந்தம் 60,000 சம்பளம் மற்றும் Commission வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை
உங்கள் அடையாள அட்டையுடன் ஏனைய ஆவணங்களுடன் நேரில் வரவும்.
விண்ணப்ப முடிவு திகதி :-24.10.2012
ஆட்சேர்ப்புக்கான நேர்முகத் திகதி :- 23.10.2012 /24.10.2012
நேரம்:-9.30-4.30
இடம்:-01, 2 ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விபரங்களுக்கு :- 0777630708, 0777751382
(சு/1346)

கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அவிட்டம் 3<br>உயரம்:-5'6"<br>கி.பா:-43.25<br>தொழில்:-LOLC MICROCRELIT STALL B/509 | பிறப்பு:- 1971 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- ஆயிலியம் 3<br>உயரம்: 4'11"<br>கி.பா:-51.50<br>தகைமை: அரச முகாமைத்துவ பட்டதாரி பயிலுநர் G/571 |
| பிறப்பு:-1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-ரோகினி 2<br>உயரம்:-6'2"<br>கி.பா:-112, 7 இல் செவ்.<br>தொழில்:-பிரான்ஸ் P.R B/528 | பிறப்பு:- 1969 றோ.க.<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>உயரம்: 5'<br>கி.பா: 53<br>எ.பா.:- சாதகம், சாதி, சமயம் பார்க்காமலும் செய்யலாம். G/040 |
| பிறப்பு:- 1977 இந்து. வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரம் 1<br>உயரம்:-5'8"<br>கி.பா:-லக் (25), 4 இல் செவ்<br>தொழில்:-Bsc அரச முகாமைத்துவம் B/540 | பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மூலம் 3<br>உயரம்: 5'4"<br>கி.பா:-46.75<br>தகைமை:-A/L முன்பள்ளி டிப்ளோமா ஆசிரியை G/056 |
| பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அச்சுவினி 4<br>உயரம்:-5'2"<br>கி.பா:-47<br>தொழில்:- கணக்காளர் ஓமான் B/473 | பிறப்பு:- 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அத்தம் 2<br>உயரம்: 5'4"<br>கி.பா!-61.25, 8 இல் செவ்<br>தொழில்:-அரச பட்டதாரி பயிலுநர் G/586 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீரிழிவு நிலையத்தால் இரு நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டில் நல்லதோர் உணவு செய்வோம், நூற்றாண்டு கடந்து நீடூழி வாழ ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை8.30 மணிக்கு யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலைய வைத்திய அதிகாரி டாக்டர் இராஜரட்ணம் பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி டாக்டர் கே.பாலகுமார் கலந்து கொள்ளவுள்ளார். நல்லதோர் உணவு செய்வோம் எனும் நூலை யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் எஸ்.ஶ்ரீபவானந்தராஜா வெளியிட்டு வைப்பார்.

இந்நூலின் ஆய்வுரையினை யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் ஜி.மிகுந்தன் ஆற்றவுள்ளார். நூற்றாண்டு கடந்து நீடூழி வாழ என்னும் நூலுக்கான ஆய்வுரையினை யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் சட்டத்தரணி கே.குருபரன் ஆற்றவுள்ளார். (அ-6-9)




# இந்தியாவின் வெளியுறவு கொள்கைகளில் மாற்றம் வரும்

## சிறிதரன் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பிராந்தியத்தில் மாறிவரும் சூழலின் மத்தியில் நமக்கான தீர்வினை நோக்கி பயணப்படுகின்றோம் என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கைதடி கலைநகர் துர்க்கா சனசமூக நிலைய புதிய கட்டட திறப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த சனசமூக நிலையம் இங்கு திறக்கப்பட்டிருப்பது இந்த கிராமத்தின் அறிவுத்தேடலையும் இக்கிராமத்தின் ஒருங்கிணைந்த மக்களின் செயலூக்கத்தையும் எடுத்துக்காட்டுகின்றது.

எமது கிராமங்களில் முன்பெல்லாம் சனசமூக நிலையங்களின் பங்களிப்பு மிகப் பெரிதாக இருந்தது. தொலைத்தொடர்பு வசதிகள் மற்றும் செய்தி ஊடக வளர்ச்சிகள் கிராமங்களை சென்றடையாத காலங்களில் செய்திகளை அறியவும் உலக நடப்புக்களை அறிந்து கொள்ளவும் இந்த சனசமூக நிலையங்கள் துணையாக இருந்திருக்கின்றன.

கலை இலக்கியம் மற்றும் முற்போக்கு சிந்தனைகளின் இயங்குதளமாகவும் இந்த இடம் அமைந்திருக்கின்றது. ஆகவே, சனசமூக நிலையங்களை ஸ்தாபித்தல், அதை தொடர்ந்து இயங்கச் செய்தல் இன்றைய சூழலில் மிகவும் அவசியமாக இருக்கின்றது.

தற்போது தொலைத்தொடர்பு வசதிகள், ஊடக வசதிகள் பெருகியுள்ள நிலையில் சனசமூக நிலையங்கள் கிராமிய வாசனையை காப்பாற்றுகின்ற பணியை செய்ய வேண்டியனவாக கடமைப்பட்டுள்ளன. நமது கிராமங்களின் சிந்தனையும் ஒற்றுமையும் இலட்சியமும் இக்காலத்திற்கு தேவையாகின்றது.

சர்வதேச மயப்பட்ட எமது இனத்திற்கான பிரச்சினை இன்று பிராந்திய ஒழுங்கிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வல்லமை பெற்றுள்ளது. எமது மண்ணில் தாக்கம் செலுத்தக் கூடிய இந்திய வல்லரசுகளின் வெளியுறவு கொள்கைகளிலும் மாற்றத்திற்கான அறிகுறிகள் புலப்பட ஆரம்பித்துள்ளன.

தமிழகத்திலும் இனிவரும் காலங்களில் மிக முக்கியமான முனைப்புகள் வெளிப்படுமென எதிர்வு கூறப்படுகின்றன. எனவே, இவை எம்மோடு பிணைந்தவையாக இருப்பதால் எமது கொள்கை, இலட்சியம், சமூக ஒற்றுமை என்பனவும் எமது தீர்வு நோக்கிய பாதைக்கு முக்கியமாகத் தென்படுகிறது. நாம் கடந்து வந்த பாதையை மறந்துவிடாமல் இருப்பதும் இனிவரும் நாட்களுக்கு பலமான ஒன்று என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# கதைகூறல் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினர் தமது எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களிடையே தேசிய வாசிப்பு மாதத்தையொட்டிய கதைகூறல் போட்டியை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நூலக மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

இப்போட்டியில் பங்கு பற்றும் முன்பள்ளி மாணவர்களை உரிய நேரத்திற்கு சமுகம் தரும்படி நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (அ-3-29)




# நடமாடும் இலவச மருத்துவ சேவையாலும் வில்லங்கம்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(மிருசுவில்)

மானிப்பாயில் உள்ள பிரபல வைத்தியசாலையால் மேற்கொள்ளப்பட்டு வரும் இலவச நடமாடும் மருத்துவ சேவையில் வைத்தியர்கள் ஈடுபாடின்றி செயற்படுவதாக அராலி வடக்கு மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த வைத்திய பணியாளர்களினால் பிரதி செவ்வாய்கிழமைகளில் அராலி அசம்பிளி ஒவ்கோட் வளாகத்தில் மக்களுக்கு இலவச மருத்துவம் வழங்கப்பட்டு வருகிறது.

எனினும் இவ் இலவச மருத்துவத்திற்கு வரும் மக்களுக்கு மருத்துவர்கள் எதுவித பரிசோதனையையும் மேற்கொள்ளாது மருந்து வழங்குகின்றனர்.

அத்துடன் மருத்துவர் பயணிக்கும் வாகனத்தில் அமர்ந்தபடி வாகனத்தின் யன்னல் கண்ணாடி ஊடாகவே மருத்துவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் இங்கு வரும் மக்கள் இம்முறையை பார்த்துவிட்டு மருத்துவ சேவையை பெறாது திரும்பிச் செல்கின்றனர்.

எனவே, இச்செயற்பாட்டை உரியவர்கள் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-85)

# நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் வாணி விழா நிகழ்வும் வித்தியாரம்பமும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையும்,நேற்று சனிக்கிழமையும், இன்று ஞாயிற்றுக்கிழமையும் இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் மாலை 5 மணி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. இதில் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் இரவு 7.3 0 மணிவரை நடைபெறவுள்ளன.

இதில் மன்ற மாணவிகளின் வயலின் இசை,சதாவேல்ளமாறனின் மாணவர்களின் மிருதங்க இசை செல்வன் டினேஸன் பேரானந்தராஜாவின் பாட்டுக்கச்சேரி செல்வி தனசொரூபி நவரத்தினத்தின் இசைக்கச்சேரி, ஶ்ரீதேவி கண்ணதாசனின் மாணவிகள் வழங்கும் நாட்டியஅஞ்சலி என்பன நடைபெறவுள்ளன.

++++++++++

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் நவராத்திரி விழா கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நல்லூர் ஶ்ரீலஶ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள ஏழாம் நாள் நிகழ்வில் நவராத்திரி மகிமை எனும் தலைப்பில் சைவப்புலவர் சந்திரவேல் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். அத்துடன் சுன்னாகம் கதிரமலை சிவன்கோவில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

++++++++++

சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் நவராத்திரி விழா கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை வரை சைவ வித்தியா விருத்திச்சங்க பெண்கள் இல்ல ஆராதனை மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சைவ மன்ற தலைவர் செல்வி இ.பிரியங்கா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி மு.குமாரசாமி, சைவப்புலவர் என்.ஜி.தரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர் என சைவ மன்றம் அறிவித்துள்ளது.

++++++++++

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் நவராத்திரிவிழா நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நாரந்தனை ஶ்ரீ தான்தோன்றி மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கும்பபூசை தத்துவம் எனும் தலைப்பில் சைவப் புலவர் கமலநாதன் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார். (அ-9)

# இலவச மருத்துவ முகாம்



(காரைநகர்)

காரைநகர் கடற்படையினர் விசேட இலவச மருத்துவ முகாம் ஒன்றினை டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்று சனிக்கிழமை காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாசாலையில் நடத்தினர். இலங்கை கடற்படையினர் 57 ஆவது வருடாந்த நிறைவை முன்னிட்டு இம்மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதில் கண், பல் மற்றும் பொது மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டு சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. இம்மருத்துவ முகாமில் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (அ-3-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் கார்களின் பதிவுகள் 75 வீதத்தினால் குறைவடைந்தன

## வாகனத் தீர்வையே காரணம்

(கொழும்பு)

இலங்கையின் மோட்டார் கார் பதிவுகள் கடந்த செப்டெம்பர் மாதத்தில் 75 வீதமாக குறைந்துள்ளன.

அதேவேளை வாகனங்களின் புதிய பதிவுகள் மொத்தத்தில் 45 வீதமாக குறைந்துள்ளன.

புதிய கார்களின் பதிவுகள் 75.4 வீதமாகவும் பயன்படுத்திய கார்களின் பதிவு75.3 வீதமாகவும் குறைந்துள்ளன.

இதன் காரணமாக இலங்கையில் வாகன விற்பனை 56.8 வீதத்தினால் குறைந்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் வாகனங்கள் மீதான தீர்வுகள் அதிகரிக்கப்பட்டமையே இந்த விற்பனை குறைவுக்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# புகையிரத பாதை புனரமைப்பு துரிதம்

ஓமந்தையில் இருந்து மாங்குளம் வரையிலான புகையிரதப் பாதை புனரமைப்பு வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றது. இப்புகையிரத பாதைக்கான மேடை அமைத்து கற்கள் பரவி பல கனரக வாகனங்கள் மூலம் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இப்பாதை புனரமைப்புக்கான தண்டவாளங்கள், கற்கள் மற்றும் பொருட்கள் ஓமந்தையில் இருந்து முகமாலை வரை எடுத்துவரப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. (அ-3-10)

# நவராத்திரி

மங்கள நவராத்திரி
அருள் பொங்கும் நவராத்திரி
மாணவர் எல்லாம் போற்றிப்
பணிந்திடும்
வசந்த நவராத்திரி
கலைவாணியே!
கலைகளுக்கு அதிபதியே!
கலைஞானம் தரும் உமக்கு
பொன்னாளாம் இறுதி மூன்று
நாட்களும்...

*கயேந்திரன் கஜீபன்*
*கிளி/ இந்துக் கல்லூரி*



# பொம்மைவெளி மக்களை டெங்குநோய் தாக்காதா?

## பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி

(யாழ்ப்பாணம்)


யாழ். பொம்மைவெளி கிராம மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி கொட்டும் மழையில் ஓட்டை குடிசைகளில் வாழ்வைத் தொடர வேண்டியுள்ளதாக ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராமம் யாழ். நகரத்திற்கு அண்மையில் காணப்படுகின்ற போது அதிகாரிகளோ அரசியல் வாதிகளோ எம்மைப்பற்றி சிந்திப்பதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

குறித்த கிராமத்தில் 90 வரையான குடும்பங்கள் வாழ்கின்றனர்.

அதிலும் குறிப்பாக இங்கு சிறுவர்களே அதிகமாக காணப்படுகின்றனர். கடந்த 2000 ஆம் ஆண்டு இங்கு குடியேறிய மக்களுக்கு இதுவரையிலும் அனைவருக்கும் சென்றடையக் கூடிய வகையில் உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை.

குறித்த கிராமத்தில் 20 இற்கும் குறைவான குடும்பங்களே கல் வீடுகளில் வசிப்பதோடு ஏனைய 70 வரையான குடும்பங்கள் ஓலைக் குடிசைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.



தற்போது மழைகாலமும் ஆரம்பித்துள்ளதனால் தமது அன்றாட நடவடிக்கைகளில் பெரும் பாதிப்பு ஏற்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இம் மக்கள் குடியிருக்கும் நிலங்கள் வயல் நிலங்களாக காணப்படுவதனால் மழை வெள்ளம் பெருமளவில் தேங்குவதோடு குடிமனைகளைச் சுற்றியும் சில நேரங்களில் குடிமனைகளிற்குள்ளும் புகுந்து விடுகின்றன.

இப்பகுதிக்கு குழாய் மூலமே குடிநீர் வழங்கப்படுகின்ற போதிலும் அவை காலையிலும் மாலையிலுமே வழங்கப்படுகின்றன.

இதனால் தமது குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது.

இங்கு பெரும் சூழல் மாசடைவு காணப்படுவதோடு பார்க்கும் இடமெல்லாம் குப்பைகளும் இரும்புப் பொருட்களும் மழை வெள்ளமுமே காணப்படுகின்றன.

இவற்றுக்கு மத்தியிலேயே அவர்கள் தமது வாழ்வினை தொடர்ந்து வருகின்றனர்.

தமது கைக்குழந்தைகள் கூட இரவு நேரங்களில் நுளம்புக் கடி தாங்காமல் கடுமையாக அழுவதாக அங்குள்ள தாயொருவர் தெரிவித்தார். டெங்கு நோய் நகரில் உள்ளவர்களுக்கு மட்டுமா வரும். இதுபோன்ற கிராமங்களில் வசிப்பவர்களுக்கு வராதா என்று கேள்வி எழுப்பினர்.

யாழ். நகரிற்கு அருகிலுள்ள ஒரு கிராமம் அடிப்படை வசதிகள் இன்றி தவிப்பது இங்கு உள்ளவர்களுக்கு தெரியவில்லையா? என கேள்வி யெழுப்புகின்றனர். (அ-4)

# யார் ஆட்சிக்கு வந்தாலும் அமெ.கொள்கை மாறாது

## இராஜதந்திரி பிளேக் தெரிவிப்பு



ஆட்சி மாற்றம் நிகழ்ந்தாலும்இலங்கை குறித்தான அமெரிக்காவின் கொள்கைகளில் எவ்வித மாற்றங்களும் நிகழாது என்று தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கு பொறுப்பான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளர் மிட்ரோம்னி வெற்றி பெற்று ஆட்சி மாற்றம் நிகழ்ந்தால் அமெரிக்காவின் வெளிவிவ காரக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்படுமா?

குறிப்பாக இலங்கை போன்ற நாடுகள் குறித்தான அமெரிக்காவின் நிலைப்பாட்டில் நெகிழ்வுத் தன்மை ஏற்படுமா என்றும் ஊடகமொன்று கேள்விகளை எழுப்பியிருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் போதே பாரிய மாற்றங்கள் ஏதும் ஏற்படாது. கடந்த காலங்களை எடுத்துப்பார்த்தால் நிர்வாகத்தில் மாற்றங்கள் நிகழ்ந்திருந்தாலும் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை.

எனவே மிட்ரோம்னி ஆட்சிக்கு வந்தாலும் இலங்கை குறித்தான அமெரிக்காவின்கொள்கை அப்படியேதான் இருக்கும்.

யார் ஆட்சிக்கு வந்தாலும் சிறந்ததொரு இராஜதந்திரியாக நான் செயற்படுவேன் என்று தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்கர்களின் உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் குறிப்பிட்டார். (அ-2)

# கிராமசேவகர்கள் மக்களுடன் நல்லுறவைப் பேண வேண்டும்

## முல்லைத்தீவு பொலிஸ்மா அதிபர் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

கிராமசேவகர்கள் நினைத்தால் சமூகத்திலுள்ள அனைத்துப் பிரச்சினைகளினையும் தீர்த்து வைக்க முடியும் என மனிதவுரிமை ஆணையாளரும் முல்லைத்தீவு பொலிஸ்மா அதிபருமான ஆனந்தராசா தெரிவித்தார்.

தற்போது சமூக மட்டத்தில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. குறிப்பாக வடக்கில் அடிப்படைப் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இப்பிரச்சினைகளை கிராமசேவையாளர்கள் ஊடாகவே தீர்த்துக்கொள்ளமுடியும்.

எனினும் மக்கள் தமக்குப்பிரச்சினையுள்ளதாக மனிதவுரிமை ஆணைக்குழுவின் காரியாலயங்களுக்கே வருகின்றனர்.

இதற்குக் கிராமசேவையாளர்களில் ஏதோ ஒரு குறைபாடு இருப்பதனை உணரமுடிகின்றது.

சிறுசிறு பிரச்சினைகளுக்குக்கூட மக்கள் மனிதவுரிமை காரியாலயங்களுக்கு வருகிறார்கள்.

முன்னைய காலங்களில் கிராமசேவகர்கள் மக்களோடு ஒன்றிணைந்து சேவையாற்றினார்கள். அதனால் மக்களும் எமது பிரச்சினைகளை கிராமசேவகர்களிடம் கூறித் தீர்வினைப் பெற்றனர்.

ஆனால், தற்போது மக்களுக்கு தங்களுடைய கிராமசேவகர் யார் என்றுகூட தெரியாதுள்ளனர்.

தற்போது கிராமசேவகர்கள் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு உள்ளனர்.

இதனால்தான் கிராமமட்டங்களில் உதவிகள் பகிர்ந்தளிக்கப்படாமை உட்பட பல பிரச்சினைகள் எழுகின்றன என்றார். (அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயமான முறையில் ஆசிரியர் இடமாற்றம் இடம்பெற வேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் தெரிவிப்பு

அர்த்தமற்ற ஆசிரியர் இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டு அனைவருக்கும் சமநீதியுடைய இடமாற்றம் வழங்கப்படவேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் இடமாற்றம் தற்போது வடக்கில் மிகப்பெரிய பிரச்சினையாக எழுந்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியாவடக்கு, துணுக்காய் போன்ற பிரதேசங்களிலுள்ள ஆசிரியர்களில் பெரும்பாலானோருக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை.

பாரபட்சம் காட்டப்பட்டு இடமாற்றம் வழங்கப்பட்டு வருகின்றது. இது கண்டிக்கத்தக்கதாகும்.

வலயக்கல்விப்பணிப்பாளர் உட்பட யாருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டாலும் அது நியாயமான முறையில் வழங்கப்படல் வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் ஒவ்வொரு பிரதேசங்களாக இடமாற்றம் வழங்கப்படாது அனைத்து பிரதேசங்களுக்கும் ஒரே முறையில் இடமாற்றம் வழங்கப்படல் வேண்டும்.

இது தொடர்பில் தம்முடைய சங்கம் வடமாகாண ஆளுநருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளது.

வடக்கில்இடம்பெறும் இடமாற்றங்களில் பெரும்பாலானவை முறைகேடுகளாகவும் தண்டனைக்குரிய இடமாற்றங்களாகவுமே வழங்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-4)

# ஐ.தே.கட்சிக்கு சிங்கள மக்களின் ஆதரவு இல்லை

## ரங்கே பண்டார எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

சிங்கள பௌத்த மக்களின் வாக்கு வங்கி ஐ.தே.கவுக்கு இல்லாமல் போய் விட்டது. அந்த வாக்குகளை பெற்றுக் கொள்ளாது ஐ.தே.கவினர் ஒருபோதும் ஆட்சியமைக்க முடியாது என்று பாலித ரங்கே பண்டார எம்.பி. தெரிவித்தார்.

ஹைட்பார்க்கில் நடைபெற்ற ஐக்கிய பிக்கு முன்னணியின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பாலித ரங்கே பண்டார எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

ரணிலின் அதிகாரத்தை பாதுகாப்பதற்காக அல்ல. நாட்டை பாதுகாக்கவே மகாசங்கத்தினரோடு அணிதிரண்டுள்ளோமென்றும் அவர் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சிறிமாவோ பண்டாரநாயக்க எல்லோரும் சிங்கள பௌத்தர்களின் வாக்கு வங்கிகளினாலேயே வெற்றி பெற்றனர். இதனை ரணில் விக்ரமசிங்க புரிந்த கொள்ளவில்லை. ஐ.தே. கட்சிக்கு சிங்கள பௌத்த மக்களின் ஆதரவு கிடையாது. அதனைப் பெற்றுக் கொள்வதற்கான திட்டங்களும் கட்சியிடம் கிடையாது.

எனவேதான் நாம் மகாசங்கத்தினரோடு இணைந்துள்ளோம். எதிர்காலத்தில் மேலும் பலர் உண்மைகளை புரிந்து கொண்டு எம்மோடு இணைவார்கள் என்றார். (அ-2)

# ஐ.தே.கட்சி தொடர்பிலும் நீதிமன்றில் முறையிடுவோம்

## நீக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆதங்கம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து தம்மை நீக்கிய தீர்மானத்தை எதிர்த்து நீதிமன்றத்திற்கு செல்லப் போவதாக பாலித ரங்கே பண்டார, பாலித தேவாரப்பெரும, அசோக அபேசிங்க ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உள்ளிட்ட செயற்குழுவுக்கு எதிராக தனித்தனியாக தாம் வழக்குகளை தாக்கல் செய்யவுள்ளதாக அசோக அபே சிங்க தெரிவித்துள்ளார். அல்லது மூவரும் இணைந்து ஒரு வழக்கை தாக்கல் செய்வோம் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஹைட்பார்க் மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தாம் கலந்து கொள்வது குறித்து முன்கூட்டியே கட்சிக்கு அறிவித்திருந்ததாகவும் தம்மை கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கிய போதிலும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கும் அதிகாரம் செயற்குழுவிற்கு இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

கட்சி இப்படியான தீர்மானத்தை எடுக்கும் என தாம் எண்ணியிருந்ததாக தெரிவித்துள்ள அபேசிங்க ஏற்கனவே கட்சியை விட்டு 61 உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு சென்றதாகவும் அவர்களின்பதவிகளைபறிக்க கட்சிக்கு முடியாது போனது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.(அ-2)

# பாடசாலை மாணவ தலைவர்களுக்கு கராத்தே

## எதிர்வரும் மாதமளவில் ஆரம்பம்?


இலங்கையின் பாடசாலை மாணவத் தலைவர், தலைவிகளுக்கு கராத்தே, ஜூடோ தற்காப்பு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக பாடசாலை மாணவப் படையணியின் பிரதம அதிகாரி கேணல் யூ.கே.அபேரட்ன தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்து பாடசாலைகளையும் சேர்ந்த மாணவத் தலைவர்களுக்கு இவ்வாறு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பாடசாலை மாணவத் தலைவர்களின் ஆளுமை மற்றும் தலைமைத்துவத்தை விருத்தி செய்யும் நோக்கில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாதமளவில் பாடசாலை மாணவத் தலைவர்களுக்கு இந்த பயிற்சி வழங்கப்படவுள்ளது. ரன்டெம்பே பிரதேசத்தில் அமைந்துள்ள மாணவப் படையணி பயிற்சி முகாமில் பத்து நாட்களுக்கு இந்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

முதலில் 250 பாடசாலைமாணவ, மாணவியருக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது. கல்வி அமைச்சின் செயலாளர், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.(அ-2)



வடமாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் செயற்றிட்டங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் பணிமனையில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட வடமாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் எந்திரி க.சிவபாதம் உள்ளிட்ட அதிகாரிகள் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# இலவச யோகா தியான வகுப்பு

(யாழ்ப்பாணம்)

இலவச யோகா தியான வகுப்புக்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு உரும்பிராய் சந்தி மருதனார்மடம் வீதியிலமைந்துள்ள இராமகிருஷ்ண மிசன் நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சகல வயதுப்பிரிவு ஆண்களுக்கு மட்டுமான இவ்வகுப்புக்கள் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் காலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணிவரை நடைபெறவுள்ளன.

இராமகிருஷ்ண மிசன் துறவிகளின் ஆலோசனை வழிகாட்டலுக்கமைய நடைபெறும் இவ்குப்புக்ககளில் கலந்து கொள்பவர்களுக்கு துறவிகளின் சாதுதரிசனமும் நல்லாசிகளும் கிடைக்கப்பெறுவதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சி.சிவயோகன் கேட்டுள்ளார். (அ-9)

# உ/த மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவ சங்கங்களினால் நடத்தப்படும் இணைந்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 10 ஆவது வழங்கலுக்குரிய விண்ணப்பங்கள் யாழ்.மத்திய கல்லூரியில் தற்போது தரம் 12 இல் கல்வி பயிலும் மாணவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

இதற்குரிய விண்ணப்பபடிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை தலைவர் மனோ தேவசகாயம் கேட்டுள்ளார். (அ-9)

# மின்சார சபையினரின் இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் 43 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இலங்கை மின்சார சபையின் வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டு சங்கத்தினர் இரத்ததான நிகழ்வினை நடத்தவுள்ளனர்.

இவ் இரத்ததான நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை யாழ்ப்பாணம் இல. 500, காங்கேசன்துறை வீதி, இலங்கை மின்சாரசபை பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை மின்சாரசபையின் வடமாகாண உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பங்குபற்றவுள்ளனரென இலங்கை மின்சார சபையின் வடமாகாண செயலாளர் அறிவித்துள்ளார். (அ-9)

# கிராமிய வங்கி திறப்புவிழா

(கரவெட்டி)

நெல்லியடி கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் கிராமிய வங்கி திறப்பு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு கூட்டுறவுச்சங்க தலைவர் செ.செல்வராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-24)

# முதியோர் தின விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையினரால் முதியோர் தினவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நகர சபைத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 70 வயதுக்கு மேற்பட்ட இளைப்பாறிய நகரசபை உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்படவுள்ளதாக செயலாளர் சு.புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (அ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிக்கான நோபல் பரிசை பகிர்வது எவ்வாறு?

## ஐரோ. கூட்டமைப்புக்குள் சிக்கல்

(கொழும்பு)

இரண்டாம் உலகப்போரின் போது சண்டை இட்ட நாடுகள் தற்போது ஒன்றிணைந்து அமைதியாக இருப்பதை பாரர்ட்டி, 27 நாடுகள் கொண்ட ஐரோப்பிய யூனியனுக்கு இந்த அமைதி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைதிக்கான நோபல் பரிசை, ஐரோப்பிய யூனியனில் உள்ள நாடுகளின் தலைவர்கள் ஒன்று சேர்ந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என வற்புறுத்தப்பட்டுள்ளது.

அமைதிக்கான நோபல் பரிசு இந்த ஆண்டு ஐரோப்பியக்கூட்டமைப்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் 44நாடுகள் உள்ளன. ஐரோப்பிய யூனியனில் இல்லாத நாடுகள், இந்த விருதுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

ஐரோப்பாவில் உள்ள பெரும்பாலான நாடுகள் இன்று பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கின்றன. நோபல் பரிசை நேரில் யார் சென்று பெறுவது, பரிசு பணத்தை பிரித்துக்கொள்வது உள்ளிட்டவற்றில் சிக்கல் நிலவுகின்றது.

ஐரோப்பிய யூனியனில் தலைவர் வான் ராம்பி நேரில் சென்று இந்தப் பரிசைப் பெற்றுக்கொள்வார் என பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் ஜனாதிபதிகள் தெரிவித்திருந்தனர். (அ-2)

# சிறுநீரக நோய் தொடர்பில் ஆராய குழு அமைக்கப்பட்டது

சிறுநீரக நோய் வேகமாக பரவி வரும் நிலையில் இரசாயனப் பசளை மற்றும் விவசாய இரசாயன பசளை பயன்பாடுகளால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்ந்து அதனை தீர்க்க ஜனாதிபதி தலைமையில் அமைச்சர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

இதற்கான தேசிய மட்டத்தில் திட்டமொன்றை முன்னெடுத்து சிறுநீரக நோயை முற்றாக ஒழிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரம் மற்றும் பொலனறுவை பகுதிகளில் இருந்தே சிறுநீரக கோளாறு தொடர்பில் அறிவிக்கப்பட்டது. தற்பொழுது அம்பாறை, பதுளை, அம்பாந்தோட்டை, குருநாகல் ஆகிய பகுதிகளில் இருந்தும் சிறுநீரக நோயாளர்கள் குறித்து அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. பல்வேறு மட்டங்களில் இது குறித்து ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. உலக சுகாதார ஸ்தாபனமும் எமது வேண்டுகோளுக்கு ஆய்வு நடத்தியது. நீரினால் இந்த பிரச்சினை ஏற்படவில்லை என்று கூறியுள்ள உலக சுகாதார ஸ்தாபனம் சில சிபார்சுகளை வழங்கியுள்ளது. அவற்றை முன்னெடுத்து வருகின்றோம்.

இரசாயன உரம், விவசாய இரசாயன உரம் என்பவற்றினாலும் இத்தகைய உரங்கள் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களினாலும் சிறுநீரக நோய் ஏற்படுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பசளை பயன்பாட்டை குறைக்கவும் இது குறித்து மேலும் ஆய்வுகள் நடத்தவும் உள்ளோம்.

ஜனாதிபதி தலைமையிலான குழு கூடி இது தொடர்பில் முக்கிய தீர்மானங்களை எடுக்கவுள்ளது என்றார். (அ-2)

# ஆளும் கட்சிக்குள் சூழ்ச்சிக்காரர்கள்

## பிரதி அமைச்சர் ஜயரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

ஆளும் கட்சிக்குள் சூழ்ச்சிக்காரர்கள் இருக்கிறார்கள் என வர்த்தக விவகார அமைச்சர் ஜயரத்ன ஹேரத் தெரிவித்துள்ளார்.

குருநாகல் போயங்கன பாடசாலையின் 100 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

அந்தப் பக்கமிருந்து இந்தப் பக்கத்திற்கு தாவியவர்களே ஊழல் மோசடிகளில் ஈடுபடுகின்றனர்.

ஆளும் கட்சியில் இணைந்துகொண்டு இரண்டரை ஆண்டுகளுக்குள் கோடிகளை சம்பாதித்துள்ளனர்.


ஆளும் கட்சியில் இணைந்து கொள்வதற்கு முன்னர் பாதையில் செல்ல முடியாதிருந்தவர்கள் தற்போது கோடீஸ்வரர்களாக உருவாகியுள்ளனர்.

சர்வதேச ரீதியாக இலங்கை எதிர் நோக்கி வரும் நெருக்கடி நிலைமைகளின் பின்னணியில் கட்சி தாவி பதவிகளை பெற்றுக் கொண்ட சில அரசியல்வாதிகள் பொறுப்பு சொல்ல வேண்டும் என்றார். (அ-2)



நீண்டகால தேவையை கருத்தில் கொண்டு சமுத்திர ஆய்வு மற்றும் பரி சோதனை ஆகியவற்றை மேற்கொள்வதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்ட இலங்கைக்கே உரித்தான சமுத்ரிகா கப்பல் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தில் செலுத்தப்பட்டது. இதன் மாதிரி வடிவமைப்பு ஜனாதிபதியிடம் வழங்கப்படுவதை படத்தில் காணலாம்.

# நானும் வைகோவும் சேரமுடியாமைக்கு துரோகிகளே காரணம் - திருமாவளவன்



பேசினால் உள்ளே வைத்து விடுவார்கள் என்று வைகோ முதல் சீமான் வரை எல்லோருமே ஜெயலலிதாவுக்குப் பயப்படுகிறார்கள். இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கும் ஜெயலலிதாவுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. தமிழ் ஈழத்தின் முதல் எதிரியே ஜெயலலிதாதான் என விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தொல். திருமாவளவன் தமிழகச் சஞ்சிகையான ஜூனியர் இதழுக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் இலங்கை தொடர்பாக அவர் பேசியவை வருமாறு,

என்னை ஜெயலலிதா அழைத்து நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டா கலைஞருடன் சேர்ந்தேன் ? ஜெயலலிதா எங்களை வேண்டாம் என்று சொன்னதால்தான் கலைஞருடன் போனேன்.

இப்போதும் சரி, எப்போதும் சரி தமிழீழ விடயத்தில் கலைஞர் எந்த முடிவு எடுத்தாலும் அறிக்கை விட்டாலும் அதில் என் பங்கு கண்டிப்பாக இருக்கும். கலைஞரைச் சுற்றிலும் உள்ளவர்கள் அவரை செயற்பட விடாமல் வைத்திருக்கிறார்கள். ஈழத்தமிழர்களுக்காக ஏதாவது செய்ய வேண்டுமே என செய்கிறார்.

ஈழத்தமிழர் பிரச்சினையை பயன்படுத்தி தி.மு.க வுடன் சேரக் கூடாது என்றால் சாதி ஒழிப்பு பிரச்சினையில் நாங்கள் எந்த கட்சியுடனும் சேரவே முடியாதே.

ஈழத்தமிழர்கள் விடயத்தில் கலைஞரை மட்டுமே குறிவைத்து தாக்க வேண்டாம். பேசினால் உள்ளே வைத்து விடுவார்கள் என்று வைகோ முதல் சீமான் வரை எல்லோருமே ஜெயலலிதாவுக்குப் பயப்படுகிறார்கள்.

ராஜபக்ஷக்கும் ஜெயலலிதாவுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. தமிழ் ஈழத்தின் முதல் எதிரியே ஜெயலலிதாதான்.

ஒருமித்த கருத்துடையவர்கள் ஒன்றாக நிற்க வேண்டும் என்பதுதான் நான் வைத்த கோரிக்கை. ஈழம் முதல் காவேரி வரை ஒரே கருத்தை வலியுறுத்தும் நானும் வைகோவும் இன் னும் கைகோர்க்க முடியவில்லை. துரோகிகள்தான் காரணம் என்கிறார் வைகோ. அந்த துரோகிகள் யார் யார் என்பதை அடையாளம் காண்பதுதான்தான் பிரச்சினை என்றார். (அ-2)

# ஊடகவியலாளர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு நவம்பர் 3 இல்

(கொழும்பு)

மஹிந்த சிந்தனை தொலைநோக்கு திட்டத்தின் கீழ் ஊடகவியலாளர்களுக்கு வாகனக் கடன் மற்றும் மடிக்கணனி வழங்கும் வைபவம் நவம்பர் 3ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர் வாகனக் கடன் மற்றும் மடிக்கணனி வழங்க தகுதியான ஊடகவியலாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஜனாதிபதி தலைமையில் வாகனகடன் மற்றும் மடிக்கணனி என்பன வழங்கப்படும் என்றார். (அ-2)

# பொன்சேகாவை அரசியல் களத்தில் இறக்கியவர்கள் இன்று பாராமுகம்

## அமைச்சர் தயாஸ்ரித தெரிவிப்பு

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்ட எதிர்வுகூறல் இன்று மெய்ப்பட்டுள்ளதாக அமைச்சர் தயாஸ்ரித திஸேரா தெரிவித்துள்ளார்.

புதிய எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு தொடர்பில் செய்தியாளர்களை தெளிவுபடுத்திய போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவை அரசியலில் களமிறக்கியவர்கள் இன்று அவரைக் கைவிட்டுள்ளனர்.

இறுதியில் சரத் பொன்சேகாவுக்கு மனைவியும் பிள்ளைகளும் மட்டுமே எஞ்சுவார்கள் என ஜனாதிபதி கடந்த காலங்களில் எதிர்வு கூறியிருந்தார்.

நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளை தவிர ஏனைய மூன்றாம் சக்திகளுக்கு கடந்த காலங்களில் நேர்ந்த நிலைமையை மக்கள் நன்கு அறிவார்கள்.

கிளர்ச்சி மூலம் அரசாட்சியை கைப்பற்ற முயற்சித்த ரோஹண விஜேவீர இறுதியில் உயிரிழந்தார்.

இந்த காலத்திற்கு பொருத்தமான அரசியல் கூட்டமைப்பை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொண்டிருக்கிறது என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மெழுகு மூக்கு

பல்லவ நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். கலை உள்ளம் கொண்டவனாக அவன் விளங்கினான்.

கலை வேலைப்பாடுகள் நிறைந்த வாள், கேடயங்களைச் சேகரித்து வந்தான்.

இதனால் பலர் கலை நுணுக்கத்தோடு வாள்களைச் செய்தனர். அவற்றை அரசனிடம் கொண்டு வந்தனர்.

அவற்றை மதிப்பிடுவதற்காக வேலையாள் ஒருவனை நியமித்தான் அரசன்.

அந்த வேலையாளோ கையூட்டு வாங்குவதில் திறமைசாலியாக இருந்தான்.

தனக்குப் பணம் தந்தவரின் வாளை உயர்வாகப் பேசினான். அதிக விலை கொடுத்து அதை அரசன் வாங்கும்படி செய்தான்.

பணம் தராதவர்களின் வாளில் குறைகண்டுபிடித்து வேண்டாம் என்றான்.

அவன் வாளைத் தேர்ந்தெடுக்கும் முறை வேடிக்கையாக இருந்தது.

வாளின் அருகே தன் மூக்கைத் தேய்த்து முகர்ந்து பார்ப்பான். அப்படிப் பலமுறை செய்வான். அதை வைத்துத் தகுதியானது, தகுதியற்றது என்று சொல்வான்.

அவன் சூழ்ச்சியை அரசன் அறியவில்லை. அவன் சொல்வதை அப்படியே நம்பினான்.

இளைஞன் ஒருவன் அழகான வாள் ஒன்று செய்தான். அரசர் வாங்குவார் என்று நம்பிக்கையில் அரசவைக்கு எடுத்து வந்தான்.

வேலையாளுக்கு அவன் கையூட்டு ஏதும் தரவில்லை.

வேலையாளை அழைத்த அரசன் இந்த வாள் நன்றாக உள்ளதே. இதை வாங்கலாமா? பார்த்துச்சொல் என்று கேட்டான்.

வாளை வாங்கிய அவன் அதில் தன் மூக்கை வைத்துத் தேய்த்தான். அப்படியே பல முறை செய்தான். அதை நன்றாக முகர்ந்து பார்ப்பது போல நடித்தான்.

அரசே இந்த வாள் பயனற்றது. இதை வாங்கவேண்டாம் என்றான். இதைக் கேட்ட அரசனும் இந்த வாள் வேண்டாம் என்றான்.

வாளை வாங்கவிடாமல் இந்த வேலையாள் தடுத்துவிட்டானே. இவனைப் பழி வாங்க வேண்டும். என்ன செய்வது? என்று சிந்தித்தான் அந்த இளைஞன்.

நல்லவழி ஒன்று அவனுக்குத் தோன்றியது.

அந்த வாளை மேலும் மெருகேற்றி அழகுபடுத்தினான். அதன்மேல் மிளகாய்த்தூளைத் தூவினான். அதை உறைக்குள் வைத்தான்.

அரசவைக்கு வந்த அரசன், அரசே! இந்தவாள் இப்பொழுது உங்களுக்கு கண்டிப்பாகப் பிடிக்கும் என்றான்.

வழக்கம்போல வேலையாளை அழைத்தான் அரசன்.



வேலையாள் உறைக்குள் இருந்து வாளை வெளியே எடுத்தான். அதன் கூர்மைப் பகுதியில் மூக்கை வைத்துத் தேய்த்தான்.

மிளகாய்ப்பொடியின் நெடி அவன் மூக்கில் ஏறியது. அவனுக்குத் தும்மல் வந்தது. அதை அடக்க முயன்றான். அவனால் முடியவில்லை. பெரிதாகத் தும்மல் போட்டான்.

அதனால் அவன் தலை வேகமாக அசைந்தது. வாளின் முனை அவன் மூக்கை முழுமையாக வெட்டி வீழ்த்தியது.

மூக்கு இருந்த இடத்திலிருந்து குருதி வழிந்தது. மூக்கின்றி மூளியாக நின்றான் அவன்.

அவன் இருந்த நிலையைப் பார்த்து எல்லோரும் சிரித்தார்கள். மூளியான அவன் அங்கிருக்க வெட்கப்பட்டு ஓட்டம் பிடித்தான்.

அவனுக்கு வாளை மதிப்பிடத் தெரியாது. தன்னை ஏமாற்றியிருக்கிறான். பலரிடம் கையூட்டு வாங்கி[illegible]ன் என்ற உண்மை அரசனுக்குத் தெரிந்தது.

பக்கத்து நாட்டை அடைந்தான் அந்த வேலையாள். புகழ்பெற்ற மருத்துவர் ஒருவரைச் சந்தித்தான்.

என் அவலட்சணத்தை எப்படியாவது நீக்குங்கள் எவ்வளவு பணம் கேட்டாலும் தருகிறேன் என்றான்.

மெழுகால் மூக்கு ஒன்று செய்கிறேன். உன் மூக்கு இருந்த இடத்தில் அதை ஒட்டி விடுகிறேன் உண்மையான மூக்கு போலவே அது இருக்கும் யாருக்கும் வேறுபாடு தெரியாது என்றார் அவர். அப்படியே செய்யுங்கள் என்றான் அவன்.

அவரும் மெழுகு மூக்கு செய்து அவன் முகத்தில் ஒட்டினார். இயல்பான மூக்கு போலவே அது இருந்தது.

நாடு திரும்பிய அவன் அரசனை சந்தித்தான். வியப்பு அடைந்த அரசன் எப்படி உன் மூக்கு சரி ஆயிற்று என்று கேட்டான்.

கடவுள் அருளால் என் மூக்கு பழையபடி ஆனது. இனி நான் நேர்மையாக நடந்து கொள்வேன். எனக்கு ஏதேனும் வேலை கொடுங்கள் என்று கெஞ்சினான்.

அரண்மனையில் தச்சர் வேலைதான் காலியாக உள்ளது என்றான் அரசன்.

எனக்கு தச்சுவேலை நன்றாகத் தெரியும். அந்த வேலையை ஏற்றுக் கொள்கிறேன் என்றான் அவன்.

தச்சனான அவன் அரசனின் நம்பிக்கைக்குரியவனாகவும் ஆனான். எந்தப்பொருள் வாங்குவதாக இருந்தாலும் அவனைக் கேட்டே வாங்கினான் அரசன்.

தொடக்கத்தில் நேர்மையாக இருந்தான் அவன். பின்பு வழக்கம்போலவே கையூட்டு வாங்கத் தொடங்கினான்.

அரசவைக்கு இளைஞன் ஒருவன் வந்தான். மரத்தால் செய்யப்பட்ட குதிரையை அவன் தூக்கி வந்தான்.

அந்தக்குதிரை மிக அழகாக இருந்தது. வேலையாளைப் பார்த்து அரசன் இந்தக் குதிரையை வாங்கலாமா? சொல் என்று கேட்டான்.

தனக்குப் பணம் தரவில்லை. குதிரையை வாங்கவிடக்கூடாது என்று நினைத்தான் அவன்.

அந்த மரக்குதிரையைச் சுற்றிச் சுற்றிவந்து பார்த்தான். உதட்டைப் பிதுக்கினான்.

அரசே அது குதிரை போல இல்லையே. கழுதை போல் உள்ளதே. இது வேண்டாம் என்றான். ஏமாற்றத்துடன் இளைஞன் அந்தக்குதிரையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டான்.

இவன் சூழ்ச்சியால் அரசர் இதை வாங்கவில்லை. இதை நன்கு பார்த்தால் அரசர் வாங்கி விடுவார். அதற்கு என்ன செய்வது என்று சிந்தித்தான்.

அரசர் வரும் வீதியில் அந்தக் குதிரையை வைத்தான். அதற்கு வண்ணம் தீட்டிக் கொண்டிருந்தான்.

அங்கு வந்த அரசன் குதிரையைப்பார்த்தான். அதன் அழகில் மயங்கினான்.

இந்தக்குதிரை மிக அழகாக உள்ளதே. இதை ஏன் வேலையாள் வேண்டாம் என்றான். அவனை இங்கே அழைத்து வாருங்கள் என்று கட்டளையிட்டான்.

சிறிது நேரத்தில் அங்கு ஓடி வந்தான் வேலையாள். ஆபத்தில் சிக்கிக்கொண்டோமே. எப்படித் தப்பிப்பது என்று சிந்தித்தான்.

இந்தக்குதிரையை நீண்ட நேரம் கவனிப்பதுபோல் நடிப்போம். பின்பு ஏதேனும் குறை சொல்வோம். அரசரும் நம்புவார் என்று நினைத்தான். அப்பொழுது நல்லவெயில் அடித்துக்கொண்டிருந்தது.

அந்தக்குதிரையின் முன்னால் நின்று கவனித்தான் அவன். பின்னால் நின்று கவனித்தான். தொட்டுப்பார்த்தான். ஏதோ சிந்திப்பது போல நடித்தான். இப்படியே காலத்தை ஓட்டிக் கொண்டேயிருந்தான். நீண்ட நேரம் ஆயிற்று.

ஏதோ முடிவுக்கு வந்தவன் போல உதட்டைப் பிதுக்கினான். அரசே என்று வாயைத் திறந்தான்.

வெயிலில் நீண்டநேரம் இருந்ததால் அவன் மூக்கை ஒட்டியிருந்த மெழுகு உருகியது. இதை அவன் அறியவில்லை. வாயைத் திறந்தான்.

மூக்கு அப்படியே கழன்று கீழே விழுந்தது. பழையபடி மூளியாக நின்றான் அவன். இதைப் பார்த்து அரசனும் அங்கிருந்த எல்லோரும் சிரித்தார்கள்.

அவமானம் அடைந்த அவன் அங்கிருந்து ஓட்டம் பிடித்தான். அதன்பின்பு அவனை யாரும் பார்க்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

77

### இரண்டாம் பராக்கிரமபாகு

இரண்டாம் பராக்கிரமபாகு மிகுந்த அறிவுடையவன். கலிகால சாகித்ய பண்டிதனாக விளங்கினான். (கி.பி.1236-கி.பி1272) அவன் ஆட்சி




யாப்பகுவாக் கோட்டை கட்டப்பட்ட சிகிரியாவை ஒத்த பாறை

யாளனாகியதும் புவனேகபாகுவை உபராஜாவாக நியமித்ததுடன் தன் அரசில் பாதிப் பிரதேசத்தை நிர்வகிக்குமாறு பணித்தான். "இலங்கை முழுவதையும் ஒரே இராச்சியமாக்கி என தாக்குவேன். அதற்கு முதல் புனித தாதுக்களை இங்கு வரவழைத்து விழாவெடுத்து சங்கத்தாரை மகிழ் விப்பேன். அதன் பின்னர் தமிழர்களை வெற்றி கொள்வேன்" என முடிவு செய்தான். கொத்மலையிலிருந்த புனித தந்ததாதையும் ஜயக்கலத்தையும் தம்பதேனியாவுக்கு எடுப்பித்து தன் அரண்மனைக்கு அருகில் கோயில் ஒன்றினை அமைத்து அதில் வழிபாட்டுக்கு வைப்பித்தான். "சோழர்களை இந்த நாட்டிலிருந்து துரத்தியடித்துவிட்டு ஆட்சியை நடாத்திய விஜயபாகு நாட்டையும் சமயத்தையும் பாதுகாத்தார். இன்று மாகனிடமும் ஜயபாகுவிட மும் புலத்திநகர் இராச்சியம் உட்பட்டுள்ளது அவர்களிடமிருந்து நான் விடுப்பேன்" என்று சபதமெடுத்தான்.

ஆட்சி பொலநறுவையில் கி.பி1242 அல்லது 1256 வரை தொடர்ந்து இருந்துள்ளது. சிங்கள சிற்றரசர்களின் ஆட்சி மலையதேசத்திலும் உருகுணையிலும் தம்பதேனியாவிலும் நிலவிய காலகட்டத்தில் பொலநறுவை அடங்கலாக இராஜரட்டை முழுவதும் மாகனின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. மாகனின் ஆட்சி இறுதிக்காலத்தில் சாவகனான சந்திரபானுவின் இரு படையெடுப்புகள், தமிழகத்திலிருந்து வந்த நான்கு பாண்டியர் படையெடுப்புகள் என்பனவற்றுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது.

### சந்திரபானு

பராக்கிரமபாகுவின் (இரண்டாம்) பதினோராவது ஆண்டு ஆட்சி நிறைவில், மலாயா நாட்டைச் சேர்ந்த சந்திரபானு என்ற இளவரசன் இலங்கை மீது பெரும் படையுடன் வந்திறங்கினான். "நாங்களும் பௌத்தர்கள்" என அறிவித்தான். சந்திரபானுவின் வீரர்கள் விஷ அம்புகளைப் பாவித்து சிங்கள வீரர்களைத் தாக்கினர். இலங்கை நாட்டையே துவம்சம் செய்வதுபோல இயங்கினர். குளங்கள் அவர்களால் உடைக்கப்பட்டதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கிராமங்களைத் தீயிட்டுக் கொளுத்தினர். அதனைக் கேள்விப்பட்ட பராக்கிரமபாகு, தன் மருமகன் வீரபாகுவைப் பெரும் சைனியத்துடன் சந்திரபானுவை அடக்குமாறு அனுப்பி வைத்தான். வீரனும் கொடூரமானவனுமான வீரபாகு, சந்திரனை ராகு பிடிப்பது போல சந்திரபானுவின் படைகளோடு போரிட்டான். இறுதியில் சந்திரபானு வடக்கே உத்திரதேசத் துக்கு எஞ்சிய படை வீரர்களோடு தப்பி ஓடினான்.



யாப்பகுவாக் கோட்டை நுழைவாயில்

களையும் அமைத்தான். அவனது தம்பியான புவனேகபாகுவும் பல சமயத் தொண்டுகளைப் புரிந்தான். அதன்பின்னர் கண்டி ஸ்ரீவட்டானவில் மஹாவிகாரையை கட்டுவித்தான். அத்துடன் போதி, சேத்தியம், சீலாமனை என்பனவும் அமைக்கப்பட்டன. தம்பதேனியாவிலிருந்த கண்டி வரையிலான வீதி அலங்கரிக்கப்பட்டது.

மணல்பரவி, வழியெங்கும் வாழைகள் நாட்டி, தோரணங்கள் கட்டி, பல்வகை மலர்களால் அலங்கரிக்கப்பட்டது. யானைகள், நடனக்காரர், பிரதானிகள் சூழ தம்பதேனியாவிலிருந்து புனித தாதும் ஜயக்கலமும் ஊர்வலமாக மஹாவிகாரைக்கு எடுத்து வரப்பட்டன. ஏழு நாட்கள் பெருவிழா கொண்டாடப்பட்டது.

இரண்டாம் பராக்கிரமபாகுவுக்கு தனது ஐந்து பிள்ளைகளான விஜயபாகு, புவனேகபாகு, திலோகமல்லன், பராக்கிரமபாகு, ஜயபாகு ஆகியோரையும் சகோதரி மகனான வீரபாகுவையும் தக்கவாறு பராமரித்தான். "நீங்கள் இந்த இராச்சியத்தை உங்களுக்குள் பிரித்து ஆளலாம். ஆனால், எதிரிகள் உங்கள் ஒற்றுமையைக் கண்டு அஞ்சும்படி இருக்க வேண்டும்" என்று வலியுறுத்தி வந்தான். எனினும் மூத்தமகன் 4 ஆம் விஜயபாகுவை தன் பின்னர் இராச்சியத்தின் ஆட்சியாளனாக அடையாளப்படுத்தி வைத்தான்.



கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

நெருங்கிய நண்பனாகவும் நம்பிக்கைக்குரிய அதிகாரியாகவும் விஜயபாகு நியமித்துக் கொண்டான். புத்த தந்ததாதுவுக்கு அலங்காரமான சேத்தியம் ஒன்றினை அமைப்பித்தான். தன் சகோதரர்களான பராக்கிரமபாகுவையும் ஜயபாகுவையும் அழைத்து அரண்மனையில் தந்தைக்கு அருகிலேயே எப்போதும்கூட இருக்கச் செய்தான். தன் இளைய சகோதரனான திலோகமல்லனை சேனாதிபதியாக நியமித்தான். தான் தன் வதிவிடத்தை மஹாவத்தாலை எனுமிடத்துக்கு மாற்றிக் கொண்டான். அங்கிருந்து தெற்கிலிருந்து வரும் அபாயங்களைத் தடுப்பது எளிதெனக் கருதினான். வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் வரும் எதிரிகளை முறியடிப்பதற்காகத் தன் சகோதரன் புவனேகபாகுவைப் பெரும் சேனையுடன் சுந்தரபர்வதத்தில் (யாப்பகுவை) தங்க வைத்தான்.

இவ்வளவு ஆயத்தங்களும் கலிங்கத்து மாகனை வெற்றி கொள்வதற்கு போதாதென உணர்ந்த பராக்கிரமபாகுவும் விஜயபாகுவும் பாண்டிய மன்னர்களிடம் படையுதவி கோரினர். "2 ஆம் பராக்கிரமபாகு ஈற்றில் தனது அமைச்சனான தேவபதிராஜா என்பவனை பாண்டியரிடம் தூது அனுப்பினார். பாண்டியரின் படை உதவியைக் கோரினார். அச்சமயம் பாண்டி நாட்டில் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன், சடையவர்மன் வீரபாண்டியன், 2ஆம் சடையவர்மன் வீரபாண்டியன் ஆகிய பலமுள்ள மூன்று சகோதரர்கள் ஆட்சி செய்தனர்" அவர்கள் இலங்கை மன்னனின் கோரிக்கைக்கு ஒப்புக் கொண்டு இலங்கைக்குப் படை அனுப்பி வைத்தனர்.

# கலிங்கத்து மாகன்

தன்னாட்சிக்காலத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களை மன்னித்துத் தண்டத்துடன் விடுதலை செய்தான். தன் பகைவர்களையும் மன்னித்து விட்டான். தமிழ்படை வீரர்களை எதிர்த்து அழிப்பதற்கான படை திரட்டலைச் செய்தான். பலசாலிகளான சிங்கள இளைஞர்களைத் தன் படையில் சேர்த்துக் கொண்டான்.

ஆனால், கலிங்கத்துமாகனின் சந்திரபானுவுடனான யுத்தத்தில் கலிங்கத்து மாகனும் பங்குகொண்டிருக்க வேண்டும்.


சந்திரபானுவின் படைகளைப் புறங்கண்ட பராக்கிரமபாகு அதன் பின்னர் சங்கத்துக்குப் பல தொண்டுகளாற்றினான். தம்பாவிலிருந்த தர்மகீர்த்தி தேரரை இலங்கைக்கு வரவழைத்து சமய நெறிகளைச் சீர்படுத்தினான். பல சேத்தியங்களையும் பிக்குகளுக்கான மனை



தம்பதேனியாவில் கிடைத்த 2 ஆம் பராக்கிரமபாகு காலத்து நாணயங்கள்

அதன் பின்னர் விஜயபாகுவை தன் அருகிலேயே ஆட்சியின் போது அமர்த்திக் கொண்டான்.

இராச்சியத்தின் நிர்வாகத்தில் 4 ஆம் விஜயபாகு பங்குகொள்ளத் தொடங்கினான். பொலநறுவையைக் கைப்பற்றிக் கலிங்கத்துமாகனை இந்த மண்ணிலிருந்து துரத்தியடிப்பது அவன் எண்ணமாக விருந்தது. அதனையே பராக்கிரமபாகுவும் மருமகன் வீரபாகுவும் விரும்பினர். மூவரும் அதற்கான திட்டத்தை வகுத்தனர். முதற் கட்டமாக பராக்கிரம பாகுவின் சகோதரியின் மகனும் தன் மாமனும் சிறுவயதிலிருந்தே தன்னுடன் நல்லுறவைப் பேணியவனுமாகிய வீரபாகுவைத் தன்



யாப்பகுவாக் கோட்டை வாயிலில் அமைக்கப்பட்ட சிலை

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்
## சங்குநாதம்

### காற்றோடு போரிட்டு

வளைந்து நீண்டு செல்கிறது
வாலெறும்பின் நகர்வுப்பாதை
சிறு காற்றுத் தூவுகிற
மண்சொட்டுக்கள்...
வாலெறும்பின் வழித்தடத்தை
ஆங்காங்கே,
மறைத்து மூடுகையில்...
சில கணங்கள்...
நின்று நிதானித்து
நிறுத்த முடியாதபடி,
தனது தடம்பற்றித் தொடர்கிறது
பயணம்
பயண வழிப்பாடுகளை
தன்னுள் புதைத்து,
வெளிப்படுத்தும்
சுறுசுறுப்புத் தத்துவம்
பயணவழி பெயர்க்க
எழும்காற்று
கதிபூட்டிச் செல்கிறது வாலெறும்பு

கவிஞர் சு.க. சிந்துதாசன்

### அவரவர் பார்வையில்

#### நினைவுகள்

என்னுயிரே,
தீயில் நீ சங்கமமானதும்
நீ வைத்த பொட்டு
அழிந்து விட்டாலும்
நிழல்போல் தொடர்ந்து வரும்
உன் நேச ஞாபகங்களை
யாராலும் அழிக்கமுடியவில்லை

செ.கந்தவேள், இடைக்காடு

#### நட்பு

பல தீபங்கள் உன்னால்தான்
ஒளிருமாக இருந்தால்
நீ தீக்குச்சியாக இருக்க
அச்சம் கொள்ளாதே

#### வேறுபாடு

காதல் என்பது வானவில் மாதிரி
அழகாய் இருக்கும் நிலையாயிருக்காது
நட்பு என்பது வானம் போல
அழகாய் இருக்காது நிலையாய் இருக்கும்

த.அனோஜா
மு/ மல்லாவி மத்திய கல்லூரி

### காலமாற்றம்

ஓடுகின்ற நாட்களிலே
உதிருகின்ற உயிர்கள் தம்மைக்
காணுகின்றோம் நிதமும்
காலத்தின் கோலத்தால்
மானமென்ற ஒன்று
மண்ணிற்குள் மறைந்ததற்கும்
தானதரும நெறி
தரணியிலே கெட்டதற்கும்
எம் இனத்துப் பெரியார் புகழ்
பூச்சியமாய்ப் போவதற்கும்
வேறென்ன காரணமாம்?
வேதனை இக்காலமடா!
மாதர் நிலைகளிங்கே
மதிப்பிழந்து போகிறது
மானம் பெரிதென்ற
மதிப்பும் குறைகிறது
காணும் புதினமெல்லாம்
கடவுளுக்கும் தெரிகிறது
மாளும் மனிதனுக்கோ
மரணத்திலும் புத்தியில்லை.

வி.ஜலயா
யா.தே.க.க.

### இமயம் தொட...

எப்போது
இழப்புக்களைக் கண்டு
இயலாமை கொள்கிறாயோ
அப்போதே இமயமாயிருக்கும்
உன் தன்னம்பிக்கை
இடிந்து நொறுங்கி விடுகிறது
இழப்புக்கள் வரும்
அதை எதிர்த்து நில்
இழப்புக்கள் பொடியாகும்
நீ இமயம் தொடுவாய்


மாவை நா.கஜேந்திரன்

### கிறுக்கல்

இயற்கைச் சாயங்கள்
என்றாலும்
ஆயிரம் வர்ணங்களால்
அலங்கரிக்கப்பட்டது–எம்வாழ்வு
கிறுக்கல் சித்திரங்களுக்குள்
புதைந்து போனது ஏனோ!
மாற்றம் ஒன்றே
மாற்றம் இல்லாததால்
மீண்டும் வர்ணங்கள்
பூசப்படலாம் என்ற
நம்பிக்கையில் நம்வாழ்வு

நிலவன்
அச்சுவேலி

## மௌனத்தின் தேடல் - 126



### ஆர்ப்பரிப்பு

இயந்திரம் மனிதனாக
உருவெடுக்கும் காலத்தில்- இங்கு
மனிதன் இயந்திரமாக
உரு கொடுக்கிறான்
பலகோடி இயந்திரத்தை
உருவாக்கும் மனிதா!- உன்
அறிவின் பலத்தை யோசி
யோசனையை செயற்படுத்த யோசி
செயலின் புகழை யோசி
புகழின் உச்சியில் நீயென யோசி

சூ.அ.சுலக்சன்
மண்டைதீவு

### நவீன பாதை

நவீன பாதைகளில்
நடனமாடிய வண்டிகள்
இன்று
எரிபொருள் விலையுயர்வால்
தங்கள் உருவங்களை
மாற்றிக்கொண்டன

ஆ.ஆமோஸ்
கொழும்புத்துறை

### பகீரதப்பிரயத்தனம்

கணனிக் காலத்தில்
காலடிபதித்த
இனிய இளைஞர்
நெஞ்சங்களே
உங்களுக்கு ஏன் இந்தக்
கொலைவெறி
இரு சக்கர வண்டியை
இயக்கப்போய்
உங்கள் உயிரை
பலிக்கடாய் ஆக்காதீர்கள்

க.கமலா
திருநெல்வேலி

### கண்டுபிடிப்பு

உங்கள் கண்டுபிடிப்புக்களில்
இதுவும் ஒன்றோ...
இங்கேயும் மனித வளத்தை
மூலதனமாக
பயன்படுத்தியுள்ளீரோ
என்னவோ....?

நிதுநிலா பைரவி
கலிகை

### தலைமுறை

போதை தலைக்கேறினால் நம்
இன்றைய தலைமுறை இப்படித்தான்
வீதியில் தலைகால் புரியாது
சாகசம் காட்டிடும்

க.ஜெயரூபன்
பருத்தித்துறை

### எப்படிஇருந்தாலும்

நவீன காலத்தின் வளர்ச்சி
அந்த நாகரிகத்தின் குளிர்ச்சி
வாகனத்தின் மீதுள்ள கவர்ச்சி
உங்களை அதுவாக்கியுள்ளது
அது நீங்களானாலும்
நீங்கள் அதுவானாலும்
வேகக்கட்டுப்பாட்டையிழக்காவிட்டால்
விதிவிபத்துக்கள் நேராது

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### அற்புதக்காட்சி

கற்பனைத் திறன் மிகுந்த
அற்புத இளைஞர் நால்வர்
ஏற்றமுறையில் தம்முடல் வளைத்து
போற்றவல்லதோர் மோட்டார்சைக்கிள்
வடிவத்தைக்காட்டும் அழகு
பாராட்டுக்குரிய அற்புதக்காட்சியே
இவர்கள் ஆக்கத்திறனுக்கு
ஊக்கங் கொடுத்திடுவோம்.

துஷா
கொக்குவில்

### சாதனை

சாதனைகளை நீங்கள்
படைப்பதற்கு
தலைகீழாக நிற்கும்
தோழர்களே...
மனதிலே வலிமை இருப்பது
தெரிகிறது
உடல்கள் வலிக்கவில்லையா
உங்களுக்கு

ஜெயராம்
அல்வாய் திடல்

### தயாரா?

நண்பர்கள் நால்வரின்
சிந்தையில் உதித்த
விந்தையான கற்பனைதான்
என் மகன்
விபரம் புரியாத சிறுபையன்
உங்கள் மோட்டார் ஊர்தியில்
பயணிக்க ஒரே ரகனை
அவனை ஏற்ற நீங்கள் தயாரா?

லீலா சிவவடிவேல்,
இணுவில் மேற்கு

### உனக்காக

மனித வாழ்வு
இயந்திரமாகுவதை
நினைவுபடுத்த
மனிதனே
இயந்திரமாகிக் காட்டுகிறான்
இந்தவாழ்வை விடு
இனிய வாழ்வை தொடர்...

சி.தர்சிகன், யாழ்ப்பாணம்

### வாழ்க்கை

இயந்திர வாழ்க்கையில்
மனிதன் இயந்திரமாகிறான்
விரட்டப்பட்ட வாழ்வை
தேடிப்பிடிப்பதற்காய்
விரைந்து செல்கிறான்
முட்டி மோதுவான்
மீண்டும் இயந்திரமாவான்
வாழ்வை விரட்டிப்பிடிப்பதற்காய்

ர.பிரசாந்தினி, நாவாந்துறை

### முன்னேற்றம்

நகரத்து வாழ்வு
நரகத்தைப் போன்றது
மனிதர்களை
இயந்திரமாக்குவதென
இந்த இளைஞர்கள்
எடுத்துக்காட்டுகிறார்
நல்ல சிந்தனை
இவரால்
நாடு முன்னேறும்

இ.துளசி

### இயங்கு

மனிதன்
இயந்திரமாகும்போதுதான்
மனித வலு புலப்படுகிறது
இயந்திரமாகு
இயக்கிக் கொண்டிரு
அப்போதுதான்
வெற்றி கிட்டும்

உதிஸ்ரன்
கலட்டி

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் -127



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 26.10.2012 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத இராசி பலன்

## 17.10.2012 - 16.11.2012



## கும்பம்

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும்!**

**உதவிகள் செய்வதன் மூலம் உன்னத நட்பை வளர்த்துக் கொள்ளும் கும்ப இராசி நேயர்களே!**

மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை இளமையிலேயே உங்கள் இதயத்தில் பதித்து வைத்திருப்பீர்கள். நீங்கள் நிர்வாக திறமை அதிகம் பெற்றவர்கள். மனப் பக்குவத்தை வாழ்வின் மையப் பகுதியில் பெறுவீர்கள். நல்ல நண்பர்களை அதிகம் பெற்றவர்கள் நீங்கள். அவர்களுக்கு அறிவுரை சொன்னால், உங்களை விட்டு விலகிவிடுவார்கள். காரணம், அது உங்கள் ராசி அமைப்பு.

உங்களுக்கு இந்த ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே சனிப்பெயர்ச்சியின் விளைவாக இராசிநாதன் உச்சம்பெற்று வெற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுக்கப் போகிறார். விலகிச் சென்றவர்கள் எல்லாம் விரும்பி வந்து சேருவர். பழகும் நண்பர்களில் ஒருசிலர் உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல், பக்கபலமாக இருந்து தொழிலுக்கும் உறுதுணை புரிவர். நீடித்த நோயில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். வாகன மாற்றம், இடமாற்றம், வீடுமாற்றங்கள் நினைத்தபடியே நிறைவேறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

சுக்கிர பார்வையின் விளைவாக குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். பொன், பொருள் சேர்க்கை உருவாகும். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வந்து அணிந்து அழகு பார்க்கும்நிலை உருவாகும்.

# வெற்றி வாய்ப்புகள் வந்து சேரும் பணத்தேவைகள் பூர்த்தியாகும்

சனி விலகிய இந்த நேரத்தில் அதற்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது. குறிப்பாக அன்னதானம், வஸ்திர தானம், சொர்ண தானங்களை செய்து சனியை மகிழ்வித்து வழிபாடு செய்து வந்தால் சங்கடங்களில் இருந்து விலக இயலும். அதுமட்டுமல்ல சந்தோஷங்களை மட்டுமே நாளும் சந்திக்கவும் முடியும்.

கோவில்களில் சனிக்கு பரிகாரம் செய்யும் பொழுது அபிஷேகம் செய்து பார்த்து, நீலவண்ண வஸ்திரம் அணிவித்து, சுகந்த வாசமுள்ள மலரைச் சூட்டி "கருநிற காகமேறி காசினி தன்னை காக்கும்..." என்ற சனி கவசத்தினை பாடி வழிபாடு செய்யுங்கள். இடமாற்றம், ஊர்மாற்றம், இலாகா மாற்றம் எது வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளும் நிர்ப்பந்தம் உருவாகலாம். சுயஜாதக அடிப்படையில் அதை ஏற்றுக் கொள்வது நல்லது.

**சுகம் தரும் சுக்கிர பெயர்ச்சி**

சுக்கிரன் ஒக்டோபர் 23 ஆம் திகதி கன்னி இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். 4, 9 க்கு அதிபதி நீச்சம் பெறும் பொழுது நன்மை செய்யுமா என்று நீங்கள் நினைக்க வேண்டாம். 2, 12 க்கு அதிபதி அதைப் பார்க்கும் பொழுது திட்டமிடாத காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நிறைய நடைபெறும். கணவன்-மனைவி இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். உத்தியோக நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து வரும் தகவல் முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**இலாப செவ்வாயின் ஆதிக்கம்**

எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி தனுசு இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 3, 10 க்கு அதிபதியான செவ்வாய் 11 இல் சஞ்சரிக்கும் பொழுது பெரிய மனிதர்கள் தொடர்பால் பெருமை காண்பீர்கள். பிறர் போற்றும் அளவிற்கு வாழ்க்கைத் தரம் உயரும், வம்பு, வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். சகோதர பாசம் கூடும். விலகியிருந்த உடன்பிறப்புகள் விரும்பி வந்து, வீட்டு முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்புச் செய்வர். பூமி யோகம் உண்டு. புதிய இடம் வாங்கும் பொழுது பரிசீலனை செய்து வாங்குவது நல்லது.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்வதோடு, தொடர்ந்து 16 நாட்கள் விநாயகப் பெருமான் வழிபாட்டை ஒரேநேரத்தில் மேற்கொண்டால் துன்பங்களிலிருந்து விடுதலை பெற இயலும்.

இம்மாதம் உற்றார், உறவினர்களின் உதவி கிடைத்து மகிழும் மாதமாக அமைகிறது. ஊர் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். உயரதிகாரிகளால் ஏற்பட்ட தொல்லை அகலும். பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வி.ஆர்.எஸ். வாங்கும் சூழ்நிலை உருவாகும். குடியிருந்த வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். மாதக் கடைசியில் விலகிச் சென்ற சகோதரர் விரும்பி வந்து சேருவார். உடன்பிறப்பால் ஒரு நல்ல காரியம் நடைபெறும்.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## மீனம்

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**சிந்தித்து செயற்பட்டால் தித்திக்கும் வாழ்க்கை!**

**எதிரிகள்கூட சரணடையும் விதத்தில் இனிமையாகப் பேசும் மீன இராசி நேயர்களே!**

ஆடம்பரத்தை அதிகம் விரும்பாவிட்டாலும், அப்போதைக்கு அப்போது தன்னை அழகுபடுத்திக் கொள்வதற்கு தயங்கமாட்டீர்கள். நட்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள் நீங்கள். நாடெங்கிலும் நண்பர்களைப் பெற்று வைத்திருப்பீர்கள். பேரும், புகழும் தான் முக்கியம் என்று கருதுவீர்கள். பெரியவர்கள் சொல்லை மதிப்பவர்கள் நீங்கள்.

# நினைத்த காரியம் நினைத்த நேரத்தில் நடைபெறும் பணப்புழக்கம் தாராளமாக அமையப்பெறுவீர்கள்

உங்களுக்கு இந்த ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, எதிலும் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவதே நல்லது. ஏனென்றால், அஷ்டம ஸ்தானாதிபதி நான்கு கிரகங்கள் ஒன்று கூடிச் சஞ்சரிக்கின்றன. குறிப்பாக பாக்யாதிபதி, ஆறுக்கு அதிபதி, சுகாதிபதி போன்றவைகள் எல்லாம் எட்டில் கூடுவது நல்லதல்ல. விரயத்தின் விளம்பில் கொண்டுபோய் நிறுத்தலாம். இருந்தாலும் நீங்கள் செய்த ஒரு பாக்யம் உங்கள் ராசிக்கு தனாதிபதியாக விளங்கும் செவ்வாயை குரு பார்ப்பதுதான். பணப் புழக்கம் அதிகரிக்கும் அல்லவா?

மன நிம்மதி குறையாமல் இருக்க தைரியத்தையும், தன்னம்பிக்கையும் வளர்த்துக் கொள்ளுங்கள். திடீர் இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம், வாகன மாற்றம் என்று ஏதாவது ஒரு மாற்றம் வரலாம். எந்த மாற்றம் வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்க இயலாது. வந்த மாற்றங்களுக்கு ஏற்ப வளைந்து கொடுத்துச் செல்வதுதான் நல்லது.

எந்த நிலையிலும் சுப விரயங்களை அதிகம் செய்யுங்கள். தான, தர்மங்கள் செய்வதற்கு சம்மதியுங்கள். தக்க விதத்தில் சனி மற்றும் அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். புனித மிகு திருக்கோயில்களில், உங்கள் ஜாதகத்திற்கு ஏற்ற தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து யோகபலம் பெற்ற நாளில் வழிபட்டு வந்தால் வந்த துயரங்கள் தானாக நீங்கும். கவசம் பாடினால் கவலைகள் நீங்கும். பதிகம் பாடினால் தெய்வங்கள் பக்கபலமாக வந்து நிற்கும்.

**சுக்கிர பெயர்ச்சிக்காலம்!**

உங்கள் இராசிக்கு 3, 8 க்கு அதிபதியான சுக்கிரன் உங்கள் இராசிக்கு 7 இல் நீச்சம் பெறுகிறார். இது நன்மைதான். இராசிநாதன் குருவிற்கு பகைக் கிரகமான சுக்கிரன் நீச்சம் பெறும் பொழுது நினைத்த காரியம் நினைத்த நேரத்தில் நடைபெறும். நிம்மதிக்காக இதுவரை நீங்கள் ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைத்ததன் பலன் இப்பொழுதுதான் கிடைக்கும்.

**செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!**

எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி செவ்வாய் பெயர்ச்சி ஆகிறார். தனுசு ராசிக்குச் செல்லும் செவ்வாய் மிகுந்த நற்பலன்களை வாரி வழங்குவார். குறிப்பாக 2, 9 க்கு அதிபதியான செவ்வாய் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பணத்தேவைகள் பூர்த்தியாகும். பக்குவமாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். கூட்டு முயற்சிகளில் இலாபம் கிடைக்கும். குடும்பத்திற்கு தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புகளும் கைகூடி வரும். வீடு கட்டும் முயற்சி பாதியில் நின்றதே என்ற கவலை இனி அகலும். படிப்படியாக சொத்துப் பிரச்சினைகளும் தீரும்.


இம்மாதம் காலையில் விநாயகர், மதியம் வைரவர், மாலையில் சனிபகவான் என்று மூன்று தெய்வங்களையும் முறையாக சனிக்கிழமையன்று வழிபாடு செய்யுங்கள்.

இம்மாதம் எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய மாதமாகும். கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். குடும்பத்தில் ஏற்படும் சண்டை, சச்சரவுகளை சமரசமாக்க முயற்சி செய்யுங்கள். மன அமைதிக் குறைவு ஏற்படாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வதுதான் நல்லது. உடல்நலனில் அக்கறை தேவை. பொருளாதாரநிலை சீராக இருக்கும். கணவன்- மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதே நல்லது. குலதெய்வ வழிபாடு குடும்பத்தில் மகழ்ச்சியை வரவழைத்துக் கொடுக்கும்.

**(முற்றும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது இயலாமையையும் தம்மீதான பழியையும் மறைக்க முயல்கிறாரா எரிக் சொல்ஹெய்ம்...!!



## இந்தியா, அமெரிக்கா கூட பொதுமக்களின் அழிவை தடுப்பதை பிரதானப்படுத்தவில்லை, புலிகளை ஒழிப்பதில் கண்ணாயிருந்தன

மூன்றாண்டுகளுக்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்த போர் பற்றிய சர்ச்சைகள் இன்னமும் அவ்வப்போது வெடித்துக் கொண்டுதான் இருக்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முழு இராணுவ பலத்தையும் அழித்தொழித்த அந்தப்போர் பற்றிய பல மர்மங்கள் இன்னமும் நீடிப்பதாலேயே இந்நிலை காணப்படுகிறது. போர் முடிவுக்கு வந்த சூழல், போரின் இறுதிக்கட்டத்தில் நடந்த சம்பவங்கள், போரை நிறுத்துவதற்கான வாய்ப்புகள் புறக்கணிக்கப்பட்டதன் பின்னணி என்பன இன்னமும் சரியாகத் துலங்காத மர்மமாகவே உள்ளது. இந்தப் போரில் பங்கேற்ற ஒரு தரப்பான தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைகள் முள்ளிவாய்க்காலில் அழிந்து போனதால், அவர்களின் பக்கத்தில் உள்ள நியாயங்கள் முழுமையாக வெளிப்பட வாய்ப்பில்லை. வெளிநாடுகளில் உள்ள புலிகளின் பிரதிநிதிகள் பலவற்றை அறியவுமில்லை. அறிந்தவற்றை வெளியில் சொல்ல முடியாத நிலையிலும் உள்ளனர். அதேவேளை, இலங்கை அரசதரப்பினாலும் போரின் முழு உண்மையையும் வெளியிட முடியாத நிலை உள்ளது. இந்தப் போரில் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் இடம் பெற்றுள்ளதான குற்றச்சாட்டை அரசாங்கம் எதிர் நோக்கியுள்ளது.

ஒருகாலத்தில் எந்தப் போர்க் குற்றங்களும் இறுதிப் போரில் இடம்பெறவில்லை என்று இலங்கை அரசு சாதித்து வந்தாலும், ஒரு கட்டத்திற்கு மேல் அந்தப் பிடிவாதத்தில் இருக்க முடியாது போனது. இதன் காரணமாக, போர்க்குற்றங்கள் குறித்த உள்ளக விசாரணை நடத்துவதாக அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. அந்தவிசாரணை நடக்கிறதோ, இல்லையோ , அத்தகைய ஒரு வாக்குறுதி சர்வதேச சமூகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், போரின் உண்மை முகத்தை வெளிக்காட்டுவது அரசாங்கத்தினால் முடியாத காரியம். அது, தனக்குத்தானே வெட்டுகின்ற குழி போலவே அமையும். இத்தகைய கட்டத்தில்தான் அந்தப்போரை நிறுத்துவதற்கான முயற்சிகளில் அல்லது அதனோடு தொடர்புடைய சமரச முயற்சிகளில் தொடர்புடைய தரப்புகளில் இருந்து சில கருத்துகள் வெளியாகி வருகின்றன. இதில் பிரதான பாத்திரம் வகித்தது, சமாதான முயற்சிகளில் ஆரம்பத்தில் இருந்தே ஈடுபட்டுவந்த நோர்வேதான்.

நோர்வேயின் சமாதானத் தூவராக இருந்தவரும் பின்னர், இலங்கை அரசினால் நிராகரிக்கப்பட்டதை அடுத்து அதிலிருந்து ஒதுக்கப்பட்டவருமான, எரிக்சொல்ஹெய்ம் கடந்தவாரம் பிபிசிக்கு வழங்கிய பேட்டிதான் இப்போது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. இந்தப்பேட்டியில் அவர், முள்ளிவாய்க்காலில் ஏற்பட்ட பேரழிவுக்கு த.வி. புலிகளின் தலைவர் பிரபாகரன், இறுதி வரை போராட எடுத்த முடிவே முக்கிய காரணம் என்று குறிப்பிட்டிருந்தார். இது தமிழீழவிடுதலைப் புலிகளின் அனுதாபிகளுக்கும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. "அப்போது போரின் முடிவு இலங்கை அரசுக்கு இராணுவ வெற்றியைக் கொடுக்கும் என்று எல்லோருக்கும் தெரிந்த நிலையில், பேரழிவைத் தடுக்கும் வகையில் போரை முறையாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்ற திட்டத்தை நாம் முன்வைத்தோம். விடுலைப்புலிகளும் இலங்கை அரசும் ஒப்புக்கொண்ட பிறகு தான் அந்தத் திட்டத்தின் முழுமையான இறுதி வடிவம் முடிவு செய்யப்பட்டிருக்கும். சர்வதேச அமைப்பு, உதாரணமாக அமெரிக்கா, இந்தியா அல்லது வேறு ஒரு நாடு வடக்கு-கிழக்கு பகுதிக்கு ஒரு பெரிய கப்பலை அனுப்பிவைப்பது என்றும், அதில் ஐ.நா. அதிகாரிகளோ அல்லது மற்ற அனைத்துலக அமைப்பைச் சேர்ந்தவர்களோ இருந்து, எஞ்சியிருந்த அனைத்து விடுதலைப் புலிகள் மற்றும் பொது மக்கள் அனைவரையும் கணக்கெடுத்து புகைப்படத்துடன் பதிவு செய்யப்படுவர். அவர்கள் அனைவரும் கொழும்பு கொண்டு செல்லப்பட்டு அவர்களிடமிருந்த ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர், விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் மற்றும் பொட்டம்மான் ஆகிய இருவர் தவிர்ந்த மற்ற அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்பதே அந்தத்திட்டம். அப்படி நடந்திருந்தால், அனைத்துலக சமூகத்தின் முன்னிலையில் அனைத்துலக அமைப்புகளால் பதிவு செய்யப்பட்டவர்களை இலங்கை அரசால் நினைத்த மாத்திரத்தில் கொல்ல முடிந்திருக்காது. எங்களின் இந்தத் திட்டம் ஏற்கப்பட்டிருந்தால், இறுதிக்கட்டத்தில் கொல்லப்பட்ட விடுதலைப்புலிகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் இன்று நம்மிடையே உயிருடன் இருந்திருப்பார்கள். போரின் இறுதி முடிவு என்னவாக இருக்கப்போகிறது என்பதை அனைவரும் உணர்ந்த நிலையிலும் போரை ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் முடிக்காமல் கடைசிவரை போராடவேண்டும் என்று பிரபாகரன் உள்ளிட்ட விடு தலைப்புலிகள் அமைப்பின் தலைமை முடிவெடுத்தது மிகப்பெரிய தவறு என்றே நான் நினைக்கிறேன்" இவ்வாறு குறிப்பிட்டிருந்தார் சொல்ஹெய்ம்.

ஆனால், இப்படியொரு திட்டத்தை எழுத்து மூலம் நோர்வே சமர்ப்பிக்கவில்லை என்று மறுத்துள்ளார், குறிப்பிட்ட பேச்சுக்களில் விடுலைப் புலிகளின் சார்பில் பங்கேற்றவர்களில் ஒருவரான வி.ருத்ரகுமாரன்.

அவரது குற்றச்சாட்டு வேறு விதமானதாக உள்ளது. தாம் 2008 இல் சார்க்மாநாட்டை முன்னிட்டு அறிவித்த ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை ஒரு விரிவான போர் நிறுத்த உடன்பாடாக மாற்றுவதற்கு உதவுமாறு விடுத்த வேண்டுகோளை இணைத் தலைமை நாடுகள் கண்டு கொள்ளவில்லை என்றும் போரை நிறுத்துவதற்கு தம்மால் இலங்கை மீது செல்வாக்குச்செலுத்த முடியாதுள்ளதாக அவை கைவிரித்துவிட்டதாகவும் அவர் கூறியுள்ளார். 2009 இல் போர்நிறுத்தத்தை ஏற்படுத்த உதவுமாறு விடுத்த வேண்டுகோளை இணைத்தலைமை நாடுகள் கண்டு கொள்ளவில்லையென்றும் அவர் கூறியுள்ளார். சொல்ஹெய்மின் கருத்துப்படி 2009 ஜனவரியிலேயே விடுதலைப் புலிகளை சரணடைய வைப்பதற்கு இணைத்தலைமை நாடுகள் முயன்றுள்ளன என்பது வெளிப்படையாகியுள்ளது. ஆனால், அப்போது, விடுதலைப்புலிகளின் தோல்வி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது என்ற இணைத் தலைமையின் முடிவு சரியானதா என்பதே கேள்வி. ஏனென்றால், விடுதலைப் புலிகளின் தலைமையை பறிகொடுத்து ஒரு சரணடைவுக்கு இணங்கும் அளவு நெருக்கடி 2009 ஜனவரியில் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு ஏற்பட்டிருக்கவில்லை. அத்தகைய சூழலில் அவர் இறுதிவரை போராட முடிவு செய்ததிலும் ஆச்சரியம் இல்லை.

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை 2009 ஏப்ரல் மாதம் முதல் வாரம் நடந்த ஆனந்தபுரம் சமருக்குப்பின்பு தான் சரணடைவு பற்றிய ஒரு முடிவை எடுக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தார்கள். இந்த நிலையில் விடுதலைப்புலிகளின் தோல்வியை முன்கூட்டியே கணித்து, தலைமையை வென்று, அவர்களை சரணடைய வைக்கும் திட்டத்தை முன்வைத்தது, இணைத் தலைமை நாடுகளின் திறமை என்று கருதுவதா அல்லது விடுதலைப்புலிகளை சரணடையச் செய்ய வேண்டுமென்ற அவர்களின் விருப்பத்தை பிரதிபலிக்கிறதா என்பது கேள்வியாக உள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை பூண்டோடு அழிக்கவேண்டும் என்பதில் இலங்கை அரசாங்கம் மட்டும் ஆர்வம் காட்டவில்லை. இந்தியாவும் உறுதியாக இருந்தது என்று கூறியுள்ளார் சொல்ஹெய்ம். அவரது இந்தத் தகவல்களை வைத்துப் பார்க்கும்போது இணைத் தலைமை நாடுகள்கூட அதே முடிவுடன் தான் செயற்பட்டுள்ளன என்பது வெளிப்படையாகத்தெரிகிறது. இணைத் தலைமை நாடுகள் முன்வைத்த சரணடையும் திட்டம், இலங்கைக்கு தெரியாது என்றும் இந்தியா அறிந்திருந்தது என்றும் சொல்ஹெய்ம் கூறியுள்ளார். அந்தத் திட்டத்தை முக்கிய தரப்பான இலங்கை ஏற்றுக்கொள்ளும் என்றும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் அழுத்தம் காரணமாக அதற்கு இணங்குவதைவிட இலங்கை அரசுக்கு வேறுவழியில்லை என்றும் கூறியுள்ளார். ஆனால், அதே அமெரிக்காவை உள்ளடக்கிய இணைத் தலைமை நாடுகளால் இலங்கை அரசை போர்நிறுத்தம் ஒன்றிற்கு இணங்கச் செய்ய முடியாமற் போனது எப்படி என்பதுதான் முரண்பாடான விடயமாக உள்ளது.

விடுதலைப்புலிகள் சரணடைய மறுத்த நிலையில் போரை நிறுத்தி அழிவுகளைத் தடுக்க இணைத் தலைமை நாடுகளும் இந்தியாவும் செல்வாக்கு செலுத்த முடியாத நிலையிலேயே இருந்தன. அங்கே பொது மக்களின் அழிவுகளை தடுக்கும் நோக்கத்தைவிட விடுதலைப்புலிகளை அழிக்கும் நோக்கமே இணைத் தலைமைக்கும் இந்தியாவுக்கும் வலுவானதாக தோன்றியுள்ளது. தமது தோல்வி அல்லது இயலாமையை அல்லது தம்மீதான பழியை மறைக்க சொல்ஹெய்ம் இப்போது புலிகளின் மீது பழியைப்போட்டு தப்பிக்க முனைவதாகவே தோன்றுகிறது. ஏனென்றால், அதனை உறுதியாக மறுப்பதற்கு விடுதலைப்புலிகளின் தலைமை இப்போது இல்லை என்பது அவர்களுக்கு மிகவும் சாதகமாகவே உள்ளதாகத் தெரிகிறது.

-சுபத்திரா-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகார ஆட்சியை கவிழ்க்க எதிர்க்கட்சிகளுடன் இணைந்துள்ளோம்

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி. உள்ளிட்ட ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களின் போது ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்பட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

நுகேகொடைப் பொதுச் சந்தையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு,

வாழ்க்கைச் செலவு, தொழிலாளர் உரிமை, கல்வி, சுகாதாரம், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டல், நல்லாட்சி, ஊடக சுதந்திரம் போன்ற விவகாரங்களில் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து குரல் கொடுக்கத் தயார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வாதிகார ஆட்சியை இல்லாதொழிக்கும் நோக்கில் ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி. உள்ளிட்ட ஏனைய எதிர்க்கட்சிகளுடன் பாராளுமன்றின் உள்ளேயும் வெளியேயும் இணைந்து செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்திற்கு முன்னதாக பொருட்கள் சேவைகளின் விலைகளை உயர்த்தி எம்மை முட்டாளாக்க அரசாங்கம் நினைக்கக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாழ்க்கைச் செலவு உயர்வினை க்ட்டுப்படுத்த முடியாவிட்டால் சம்பள உயர்வை அரசாங்கம் வழங்க வேண்டுமென அவர் கோரியுள்ளார். (அ-2)

# 30 ஆவது ஆண்டு நிறைவு போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி அமரர் த.சிவஸ்ரீ ஞான பண்டிதக் குருக்களின் 30 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி முடிவுகளை ஞானரத்தினம் அமைப்பாளர்கள் வெளியிட்டுள்ளனர்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைபெற்றோர்விபரம்வருமாறு.

**கோலப் போட்டி**

வி.ஜனோசிகா(அம்பாள் முன்பள்ளி),ஈ.லக்ஷிகா (ஜிப்பிற்றர் முன்பள்ளி),ச.ரம்மிஜா(கஜமுகன் முன்பள்ளி)

**மாலை கட்டுதல் போட்டி**

வ.ஸ்ரீராம் (சித்தன்கேணி பாலர் பாடசாலை), வி.பிரகாஷ் (சங்கானை இந்து இளைஞர் மன்றம்), தெ.பிரசாந்தினி ( வட்டுக்கோட்டை கஜமுகன் முன்பள்ளி)

**எழுத்துப் போட்டிப் பரீட்சை**

*கீழ்ப் பிரிவு*

மா.சுருஜன், (சித்தன்கேணிமாதர் அபிவிருத்தி முன்பள்ளி) யோ.தருஷன், (சித்தன்கேணி மாதர் அபிவிருத்தி முன்பள்ளி) தே.சுவேனியா (சித்தன் கேணி மாதர் அபிவிருத்தி முன்பள்ளி).

**மேல்பிரிவு**

சு.கலைவாணி (சித்தன்கேணி மாதர் அபிவிருத்தி முன்பள்ளி), மு.நந்துஷா (சித்தன்கேணி மாதர் அபிவிருத்தி முன்பள்ளி), கா.கபினா (சித்தன்கேணி மாதர் அபிவிருத்தி முன்பள்ளி).

**கட்டுரைப் போட்டி**

சூ.மேகலா(வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி), தே.காயத்திரி (சுழிபுரம் விக்னேஸ்வரா கல்லூரி), நா. கமலாஜினி (வட்டு. மத்திய கல்லூரி.)

**சைக்கிள் ஓட்டப் போட்டி**

*கீழ்ப் பிரிவு*

இ.தர்சன் (சுப்ரா கல்வி நிறுவனம்), நி.டிலக்ஷன் (சுப்ரா கல்வி நிறுவனம்),பா.பிருந்தாபன் (சுப்ரா கல்வி நிறுவனம்).

*மேற்பிரிவு*

த.தனிஸ் ,அ.சுலச்சன், மா.றஞ்சன் ஆகியோர் பெற்றுக் கொள்கின்றனர்.வலி. பிரதேசத்தின் சமூக சேவைக்கான உயர் விருது திருமதி சிவசுப்பிரமணியம் புனிதவதி பெற்றுக்கொள்கிறார். (அ)

# கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கூடுகின்றனர்

## பதிவு தொடர்பில் கலந்துரையாட திட்டம்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான சந்திப்பு சில தினங்களில் இடம்பெறவுள்ளது. இதற்கான அழைப்பினை கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் விடுத்துள்ளார்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழர் விடுதலைக்கூட்டணி, புளொட் ஆகிய 5 கட்சிகளின் தலைவர்கள் சில தினங்களில் ஒன்றுகூடி கூட்டமைப்பை தேர்தல் திணைக்களத்தில் பதிவுசெய்யும் விடயம் தொடர்பில் கலந்துரையாடவுள்ளனர்.

கூட்டமைப்பை பதிவு செய்யும் விடயம் தொடர்பில் கலந்துரையாட நேரம் ஒதுக்கி தருமாறு இலங்கை தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய 4 கட்சிகளின் தலைவர்களும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்திய விஜயத்துக்கு முன்னர் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இக் கோரிக்கைக்கு அமையவே சந்திப்புக்கு ஏனைய கட்சிகளின் தலைவர்களை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அழைத்துள்ளார்.

ஏனைய கட்சிகளில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளமையினால் அவர்கள் கொழும்பு திரும்பியவுடன் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.10 21

★1520-பேர்டினண்ட் மகலன் சிலியில் புதிய நீரினை ஒன்றைக் கண்டுபிடித்தார். இது பின்னர் மகலன் நீரினை எனப் பெயர் பெற்றது.

★1805-டிரபல்கார் என்ற இடத்தில் பிரித்தானியப் படைகள் பிரெஞ்சு மற்றும் ஸ்பானியக் கூட்டுப்படைகளின் கடற்படையை 20 ஆம் நூற்றாண்டு வரை இப்பிராந்தியத்தின் பெரும் கடற்படை வல்லரசாக ஆக்கியது.

★1805-ஊல்ம் என்ற இடத்தில் ஆஸ்திரியா நெப்போலியனின் பெரும் இராணுவத்திடம் சரணடைந்தது. நெப்போலியன் 30 ஆயிரம் பேரை சிறைப்பிடித்தான்.

★1824-ஜோசப் ஆஸ்ப்டின் போர்ட்லண்ட் சீமெந்துக்கான காப்புரிமம் பெற்றார்.

★1837-அமெரிக்கப் பழங்குடித் தலைவன் ஓசியோலா கைது செய்யப்பட்டான்.

★1854-புளோரன்ஸ் நைட்டிங்கேஸ் மற்றும் 38 தாதிகள் கிரிமியன் போர் முனைக்கு அனுப்பப்பட்டனர்.

★1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் கூட்டமைப்பினரிடம் வேர்ஜீனியாவில் தோற்றனர். ஆபிரகாம்லிங்கனின் நெருங்கிய நண்பர் எட்வேர்ட் பேக்கர் உயிரிழந்தார்.

★1876-யாழ்ப்பாணத்தில் கொலரா நோய் வேகமாகப் பரவியது.

★1879-தோமஸ் அல்வா எடிசன் தனது முதலாவது தொழில் ரீதியான மின்குமிழைப் பரிசோதித்தார். இது 13 மணி நேரம் எரிந்தது.

★1892- உலக கொலம்பியக் கண்காட்சி சிக்காகோவில் அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது. ஆனாலும் கட்டட வேலைகள் பூர்த்தியடையாத காரணத்தால் இக்கண்காட்சி 1893 மே முதலாம் ஆம் திகதியே பொது மக்களின் பார்வைக்குத் திறக்கப்பட்டது.

★1895- ஜப்பானியப் படைகளின் முற்றுகையினால் போர்மோசா குடியரசு வீழ்ந்தது.

★1944-கிறகுஜேவாச் படுகொலைகள் நாசி ஜேர்மனியப் படைகள் 7 ஆயிரம் சேர்பியரை படுகொலை செய்தனர்.

★1944-இரண்டாம் உலகப் போர்: முதலாவது கமிகசே ஜப்பானிய விமானத் தற்கொலைத் தாக்குதல் அவுஸ்திரேலிய கப்பல் மீது நடத்தப்பட்டது.

★1945-பிரான்சில் முதற்தடவையாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

★1966-வேல்சில் அபெர்ஃபான் என்னும் கிராமத்தில் நிலக்கரி கழிவுகள் அடங்கிய பாறை வீழ்ந்ததில் 116 பாடசாலைச் சிறுவர்கள் உட்பட 144 பேர் உயிரிழந்தனர்.

★1969-சோமாலியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் சியாட் பார் பதவியைக் கைப்பற்றினார்.

★1983-நிறைகளுக்கும் அளவைகளுக்குமான 17 ஆவது அனைத்துலகக் கருத்தரங்கில் முழுமையான வெற்றிடத்தில் துல்லியமாக 1/299, 792, 458 விநாடி நேரத்தில் ஒளி செல்லும் பாதையின் நீளமாக ஒரு மீற்றர் வரையறுக்கப்பட்டது.

★1987-யாழ்.போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினர் சுட்டதில் மருத்துவர்கள், ஊழியர்கள், நோயாளிகள் உட்பட 21 பேர் உயிரிழந்தனர்.

★1994-சியோல் நகரில் பாலம் ஒன்று உடைந்து வீழ்ந்ததில் 32 பேர் உயிரிழந்தனர்.

★2003-குறுங்கோள் ஏரிசின் படங்கள் எடுக்கப்பட்டன.

**பிறப்புக்கள்**

★1833-அல்பிரட், நோபல் சுவீடன் நாட்டு கண்டுபிடிப்பாளர், நோபல் பரிசை ஆரம்பித்தவர் (இ.1896)

★1925-சுர்ஜித் சிங் பர்னாலா, இந்திய அரசியல்வாதி


**இறப்பு**

★1835-முத்துசுவாமி தீட்சிதர், கருநாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவர் (பி.1776)

**சிறப்பு நாள்**

★ஆப்பிள் தினம்

## முத்துசுவாமி தீட்சிதர்



இவர் இராமசுவாமி தீட்சிதருக்கும் சுப்புலட்சுமி அம்மையாருக்கும் மகனாக1776ஆம்ஆண்டு பங்குனி மாதம் 24 ஆம் திகதி கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தார்.

வைத்தீஸ்வரன்கோயில் முத்துகுமாரசுவாமி வரப்பிரசாதத்தால் குழந்தை பிறந்ததால் தீட்சிதருக்குப் பெற்றோர்கள் முத்துசுவாமி எனப் பெயர் சூட்டி வளர்த்தனர். 2 ஆண்டுகளுக்கு பின் ஸ்ரீ ராம சுவாமி தீட்சிதருக்கு சின்னசுவாமி, பாலுசுவாமி என இரு புதல்வர்களும் பாலம்மாள் என்ற ஒரு புதல்வியும் பிறந்தனர்.

முத்துசுவாமி தீட்சிதர் சிறு வயதிலேயே பக்திமானானார். தெலுங்கு, சமஸ்கிருதம், சங்கீதம் மூன்றையும் தன் தந்தையாரிடமே கற்றார். காவியம், நாடகம், அலங்காரம், வியாகரணம் முதலிய இலக்கணங்களையும் முறையாக கற்றார்.

**இசைப் புலமை**

தீட்சிதர் கர்நாடக சங்கீதத்தில் மட்டுமன்றி இந்துஸ்தானி சங்கீதத்திலும் தேர்ச்சி பெற்றார். இவரின் குரு மிக்க மகிழ்ந்து அன்பா இனி தமிழகம் செல், திருத்தணி முருகனை உபாசி, முருகன் அருள் பெற்று நாதவித்தையைப் பரவச் செய் என நல்வாக்களித்தார்.

தீட்சிதர் திருத்தணி சென்றார். சுப்பிரமணியக் கடவுளைத் தரிசிக்க மலை ஏறும் போது ஒரு வயோதிபர் எதிரில் வந்து முத்துசுவாமி வாயைத் திற என்று சொல்லி ஒரு கற்கண்டைப் போட்டு ஆசீர்வதித்து மறைந்து விட்டார். அப்போதே மயில் மேல் ஏறிச் செல்லும் முருகனைத் தரிசித்து பரவசமுற்ற தீட்சிதர் சுப்பிரமணிய சுவாமியின் அருளால் கானவாக்கு உதித்து நாத உருப்படிகளை இயற்றும் திறனையும் பெற்றார்.

**இறுதிக்காலம்**

குகன் திருவருளால் அழியாப்புகழ் பெற்றுள்ள தீட்சிதர் 1835 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகை அன்று தன் தம்பியும் சிஷ்யர்களும் மீனாம்பிகை பெயரில் அமைந்த மீனலோசனி பாபமோசனி என்ற கிருதியைப் பாடப் பாடக் கேட்டுக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்து இரு கைகளையும் தலைமேல் குவித்து சிவே பாஹி... சிவே பாஹி ஓம் சிவே என்றார். உடனே அவரது ஆவி ஒளி வடிவாகப் பிரிந்தது. தற்சமயம் இவரது சமாதி எட்டயபுரத்தில் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச்சட்ட நீக்கம் இனமோதலையே உருவாக்கும்

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை அரசியலமைப்பிலிருந்து 13 ஆவது திருத்தச்சட்டம் இல்லாதொழிக்கப்படுமேயானால் அது மற்றுமொரு இனப் பாகுபாட்டிற்கும் இன மோதல்களுக்கும் வழிவகுக்கும்.**

மாற்றுத் தீர்வுத் திட்டங்களோ இன நல்லிணக்கத்திற்கான உபாயங்களோ அரசாங்கத்திடம் கிடையாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபைகளின் அதிகாரங்களை மீளப்பெறும் நடவடிக்கையிலேயே அரசாங்கம் செயற்படுகின்றது.

நிறைவேற்று அதிகாரத்திற்குள் மென்மேலும் மாகாண மற்றும் நகரம் போன்ற உள்ளூராட்சி கட்டமைப்பின் அதிகாரங்களும் உள்வாங்கப்படுகின்றமை நாட்டின் ஜனநாயக ஆட்சிக்கு ஆபத்தாகி விடும்.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அதிகாரப் பகிர்வு இலங்கை அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தச்சட்டத்திலேயே காணப்படுகின்றது.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வை ஏற்படுத்தாது மாற்று வழிகளையும் கையாளாது திடீரென 13 ஆவது திருத்தச் சட்டத்தை அப்புறப்படுத்துவது அடிப்படைத் தன்மையற்ற விடயமாகும்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளிலும் இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வை மையப்படுத்திய தீர்வு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனையும் நிறைவேற்றாது கனவு கண்டு திடீரென தூக்கத்திலிருந்து விழித்தது போன்று 13 ஆவது திருத்தச்சட்டம் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான விடயம். இதனை உடனடியாக இல்லாதொழிக்க வேண்டும் என்று கூறுவது முட்டாள்தனமாகும். அரசியலமைப்பில் திருத்தங்களை கொண்டுவர வேண்டுமாயின் புதிய திருத்தத்தை முன் வைக்க வேண்டும்.

இது வரையில் அரசாங்கம் அரசியல் தீர்வுக்கான உத்தேச தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்கவில்லை. இந்த நிலையில் அரசியலமைப்பில் உள்ள தீர்வையும் இல்லாதொழிக்க முயற்சிப்பது பாரிய விளைவுகளையே ஏற்படுத்தும்.

அது மட்டுமின்றி தீர்விற்காக காத்திருக்கும் தரப்புகளும் சந்தேகம் கொண்டு வேறு வழிகளை கையாளும் நிலையே உருவாகும். சுயாதீன ஆணைக்குழுக்களை இல்லா தொழித்து பாரிய நெருக்கடிகளை நாடு எதிர்நோக்குகிறது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் இன முரண்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் அரசு தகவல்களை வெளியிடுகின்றமை இன மோதல்களுக்கான சூழலையே ஊக்குவிக்கும் என்றார். (அ-2)

## 456 குடும்பங்களுக்கு தொடர்மாடி அமைக்கிறது 'டாடா' நிறுவனம்

(கொழும்பு)

கொழும்பு நகரின் அபிவிருத்தியில் இந்திய டாடா நிறுவனத்துக்கும் 99 வருட குத்தகை அடிப்படையில் காணி வழங்கப்படவுள்ளது. இந்தக்காணி வழங்கல் தொடர்பில் இலங்கையின் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

கொழும்பின் கொம்பனித்தெரு, மலே வீதி, நீதிபதி அக்பர் மாவத்தை மற்றும் புகையிரத கடவை போன்ற பகுதிகளை உள்ளடக்கி 8 ஏக்கர் காணி டாடா நிறுவனத்துக்கு வழங்கப்படவுள்ளது. இந்நிறுவனம் குறித்த காணியில் 456 குடும்பங்களுக்கான தொடர்மாடி குடியிருப்பை அமைக்கவுள்ளது.

இந்த வீடுகள் கொழும்பு அபிவிருத்தியின் போது வீடுகளை இழப்போருக்கு வழங்கப்படவுள்ளன.

இந்த தொடர் மாடிக் குடியிருப்பு அமைப்பதற்கான செலவு 5.87 பில்லியன் ரூபாய்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## அக்கரப்பத்தனை பேருந்து விபத்தில் 12 பேர் காயம்

தலவாக்கலையிலிருந்து டயகம நோக்கி பயணித்த பேருந்து வண்டியும் டயகமவிலிருந்து தலவாக்கலை நோக்கி பயணித்த பேருந்து வண்டியும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 12 மாணவர்கள் காயமடைந்த நிலையில் அக்கரப்பத்தனை மன்ராசி அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து சம்பவம் நேற்று காலை 7.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து சாரதியின் கவனக்குறைவே இவ் விபத்துக்கு காரணமாக அமைந்தது என தெரிவிக்கும் அக்கரப்பத்தனை பொலிஸார் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## அன்டனோவின் கறுப்பு பெட்டியை தேடும் முயற்சியில் பாதுகாப்புப்படை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட லயன் எயாருக்கு சொந்தமான அன்டனோவ் விமானத்தின் கறுப்பு பெட்டியை மீட்கும் பணியில் இலங்கையின் கடற்படை சுழியோடிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மன்னார் இரணைதீவு பிரதேச கடற்பரப்பில் சுழியோடிகள் பெட்டியை தேடி வருகின்றனர்.

இந்தக் கறுப்பு பெட்டி கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் அதனை விசாரணைகளுக்காக ரஷ்யாவிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த கறுப்பு பெட்டித் தகவல்களின் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளினால் மேற்கொண்ட போர்க்குற்ற செயல்களை அரசாங்கத்தினால் நிரூபிக்க முடியும் என பாதுகாப்பு உயர் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

14 ஆண்டுகளுக்கு முன்னர் 48 பயணிகள் மற்றும் ஆறு சிற்பந்திகளுடன் பலாலியிலிருந்து ரத்மலானை நோக்கி பயணித்த விமானத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் சுட்டு வீழ்த்தினர்.

இரணைதீவுக்கு அருகாமையில் அமைந்துள்ள கடற்பரப்பில் இந்த விமானம் வீழ்த்தப்பட்டது.

கடற்படை சுழியோடிகள் இரணைதீவு கடற்பகுதியிலிருந்து சுட்டுவீழ்த்தப்பட்ட விமானத்தின் என்ஜினின் ஒருபகுதி இரண்டு இறக்கைகள் மற்றும் டயர்கள் ஆகியனவற்றை மீட்டுள்ளனர். (அ-2)

## அம்பாந்தோட்டையின் முன்னைய நிலைகுறித்து கவலைப்படும் மஹிந்த

(அம்பாந்தோட்டை)

கட்சி, கருத்து வேறுபாடுகள் இருந்த போதும் மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதில் சகலரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்ட விசேட அபிவிருத்தி கூட்டம் நேற்று முன்தினம் நிர்வாக கட்டடத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் கூறியவை வருமாறு,

அம்பாந்தோட்டை மாவட்டம் கடந்த ஆட்சிக்காலங்களில் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்ட மாவட்டமாகவே இருந்துள்ளது.

குறிப்பாக அம்பாந்தோட்டை, மொனராகலை, பதுளை மாவட்டங்களே இத்தகைய புறக்கணிப்புக்கு இலக்காகின.

கடந்த காலங்களில் அரசாங்க அமைச்சர்கள் பலர் இப்பகுதியை பிரதிநிதித்துவப் படுத்தி பாராளுமன்றத்தில் இருந்த போதும் தெற்கின் இத்தகைய மாவட்டங்களுக்கு கவனிப்பு மிகக் குறைவாகவே இருந்தது. சிற்றன்னைக் கண்ணோட்டமே இந்த மாவட்டங்கள் மீதிருந்தன.

வெள்ளையர்கள் புகையிரதப் பாதை அமைத்தபோது கூட அதனை மாத்தறையோடு நிறுத்தினர்.

யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்பிற்கும் நேரடி புகையிரத பாதைகள் அமைக்கப்பட்ட போதும் கூட அம்பாந்தோட்டைக்கு புகையிரதப் பாதை அமைப்பது தொடர்பில் அலட்சியப் போக்கே தொடர்ந்தது.

அதன் பின்னர் பல வருடங்கள் கழிந்தும் இதுவரை ஒரு அங்குலமாவது புகையிரதப் பாதை அமைப்பு இடம்பெறவில்லை. இந்த வருடத்திலாவது இதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் சீன அரசாங்கமும் எமக்கு கடனுதவியை வழங்கியுள்ளது.

அரசியல் பிரச்சினைகள் இருந்தபோதும் மக்களுக்கான அபிவிருத்தியில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என்றார். (அ-2)



கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் மக்கள் பேரணி ஒன்று கடந்த வியாழக்கிழமை மாலை முன்னாள் இராணுவ தளபதி சரத்பொன்சேகா தலைமையில் நடத்தப்பட்டது. இந்த பொதுக்கூட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பாலித ரங்கே பண்டார, அசோக்க அபேசிங்க, பாலித தேவாரப் பெரும, மாகாணசபை உறுப்பினர்களான ஸ்ரீலால் லக்திலக்க மற்றும் மைத்திரிபால குணதிலக்க ஆகியோர் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*வி.ராங்கன் , தெல்லிப்பழை*

வியாசேர்!

அலைந்து திரிந்து காதலிப்பவர்கள் ஆண்களா? பெண்களா?



**தூ!.... விளங்கவில்லை.... இதுகூடவா விளங்கவில்லை. வீதிகளில் இறங்கிப்பாரும், எல்லாம் புரியும்...**

*சு.சுயந்தன் , இருபாலை*

வியா!

நீர் பெரீ....ய...கில்லி எனப் பேசிக் கொள்கிறார்கள். உண்மை தானா?

**அட அந்த உண்மையும் வெளியில் கசியத் தொடங்கி விட்டதா?**

*சஜிதா , கந்தர்மடம்*

வியாசரே!

இலங்காபுரி முழுவதையும் தமிழர்கள் ஆண்டு வந்தால் எவ்வாறு இருக்கும்?

**கனவு காண்பதற்கும் கற்பனை செய்வதற்கும் ஒரு அளவு இருக்க வேண்டும்.**

## நல்ல குருவை எப்படி இனம் காண்பது?

*எம்.மிதுளா, அரியாலை*

வியாசரே!

உண்ணும் போது புரக்கேறினால் யாராவது நினைக்கிறார்கள் என்று அர்த்தமா?

**அட! நீர்வேற புரக்கேறுகிறவர்தான் யாரையோ நினைத்துக் கொண்டு உண்ணுகிறார்.**

*ஆர். துளசி, உரும்பிராய்*

வியாசரே!

ஒரு மனிதன் தான் பிறந்த நாட்டிற்கு செய்ய வேண்டிய கடமை என்ன?

**நல்ல கேள்வி. பதிலைச் சொல்லி என்னதான் நடக்கப்போகுது. நமக்கு நாடே வெறுத்துப் போச்சே.**

*ஆர். லக்ஷி, உரும்பிராய்*

அறிஞர் வியாசரே!

என்னை 3 ஆண்கள் சுற்றி வருகிறார்கள். அவர்களில் யார் என்னை உண்மையாகக் காதலிக்கிறார் என்பதை எப்படி அறிவது?


**யாரங்கே! வாள் எங்கே! அந்தக் கன்னிகையை மூன்றாக வெட்டி ஆளுக்கொரு துண்டாகக் கொடுங்கள்.... இப்படியொரு நாடகம் நடத்திப்பாரும் உண்மை தெரிய வரும்.**

*எஸ்.மாதுளன், சுண்டுக்குளி*

வியா சேர்!

சினிமாக் கலாசாரம் நம்ம பெண்களிடம் ஒட்டிக் கொள்வதேன்?

***அதே கலாசாரம் நம்ம ஆண்களிடம் பற்றிக் கொள்வதால்***




*க.சி.சதாசிவம், மட்டுவில்*

அன்பான வியாசரே!

சுலபமானது எது? கேள்வி கேட்பதா? பதில் சொல்வதா?

***பதில் கூறத் தெரியாதவனுக்கு கேள்வி கேட்பது சுலபம். கேள்வி கேட்கத் தெரியாதவனுக்கு பதில் சொல்வது சுலபம்.***

*சு.ஜெயரூபன், பருத்தித்துறை*

வியா!

மாயன் கலண்டரில் குறிப்பிட்டது போல இந்த 2012 இன் இறுதியில் உலகம் அழியுமா?

***ஐயா ஜெயரூபா இப்போதே உலகம் அழிந்து கொண்டுதான் இருக்கிறது.***

*தர்மிலா, நெல்லியடி*

வியா சேர்!

இன்றைய இளைய தலைமுறையினர் விவேகானந்தரின் சிந்தனைகளை படிக்கிறார்களா? விஜயின் சிரிப்பை ரசிக்கிறார்களா?

***விவேகானந்தரா? அவர் யார் என்றல்லவா கேட்கிறார்கள்.***

*சுதர்சன், நெல்லியடி*

வியா சேர்!

ஆபத்தில் உதவும் எதிரியை நண்பனாக ஏற்கலாமா?

***ஆபத்தில் உதவாத நண்பனைவிட ஆபத்தில் உதவும் எதிரி சிறந்தவன்***



**உயர்ந்த வீடுகள், உருக்குலைந்து போன உறவுகள், விரசம் மிக்க வாலிபங்கள்...**

## தற்போது யாழ்ப்பாணத் தின் வீதி அபிவிருத்தி பற்றி யாது நினைக்கிறீர்கள்?

*சத்தியன், கந்தர்மடம்*

வியா சேர்!

நல்ல குருவை எப்படி இனம் காண்பது?

***சத்தியன் முதலில் நீர் நல்ல மாணவனாக இரும். அப்போது நல்ல குருவை இனம்காணும் இயல்பைப் பெறுவீர்.***

*எஸ்.சுதாசினி, நெல்லியடி*

வியாசேர்!

21ஆம் நூற்றாண்டின் இயல்பு வாழ்வில் நீர் கண்டது என்ன?

*பி.விஷ்ணு, வேலணை*

வியாசேர்!

தற்போது யாழ்ப்பாணத் தின் வீதி அபிவிருத்தி பற்றி யாது நினைக்கிறீர்கள்?

***பலபேரின் விதியை முடித்து விட்டது. இன்னும் முடித்துக் கொண்டிருக்கிறது.***

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் கேள்விகளை**
**ஆசிரியர், வியாசர் பதில்கள்,**
**இல.3, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

குறிப்பு: 10 சொற்களுக்குட்பட்டிருக்கும் கேள்விகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

# சர்வதேச சிறுவர் முதியோர் தின விழா

(பூந்தோட்டம்)

வெங்கலச் செட்டிகுள பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா பிரதேச செயலக முன்றலில் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலாளர் என்.கமலதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர, சிறப்பு விருந்தினராக செட்டிக்குளம் கோட்டக்கல்வி பணிப்பாளர் கே. நித்தியானந்தம், கௌரவ விருந்தினராக சர்வதேச தொழிலாளர் நிறுவன தேசிய திட்ட இணைப்பாளர் சு.சிவப்பிரகாசம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், முதியோர்களுக்கான பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சிறுவர், முதியோரின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதுடன் செட்டிக்குள கோட்ட மட்ட பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற கவிதை, கட்டுரை பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(அ-9-266)

# புலம்பெயர் தமிழர்களுடன் அரசாங்கம் கலந்துரையாடல்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

புலம்பெயர்ந்த தமிழர்களுடன் இலங்கை அரசாங்கம் விரைவில் கலந்துரையாட உள்ளது.

இந்நிகழ்வு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஊடகத்துறை அமை ச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் .

வடக்கு கிழக்கில் அபிவிருத்திகளை முன்னெடுக்கும் முகமாகவே இந்த கலந்துரையாடல் ஏற்பாடாகியுள்ளது.


இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட நிலையில் நிலைமையை சீர்செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இல்லையேல் இன்னும் 15 வருடங்களில் பயங்கரவாதம் நாட்டில் தலைதூக்கும்.

இதேவேளை கே.பியை பயன்படுத்தி புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் பேச்சு நடத்தப்படுகின்றது.இதுவரை நடத்தப்பட்ட பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளன.இதனூடாக புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரவும் அபிவிருத்திக்கு பங்களிக்கவும் முடியும் என்றார்.

(அ-2)

# ஓமந்தையில் விபத்து; ஒருவர் படுகாயம்



(பூந்தோட்டம்)

வவுனியா ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் இடம்பெற்ற விபத்துதொன்றில் வான் ஒன்றின் சாரதி காயமடைந்து வவுனியா பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.45 மணியளவில் இடம்பெற்றது. இவ் விபத்தில் முல்லைத்தீவில் இருந்து கொழும்பு நோக்கி மீன் ஏற்றிச் சென்ற வான் ஒன்றுடன் டிப்பர் வாகனம் மோதியதில் வான்சாரதி படுகாயமடைந்தார்.

விபத்து இடம்பெற்ற இடத்தில் விசாரணை நடத்திய ஓமந்தை பொலிஸார் டிப்பர் சாரதியை கைது செய்ததுடன் டிப்பர் வாகனத்தையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

(அ-2-266)

# குளவி கொட்டி ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

ஹற்றன்,டிக்கோயா,தரவளை மேற்பிரிவு தோட்டத்தில் குளவி கொட்டுதலுக்கு இலக்காகி 37 வயது நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

அத்துடன் மேலும் நால்வர் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.காட்டுப் பகுதியொன்றில் விறகு வெட்டச் சென்ற மேற்படி நபரை குளவிகள் சூழ்ந்து கொட்டியுள்ளன.

இந்த நிலையில் குளவி கொட்டுதலுக்கு உள்ளானவர்களை தோட்ட மக்கள் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது இடைவழியில் குறிப்பிட்ட நபர் உயிரிழந்துள்ளார்.

(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெய்ரூட்டில் குண்டுவெடிப்பு! 8 பேர் பலி; 78 பேர் காயம்



(பெய்ரூட்)

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் அஷ்ராபியா சஸ்சின் எனும் சதுக்கத்தில் தரித்து நின்ற கார் ஒன்று திடீரென வெடித்துச் சிதறியதில் 8 பேர் உயிரிழந்தனர். 78 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. பெய்ரூட்டில் மக்கள் நடமாட்டம் அதிகமிருந்த போது காரில் வைக்கப்பட்ட சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததால் சேதம் அதிகமாக ஏற்பட்டது.

இதனையடுத்து தகவலறிந்த அம்புலன்ஸ் வாகனங்கள் அவ்விடங்களை நோக்கி விரைந்ததுடன் காயமடைந்தோர் விரைவாக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

குண்டுவெடித்த அஷ்ராபியா பகுதியில் கிறிஸ்தவர்கள் அதிகம் வசிப்பதாலும் முன்னாள் பிரதமர் ஷாத் ஹரிரி தலைமையிலான 14 மார்ச் கூட்டணி பொதுச் செயலகத்தை குறிவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் எம்.பி. ஒருவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இத்தாக்குதலில் லெபனான் உள்நாட்டு பாதுகாப்பு படைகளின் புலனாய்வுத்துறை தலைவர் ஒருவர் கொல்லப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டுப்போர் காரணமாக லெபனானிலும் பதற்றம் அதிகரித்திருப்பதும் கடந்த 4 வருடங்களில் லெபனானில் இடம்பெற்றிருக்கும் மிகப்பெரிய கார் குண்டுதாக்குதல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

உலக தரிசனம்

# ஆப்கானில் குண்டுவெடிப்பு; 19 பேர் பரிதாப மரணம்



ஆப்கானிஸ்தானில் குண்டுவெடித்ததில் திருமணத்திற்கு சென்ற 19 பேர் உயிரிழந்தனர். 16 பேர் படுகாயமடைந்தனர். ஆப்கானிஸ்தானில் தவ்லத் அபாத் மாகாணத்தில் மினி பேருந்து ஒன்றில் திருமணத்திற்கு பெண்கள், குழந்தைகள் என பலர் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது வீதியில் வைக்கப்பட்டிருந்த சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் மினி பேருந்து வெடித்து சிதறியது. இதில் பயணித்த 19 பேர் பலியாகினர். 16 பேர் படுகாயமடைந்தனர். தலிபான்கள்தான் இதற்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (அ-2)

# அமெரிக்காவிடமிருந்து போர் விமானங்கள் வாங்குகிறது ஈராக்

தனது விமான படையை பலப்படுத்தும் நடவடிக்கையாக ஈராக் அரசு அமெரிக்காவிடமிருந்து 36 போர் விமானங்களை வாங்க முடிவு செய்துள்ளது.

இப் போர் விமானங்கள் எப்.16 ரகத்தை சேர்ந்தவை ஆகும். முதற் கட்டமாக 18 போர் விமானங்கள் வாங்குவதற்கு அமெரிக்கவுடன் ஈராக் கடந்தாண்டு செப்டெம்பர் மாதம் ஒப்பந்தம் செய்து கொண்டது.

இந்த விமானங்கள் அடுத்த ஆண்டு செப்டெம்பர் மாதம் ஈராக்கிற்கு வழங்கப்படும். இதன் விலை 3 பில்லியன் டொலர்கள் ஆகும்.

இந்நிலையில் தற்போது மேலும் 16 போர் விமானங்களை வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் அமெரிக்காவுடன் ஈராக் கையெழுத்திட்டது.

இந்த விமானங்கள் 2018 ஆம் ஆண்டு ஈராக் வந்துசேரும் இந்த தகவல்களை ஈராக் இராணுவ அமைச்சர் பொறுப்பு வகிக்கும் சதாவுன் அல் துலாய்மி தெரிவித்தார். (அ-2)

# வாலிபருக்கு முகமாற்று சிகிச்சை; மருத்துவர்கள் சாதனை

## 36 மணிநேர போராட்டம்



துப்பாக்கி சூட்டினால் உருக்குலைந்து போன வாலிபரின் முகம் 36 மணிநேர முகமாற்று அறுவை சிகிச்சைக்கு பின் தற்போது நல்ல நிலையில் செயற்படுகிறது.

அமெரிக்காவை சேர்ந்தவர் ரிச்சர்ட் லீ நோரிஸ் (வயது 37) மன வருத்தத்தினால் 1997 ஆம் ஆண்டு துப்பாக்கியால் முகத்தில் சுட்டு கொண்டார். இதில் அவரது முகம் சிதைந்தது, தாடை உருக்குலைந்து போனது, மூக்கும் நாக்கும் காணாமல் போயின.

உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நோரிஸ் தீவிர சிகிச்சையால் உயிர் பிழைத்தார்.

மற்றவர்களிடமிருந்து பெறப்பட்ட தாடை, மூக்கு, நாக்கு ஆகியவை இவருக்கு பொருத்தப்பட்டன. கழுத்து பகுதியிலிருந்து திசுக்கள் எடுத்து முகத்தில் வைக்கப்பட்டன.

இதன் மூலம் தற்போது இவரது மூக்கு வாசனையை உணர ஆரம்பித்துள்ளது. நாக்கு சுவையை உணர்கிறது. பேச்சு மட்டும் முழுமையாக வரவில்லை.

மார்ச் மாதம் முகமாற்று அறுவைச்சிகிச்சை முடிந்தாலும் இந்த மாதம் வரை அவர் தொடர் சிகிச்சைகளை மேற்கொண்டு வந்தார்.

இரண்டு நாட்களுக்கு முன் தான் இவருக்கான தொடர் சிகிச்சை முடிவுக்கு வந்தது. தற்போது அவர் முகமூடி இல்லாமல் அழகான நபராக வெளியே நடமாடும் அளவுக்கு தேறியுள்ளார். (அ-2)

# அல்கொய்தா அமைப்பே அமெரிக்காவின் முதல் எதிரி

## அமெரிக்க ஜனாதிபதி தெரிவிப்பு

அல்கொய்தா பயங்கரவாத இயக்கத்தின் தலைவர்கள் பலர் கொல்லப்பட்ட பின்பும் அந்த இயக்கம் இயங்கி வருவதாக ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சமீபத்தில் அளித்த பேட்டியொன்றில் சர்வதேச பயங்கரவாத இயக்கமான அல்கொய்தா இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

தப்பி பிழைத்தவர்கள் வட ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் பதுங்கி உள்ளனர். ஈராக்கிலிருந்து அமெரிக்கா தனது படைகளை வாபஸ்பெற்று கொண்டது.

இதேபோன்று ஆப்கானிஸ்தானிலிருந்தும் வெளியேறிவிடுவோம். அல்கொய்தா மற்றும் அதன் தலைமை மீது தகுந்த நடவடிக்கை எடுத்துள்ளோம் என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அல்கொய்தா பயங்கரவாத இயக்கத்தின் தலைவர்கள் பலர் கொல்லப்பட்ட பின்பு அந்த இயக்கம் வலுவிழந்தது போல் காணப்பட்டாலும் அதுதான் அமெரிக்காவின் முதல் எதிரி என்று ஒபாமாவின் செய்தித்தொடர்பாளர் தெரிவி த்துள்ளார். (அ-2)

# உளவு பார்க்க இளைஞர்களை தெரிவு செய்யும் பிரிட்டன்

(பிரிட்டன்)

உளவு பார்ப்பதற்கு 18 வயதுக்கு உட்பட்டவர்களை இங்கிலாந்து அரசு தெரிவு செய்து வருகிறது. தொழில்நுட்ப வளர்ச்சியால் உலகளவில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இணையம் மூலம் தீவிரவாதிகள் பல்வேறு தகவல்களை சதித் திட்டங்களாக பரிமாறி வருகின்றனர்.

அத்துடன் சில சமூக விரோதிகள் ஏனைய முக்கிய அமைப்புகளின் கடவுச் சொல்லை திருடி இரகசியங்களை தெரிந்து கொண்டு சதித் திட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

இவற்றை தடுக்க ஒவ்வொரு நாடும் போராடி வருகின்றது. இந்நிலையில் சைபர் தீவிரவாதம் பாஸ்வேர்டு திருட்டு போன்ற பிரச்சினைகளை சமாளிக்க 18 வயதுக்கு உட்பட்ட பதின்ம வயது வாலிபர்கள், இளம்பெண்களை இங்கிலாந்து அரசு தெரிவு செய்து வருகிறது.

பெரும்பாலும் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற சிறந்த மாணவர்களே உளவு பார்க்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இப்போது முதல் முறையாக 18 வயதுக்கு உட்பட்டவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இத்திட்டத்தை வெளி விவகாரத்துறை அமைச்சர் வில்லியம் ஹாக் அறிவித்தார். அவர் கூறுகையில், வாலிபர்களும் இளம் பெண்களும் தான் நாட்டில் வருங்கால வெற்றிக்கு தூணாக உள்ளனர். 2 ஆம் உலகப் போரில் இளம் வயதினர் முக்கிய பங்கு வகித்தனர் என்றார். (அ-2)



கடந்த ஒரு வருடகாலமாக நடைபெற்று வந்த மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் எதிர்வரும் 28 ஆம் திகதி மக்களின் பார்வைக்கு அமெரிக்க சுதந்திரதேவி சிலை திறக்கப்படவுள்ளது. சிலை உள்ள பகுதியில் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்க கடற்படை உலங்கு வானூர்தியைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளன வடமாகாணக் கிளையினால் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வின் போது வெள்ளைப் பிரம்பு விழிப்புணர்வு ஊர்வலம் இடம் பெற்றதையும் மாணவன் ஒருவன் நிகழ்வில் பங்கேற்றதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.

# சிறுகைத்தொழில்களை மேம்படுத்துவது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் ஆராய்வு

(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் வடகடல் நிறுவனத்தின் செயற்றிட்ட மீளாய்வு பற்றியும் பனை, தென்னை சார்ந்த கைத்தொழில் துறை மேம்படுத்தும் பொருட்டு முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் பற்றியும் மட்பாண்ட தொழிற்றுறையை நவீன இயந்திரங்களை வடிவமைத்து மேம்படுத்துவது பற்றியும் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இதற்கமைய வடகடல் நிறுவனத்தின் செயற்றிட்ட மீளாய்வு தொடர்பாக அமைச்சர் கருத்துரைக்கையில்

வடகடல் நிறுவனத்தின் கீழ் குருநகர், லுணுவில மற்றும் வீரவில ஆகிய பகுதிகளில் இயங்கி வரும் மீன்வலைத் தொழிற்சாலைகளினதும் செயற்றிட்டங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

வடகடல் நிறுவனத்தினதும் அதன் கீழான தொழிற்சாலைகளினதும் அது சார்ந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட அது சார்ந்தவர்களது பொருளாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டதாக செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் நடைமுறையில் எமது அமைச்சின் கீழான தொழிற்றுறை செயற்றிட்டங்கள் இலகுவாகவும் சரியாகவும் திறமையாகவும் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் குறிப்பிட்ட மீன்வலை தொழிற்சாலைகளின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு மூலப் பொருட்களின் கொள்வனது உற்பத்திகளின் சந்தைவாய்ப்புத் தொடர்பிலும் துறை சார்ந்தவர்கள் உரிய கவனமெடுத்து இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்காக ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை, பனை, தென்னை சார்ந்த கைறொழிற்றுறையை நவீனமயப்படுத்தி மேம்படுத்துவது தொடர்பில் அமைச்சர் தெரிவிக்கையில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளின் பனை, தென்னை சார்ந்த கைத்தொழிற்றுறைகளை நவீனப் படுத்தி மென்மேலும் மேம்படுத்தும் பொருட்டு, முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்றி ட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக துறைசார்ந்தவர்களுக்கு டிப்ளோமா பயிற்சிநெறியை, கைத்தொழிற்றுறையை வளர்தெடுக்கும் நோக்கில் ஆராயப்பட அதேவேளை, பயிற்சிப்பட்டறைகள் , பயிற்சித்திட்டங்களை வழங்குவதனூடாக பனை, தென்னை சார்ந்த சிறிய, நடுத்தர மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களை நவீன தொழில் நுட்பத்துடன் மேம்படுவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே திராட்சைப்பழம் சார்ந்த உற்பத்திகளை நவீன தொழில்நுட்பத்துடன் மென்மேலும் மேம்படுத்துவதற்கு கித்துள் சார்ந்த உற்பத்திகளை நவீனப்படுத்தி அவற்றினது சந்தை வாய்ப்பு ,இதனூடாக துறை சார்ந்த வாழ்வாதார மேம்பாடு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் மட்பாண்ட தொழிற்றுறையை நவீன இயந்திரங்களை வடிவமைத்து மேம்படுத்துவது தொடர்பில் அமைச்சர் ஆராய்கையில் ,

மட்பாண்டத் தொழிற்றுறையில் தற்போது பாவனையில் உள்ள இயந்திர சாதனங் களை நவீன மயப்படுத்துவதன் மூலம் அவற்றின் உற்பத்திகளை உயர் தொழில்நுட்பத்துடன் தரமானதாகவும் விரைவாகவும் உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தை வாய்ப்புகளுக்கு ஏற்ற வகையில் முன்னெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக மட்பாண்ட உற்பத்திகளுக்கு ஏற்ப மண்ணை பதப்படுத்துவது , வடிவமைப்பது உள்ளிட்ட மூன்று வகையான வெவ்வேறு இயந்திர சாதனங்களை நவீனப்படுத்துவது தொடர்பாக கிடைக்கப்பெறக் கூடிய பயன்பாடுகள் தொடர்பிலும் அமைச்சர் துறை சார்ந்தவர்களிடம் கேட்டறிந்தார்.

இதன் பிரகாரம் அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்பதாக புதிய உயர் தொழில் நுட்ப இயந்திர சாதனங்களை வடிவமைப்பது தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு துறைசார்ந்தோரிடம் அமைச்சர் அவர்கள் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனிடையே வாழைநார் சார்ந்த உற்பத்திகள் தொடர்பில் மாத்தறையைச் சேர்ந்த பிய சேன கொடிகார என்பவரால் வடிவமைக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களை பார்வையிட்டதுடன் அது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. (அ-2)

# 8 மில்லியன் இந்தியர்கள் வறுமையில் வாடுகின்றனர்

## ஐ.நா. அதிர்ச்சித் தகவல்

ஆசியாமற்றும் பசுபிக் பகுதிகளில் உணவு, பணவீக்கம் காரணமாக சுமார் 4 மில்லியன் மக்கள் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

குறிப்பாக உணவுப் பொருட்களின் கடுமையான விலையேற்றம் காரணமாக 8 மில்லியன் இந்தியர்கள் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

விவசாய உற்பத்தி பாதிப்பு, உரங்களின் விலையேற்றம், விவசாய நிலங்கள் போதியளவில் இல்லாதது, வறட்சி, எண்ணெய் விலை ஏற்றம் உள்ளிட்டவைகளும் இந்த வறுமை நிலைக்கு முக்கிய காரணம் என ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் உணவு மற்றும் விவசாய கழகம் தெரிவித்துள்ள தகவலின்படி ஒரு குடும்பத்தின் வருமானத்தில் 65 சதவீதத்திற்கும் அதிகமான பணம் உணவிற்காக செலவிடப்படுகிறது.

வங்கதேசம், நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளில் உணவு பொருட்களின் விலை குறைவாகவே உள்ளதாகவும் அதனால் அவர்கள் உணவிற்காக செலவழிக்கும் தொகை குறைவானது எனவும் ஐ.நா. தெரிவித்துள்ளது. (அ-2)


குறைந்த கட்டணத்திலான பொதிகள் சேவைகள்

உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு உணவு, உடை, அலங்காரப் பொருட்கள், ஆவணங்கள், கடிதங்கள், CD ஆகியவற்றை அனுப்பலாம்.

சுவிஸ் - 1kg - 600/-
கனடா - 1kg - 700/-
லண்டன் - 1kg - 600/-
5 நாட்களில் ஒப்படைக்கப்படும். 3 கிலோவுக்கு மேல் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

அவுஸ்திரேலியா - 1kg - 1000/-
ஜேர்மனி - 1kg - 1000/-
5 கிலோவிற்கு மேல் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

அத்துடன் ஏனைய ஐரோப்பிய மத்திய கிழக்கு நாடுகள், இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கும் குறைந்த கட்டணத்தில் எமது சேவைகளை பெற்றுக் கொள்ளலாம்.
வாடிக்கையாளரின் நன்மைகருதி உங்கள் பிரதேசங்களில் உங்களிடம் நன்மதிப்பை பெற்ற பின்வரும் வியாபார ஸ்தாபனங்களில் உங்கள் பொதிகளை ஒப்படைக்கலாம்.

நெல்லியடி - மருதம் கொம்னிக்கேசன் 0212263210
அச்சுவேலி - லிபேட்டி கொம்னிக்கேசன் 0217451245
பருத்தித்துறை - LANDMARK புத்தகசாலை 0750389869
வல்வெட்டித்துறை - V2 TRAVELS and TOURS 0212055044
கோண்டாவில் - பாரதி கொம் - 0212225148
உரும்பிராய் - அருள்விநாயகர் கொம்னிக்கேசன் 0212230623
சுன்னாகம் - TECH ELECTRONICS - 0214916263
சங்கானை - திருமகள் தொலைத்தொடர்பு - 0212250061
பண்டத்தரிப்பு - Funcity - 0217429390
வேலணை - SKR கொம்னிக்கேசன் - 0217390360
சாவகச்சேரி - S.நிலமறங்கன் - 0212270231
ஆனைக்கோட்டை - புவன மல்ரி சென்ரர் - 0779194171

மேற்குறிப்பிட்ட ஸ்தாபனங்கள் எமது ஸ்தாபனத்துடன் இணைந்து இவ் சேவையை செய்கின்றன. உங்கள் பொதிகளை அவர்களிடமும் ஒப்படைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

RAINBOW TRAVELS
இல.30/2, 3 ஆம் ஒழுங்கை, மின்சார நிலையம் வீதி, யாழ்ப்பாணம்.
Tel:- 0212219596 (சி-1354)


# 13 ஆம் திருத்த சட்டமூலம் பிரச்சினைக்கு தீர்வாகாது

## ஜே.வி.பி. விஜித ஹேரத் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

13 ஆம் திருத்தச் சட்டம் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என ஜே.வி.பி. கட்சி தெரிவித்துள்ளது.அவர் மேலும் தெரிவிக்கையில், அதன் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு 13 ஆம் திருத்த சட்டத்தின் ஊடாக தீர்வு காண முடி யாது என்பதனை ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் உணர்ந்து கொண் டுள்ளனர்.

இந்த விடயத்தை ஜே.வி.பி. கடந்த 1987 ஆம் ஆண்டே புரிந்து கொண்டது.


13 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சம உரிமைகள் அளிக் கப்பட வேண்டும்.

எனினும், அவ்வாறான ஓர் விடயம் இத் திரு த்தச் சட்டத்தின் ஊடாக நடைபெறவில்லை.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விவகாரத்தில் 13 ஆம் திருத்தச் சட்டம் தடையாக அமைந்துள்ளது.

[illegible] தீர்வுத் திட்டங்களை மக்கள் எதிர்க்க வேண்டும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாடசாலைகளுக்கு இடையிலான காற்பந்து நாளை ஆரம்பம்

2012 ஆம் ஆண்டுக்கான பாடசாலைமட்ட காற்பந்தாட்டப் போட்டிகள் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நாளை திங்கட்கிழமை 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

ஆண்டு இறுதிக் காலப்பகுதியில் பாடசாலைமட்ட 13,15,19 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான காற்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று வருவது வழக்கம். அதனடிப்படையில் இவ்வருடத்திற்கான போட்டிகள் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்றும் அணிகளுக்கிடையிலான பயிற்சி ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்குமிடையில் நேற்று முன்தினம் பயிற்சிப் போட்டி நடைபெற்றது.

# கரம் சுற்றுப்போட்டி

யாழ். மாவட்டம் கரம் சங்கம் நடத்தும் திறந்த பிரிவிற்கான கரம் சுற்றுப்போட்டி எதிர்வரும் 27,28,29ஆம் திகதிகளில் யாழ். மத்தி கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குகொள்ள விரும்பும் வீரர்கள் போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தினை யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் மோகனிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவத்தினை எதிர்வரும் 24 ஆம் திகதிற்கு முன்னர் பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு யாழ். மாவட்ட கரம் சங்கச் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# உதைபந்தாட்ட முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பணக்கல்லூரிக்குமிடையில் மகாஜனாக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டத்தில் 14 வயது பிரிவிற்கான போட்டியில் மகாஜனக் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. 16 வயது பிரிவிற்கான போட்டியில் மகாஜனாக் கல்லூரி அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

18 வயதுப் பிரிவிற்கான போட்டியில் மகாஜனக்கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. 21 வயதுப்பிரிவிற்கான போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல்களைப் பெற்றதனால் போட்டி சமநிலையில் முடிவுற்றது. (23)

# வடமாகாண வீரர்கள் பங்கு பற்றிய இலங்கை யுனிற்றி அணி இரு வெற்றி



வடமாகாண வீரர்கள் 7 பேர் உட்பட சிங்கப்பூர் சென்ற இலங்கை யுனிற்றி அணியானது விளை யாடிய இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

முரளி கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் சிறந்த பெறுபேறுகள் காட்டிய யாழ்ப்பாண வீரர்கள் இருவர் முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் தலா ஒவ்வொரு வீரர்களும் மட்டக் களப்பிலிருந்து இரண்டு வீரர்களும் அடங் கலாக யுனிற்றி என்ற இலங்கை அணி சிங்கப் பூரிற்கு சென்றது. அங்கு இரண்டு இருபது-20 போட்டிகளில் பங்குபற்றியது.

சிங்கப்பூர் கிரிக்கெட் கழகத்திற்கும் யுனிற்றி அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடு த்தாடிய யுனிற்றி அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங் களைப் பெற்றது. அதிகபட்சமாக மட்டக்களப்பு வீரர் சஞ்சீவ் 70 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பதிலளித்தாடிய சிங்கப்பூர் கிரிக்கெட் கழக அணி 18 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 102 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இரண்டாவது போட்டியில் சிங்கப்பூர் லங்கா லயன் கழக அணியுடன் நடைபெற்றது. மழை காரணமாக அப்போட்டி 18 ஓவர்கள் கொண்ட போட்டிகளாக நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய யுனிற்றி அணி 18 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வீரர் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். புனித பற்றிக்ஸ் வீரர் ரியூடர் 35 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பதிலளித்தாடிய லங்கா லயன்ஸ் அணி 17 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 126 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

# சென்றலைஸ்சை வீழ்த்தியது கொக்குவில் K.C.C.C



சென்றலைஸ் அணிக்கும் கொக்குவில் K.C.C.Cஅணிக்கும் இடையிலான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் கொக்குவில்K.C.C.C அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைஸ் அணி 42 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த 181 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டது.

அதிகபட்சமாக ஜெனோசன் 36 ஓட்டத்தினையும், லதுாசனன் 35 ஓட்டத்தினையும், ஜெம்ஸ் ஜெசன் 31 ஓட்டத்தினையும் மயூரம் 20 ஓட்டத்தினையும் அதிக பட்சமாக பெற்றனர்.

பந்துவீச்சில் கிருபவன் 10 ஓவர்கள் பந்துவீசி 40 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும் யனுதான் 9ஓவர்கள் வீசி 41 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும்,

உத்தமகுமரன் 9 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2விக்கெட்டினையும் கைப்பற்றினார்.

182 ஓட்டத்தினை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் K.C.C.C அணி அவ் இலக்கினை 41.3 ஓவர்களில் 8 விக்கெட்டினை இழந்து பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் உமாநாத் 48 ஓட்டத்தினையும் ராகுலன் ஆட்டமிழக்காது 42 ஓட்டத்தினையும் உத்தமகுமரன் 28 ஓட்டத்தினையும் ஆதித்தன் ஆட்டமிழக்காது26ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் சார்ல்ஸ் 8 ஓவர்கள் பந்துவீசி 33 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டினையும் கோகுலன் 10ஓவர்கள் பந்துவீசி 55 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும் , பிரசாந் 6 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக ராகுலனும்,சிறந்த சகல துறை ஆட்டக்காரனாக உத்தமகுமரனும் சிறந்த துடுப்பாட்ட வீரர் ஆக உமாநாத்தும் ,சிறந்த பந்து வீச்சாளராக சார்ள்ஸ்சும் சிற[illegible] களத்தடுப்பாளராக ஆதித்தனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னேதானே ஆட்சி செலுத்தாதவர்களை மற்றவர்கள் ஆட்சி செய்வார்கள்.
~இக்பால்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## கல்வி அபிவிருத்தி ஏற்பட வேண்டுமாயின் பாடசாலைக் கட்டுமானம் பற்றி சிந்திக்க வேண்டும்

கல்வி அபிவிருத்தி பற்றி சிந்திப்பவர்கள் முதலில் வகுப்பறைக் கற்றல் செயல்பாடு பற்றியும் ஆசிரியர்களின் வாண்மை விருத்தி பற்றியும் நிச்சயம் சிந்தித்தாக வேண்டும்.

வகுப்பறையில் கற்றல் செயற்பாடு இடம்பெறவில்லையாயின் மாணவர்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க ஆசிரியர்களால் முடியவில்லையாயின் எத்தனை இடமாற்றத் திட்டங்களைக் கொண்டுவந்தாலும் கல்வி அடைவு மந்தமானதாகவே இருக்கும்.

அதேநேரம் பாடசாலை நிர்வாகத்தில் அதிபரின் நிர்வாகத் திறன் என்பது மிகவும் முக்கியத்துவமானது.

அதிபரின் சிந்தனை மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை சமூகத்துடன் அவரின் அணுகுமுறைகள் என்பன பாடசாலையின் ஒழுங்கு கட்டுப்பாடு, கற்றல் செயற்பாட்டில் காத்திரமான பங்கைக் கொண்டுள்ளது.

எனினும் துரதிர்ஷ்ட வசமாக அதிபர்கள் அடிக்கடி மாற்றப்படுகின்றனர்.

இவ்வாறான மாற்றம் என்பது குறித்த அதிபர்கள் விண்ணப்பிப்பதனாலேயே இடம்பெறுவதனால் அடிக்கடி இடம்பெறும் அதிபர்களின் இடமாற்றம் குறித்து தனியே கல்வி அதிகாரிகளை மட்டும் குறை கூறி விடமுடியாது.

ஒரு பாடசாலையில் அதிபர் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் அந்தப் பாடசாலையை நல்ல நிலைக்கு கொண்டுவந்து சாதனை படைப்பதே சிறந்த அதிபர்களிற்கான இலட்சணமாகும்.

எனினும் எல்லாப் பாடசாலைகளிலும் 'எங்கள் பாடசாலை அதிபர்கள்' என்ற புகைப்படக் காட்சியில் தங்கள் புகைப்படமும் இடம்பெற வேண்டும் என்ற நப்பாசையில் எல்லாப் பாடசாலைகளின் கதிரைகளிலும் ஓடிஓடி குந்துகின்ற கலாசாரம் தொடர்கின்றது.

இது தவிர சில அதிபர்களை தங்கள் பாடசாலைக்கு இழுத்துச் சென்று தாங்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டம் போட வைக்கின்ற பண்பாடும் எங்கள் மண்ணில் நடந்தேறுகின்றன.

இதன் காரணமாக எந்தப்பாடசாலையையும் முன்னேற்ற முடியாத சிக்கல் ஏற்படுகின்றது.

ஒரு பாடசாலையில் அதிபர் வெற்றிடம் ஏற்பட்டால் அல்லது ஏற்படுமென கருதினால் அதிபர் வெற்றிடம் ஏற்பட்ட மறு நாளே புதிய அதிபர் தனது பதவியை பொறுப்பேற்றாக வேண்டும்.

இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படாத பட்சத்தில் குறித்த பாடசாலை நிர்வாகம் கட்டுப்பாட்டை இழந்து போகும்.

எனவே கல்வி அபிவிருத்தி பற்றி சிந்திப்பவர்கள் முதலில் பாடசாலைக் கட்டுமானம், வகுப்பறைக் கற்றல் செயற்பாடு, ஆசிரியர்களின் வாண்மை விருத்தி பற்றி அதீத கவனம் செலுத்துவது அவசியம். இவற்றை செய்வதென்பது கல்வித்திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்த செயற்பாடாக இருப்பது மிகவும் முக்கியமாகும்.

## கட்டடம் இடிந்ததில் ஒருவர் காயமுற்றார்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புக்காக வீதியின் கரையில் இருந்த கட்டடத்தினை உடைத்த பொழுது அவ்வீதியூடாக மோட்டார் சைக்கிள்களில் பயணித்தவர் மீது கட்டடம் இடிந்து வீழ்ந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் இடம் பெற்றுள்ளது.

குறித்த வீதி அகலிப்பாளர்களால் ஒருவழிப்பாதை ஆக்குவதற்காக அகற்றப்பட்டு வருகிறது.

ஆயினும் குறித்த கட்டடம் உடைக்கப்பட்ட போது சமிக்ஞைகளோ அபாயக் குறியீடுகளோ அல்லது பாதை மறிக்கப்படவோ இல்லை என்றும் காயமடைந்தவர் தெரிவித்தார்.

குறித்தநபர்மீது கட்டடம் இடிந்து வீழ்ந்த போதிலும் அவர் அதிர்ஷ்டவச மாக சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-4)

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானப் பட்டமாணி (BSc.Degree) கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை பிறவுண் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

## மாணவர் கௌரவிப்பு திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தேசியமட்ட மெய்வல்லுநர் போட்டியில் பங்குகொண்டு வெற்றி பெற்ற வடமாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். ஆளுநர் பணிமனையில் நடைபெறவுள்ளதாக வட மாகாண கல்வியமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)

## நினைவஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கடந்த 1987ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 21, 22ஆம் திகதிகளில் கடமையின் போது மரணித்த யாழ்.போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் 25ஆவது நினைவஞ்சலி நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு யாழ்.போதனா வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது என வைத்திய சாலை பணிப்பாளர் திருமதி சிறி.பவானந்தராஜா அறிவித்துள்ளார். (ந-8)


## திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

V குழுமத்தினரின் வழிகாட்டி, V4 எடியுகேசனல் கொன்சல்ரன்சி, V2 ரவல்ஸ் அன் ரியூஆர், V எக்ஸ்கொரியர் ஆகிய அலுவலகங்கள் இன்று நெல்லியடியில் காலை 10 மணியவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (ந-8)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### தெய்வமிதுதானே



கல்லார்க்குங்கற்றவர்க்குங் களிப்பளிக்குந் தெய்வம்
காணாத காட்சியெல்லாங் காட்டுகின்ற தெய்வம்
நில்லாத நீர்ச்சடைமேல் நிற்கவைத்த தெய்வம்
நெற்றியின்மேலொற்றைக்கண் நேரவைத்த தெய்வம்
எல்லார்க்குந் தெய்வ மென்னுடைய தெய்வம்
இதையறிந்து வாழுவார் எல்லாருந்தெய்வம்
செல்லாரு மிலங்கையில் வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே

## நாற்காலி, சிலுவை இரண்டுமே அரியணைகள்தாம் நாற்காலியா, சிலுவையா? தேர்ந்துகொள்வோம்

செபதேயுவின் மக்கள் யாக்கோபும் யோவானும் இயேசுவை அணுகிச் சென்று அவரிடம் நீர் அரியணையில் இருக்கும்போது எங்களுள் ஒருவர் உமது வலப்புறமும் இன்னொருவர் உமது இடப்புறமும் அமர்ந்து கொள்ள எங்களுக்கு அருளும் என்று வேண்டினர்.

அரியணை பற்றி இன்று சிந்திப்போமானால் நாற்காலி, சிலுவை என்னும் இரண்டும் அரியணைகள் ஞாபகத்திற்கு வரலாம். நாற்காலி அரியணைக்காக உயிரைத் தந்தவர்களும் எடுத்தவர்களும் உண்டு. சிலுவையில் உயிரைத் தந்தவர்களும் எடுத்தவர்களும் உண்டு.

ஒருமுறை அன்னை திரேசாவுடன் ஒருநாள் முழுவதும் செலவிட்ட ஒரு பத்திரிகையாளர் அந்த நாள் இறுதியில் அன்னையிடம் *எனக்கு யாராவது பத்தாயிரம் டொலர்கள் தருகிறேன் என்றால்கூட இதுபோன்ற வேலைகளை நான் செய்யமாட்டேன்* என்றாராம். அதற்கு அன்னை தெரேசா அவரிடம் *நானும் அப்படித்தான். பத்தாயிரம் டொலருக்காக இந்த வேலைகளைச் செய்யமாட்டேன்* என்று பதில் சொன்னாராம். இப்படி பணிசெய்த அன்னை தெரேசாவைப் போல் எத்தனையோ தன்னலமற்ற பணியாளர்கள் மக்கள் மனதில் அரியணையில் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அரியணையில் ஏறுவதற்காக மக்களைப் படிக்கற்களாகப் பயன்படுத்திய பலரை வரலாறு மறந்துவிட்டது. மக்களும் மறந்துவிட்டனர். அன்னையை அல்ல.

உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையாக இருக்கவிரும்புகிறவர் அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும். இயேசுவின் இந்த வார்த்தைகள் நமக்கு ஒருபெரும் சவாலாக அமைகிறது. பணியாளர் தலைமைத்துவம் என்பது அண்மையில் பலராலும் பேசப்படும் ஒரு கருத்து.


பணியாளர் தலைமைத்துவம் பற்றி விக்கிபீடியாவில் தேடியபோது வரலாற்றில் பலர் சொன்ன கருத்துக்களோடு இயேசு இன்றைய நற்செய்தியில் சொன்ன கருத்துக்களும் உள்ளன. இயேசு என்ற தலைவர் அவருடைய சீடர்களின் பாதங்களைக் கழுவிய செயலும் பணியாளர் தலைமைத்துவத்தில் பல அம்சங்கள் உள்ளன. பரிவோடு குறைகேட்பது, மற்றவரை உற்சாகப்படுத்துவது, ஏனையவரின் திறமைகளை வெளிக்கொணர்வது... என இப்படிப்பல பேசப்படுகின்றன.

### பரமபிதா காட்டிய பாதை

11 வயதில் ஒரு சிறுவன் பங்குச்சந்தையில் ஈடுபட்டான். 14 வயதில் அந்தச் சிறு கம்பனியை ஆரம்பித்தான். இன்று தனது 79 ஆவது வயதில் 63 பெரும் நிறுவனங்களுக்கு அதிபராக இருந்து உலகின் பெரும் செல்வந்தர்களில் இரண்டாம் இடம் பிடித்திருக்கும் அவர் வாரன்பபெட். கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே எளிய வீட்டில் வாழ்கிறார். அது அரண்மனை அல்ல. தன் காரைத் தானே ஓட்டுகிறார். அவர் ஒரு விமானக் கம்பனியை நடத்தினாலும் சொந்த விமானம் இல்லை. ஒரு செல்போன், ஒரு கணனி இல்லாத அந்த மனிதர் பல தலைவர்களுக்குப் பாடம்.

நான் கேள்விப்பட்ட ஒரு சம்பவம், இந்தியாவில் சீக்கியரான ஒரு மாவட்ட ஆட்சியர், தமிழ்நாட்டில் ஒரு முக்கிய நகருக்கு நியமனம் ஆனார். பல அதிரடி மாற்றங்கள். நேர்மையாய் உழைக்கும் அதிகாரிகள், முதல்வர்களை வைத்து வந்த ஒரு சில திரைப்படங்கள் இவரைப் பின்னணியாக வைத்து எடுக்கப்பட்டனவோ என்று பலரும் எண்ணியதுண்டு. அப்படி நேர்மையாக, சிறப்பாகச் செயற்பட்டவர்.

ஒருநாள் அதிகாலையில் இவர் வழக்கம் போல் உடற்பயிற்சிக்காக நடந்து சென்றபோது ஒரு இடத்தில் சாக்கடை அடைத்துக் கொண்டு தண்ணீர் வெளியேற சிரமமாக இருந்தது. ஒரே நாற்றம். நகராட்சி ஊழியர்கள் அதைச் சுற்றி நின்று பேசிக் கொண்டிருந்தனர்.



அந்த மாவட்டஆட்சியர் அங்கே போனதும் கேட்டார். என்ன பிரச்சினை? சாக்கடை அடைச்சிருக்கு. அது தெரியுது. சுத்தம் செய்யிறதுதானே. ஒரே நாற்றமாக இருக்கு. எப்படி இறங்குறதுன்னு தெரியவில்லை. அவர்கள் சொல்லி முடிக்கும் முன்பு அவர் சாக்கடையில் இறங்கி அங்கிருந்த கருவிகளை வைத்து அந்த அடைப்பை எடுத்துவிட்டார். பின்பு மேலே வந்து இப்படித்தான் செய்ய வேண்டும் என்று சொல்லி அவர் வழி போனார்.

**ம.பிரான்சீஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

வாழ்க்கையின் பெரும்பகுதியை ஏழைகளுக்காகவும் சமுதாயத்தால் விலக்கப்பட்டவர்களுக்காகவும் செலவழித்த அன்னை தெரேசா, கோடானகோடி மக்கள் மனதில் அரியணை கொண்டிருக்கும் தலைவர் வாரன்பபெட் பணத்தையே வாழ்க்கையில் தெய்வமாக வழிபடும் பல நிறுவன முதலைகளுக்குப் பாடம் சொல்லித்தருகின்ற ஒரு பெரிய செல்வந்தர்கள்.

அரசு அதிகாரிகளும் நேர்மையாக திறமையாக உழைக்கமுடியும். அது வெறும் சினிமாக்கதை அல்ல என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு சீக்கியரான அந்த மாவட்ட ஆட்சியர். பணியாளர் தலைமைத்துவத்திற்கு இவர்களெல்லாம் உதாரணங்கள். உலகின் பெரிய பெரிய வியாபார நிறுவனங்களெல்லாம் பணியாளர் தலைமைத்துவத்தைப் பற்றி சிந்திக்கவும் செயற்படவும் ஆரம்பித்துவிட்டனர். இவர்களை இந்தப் பாதையில் சிந்திக்கத்தூண்டிய இயேசுவின் வார்த்தைகள் நம்மையும் நல்வழிப்படுத்த வேண்டுவோம். நாற்காலி, சிலுவை இரண்டுமே அரியணைகள் தாம். நாற்காலியா, சிலுவையா... தேர்ந்துகொள்வோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாட்டை



திரைவிமர்சனம்

நடிகர் : யுவன்
நடிகை: மகிமா
இயக்குநர்: அன்பழகன்

பாடம் நடத்தும் ஆசிரியர்களுக்கே பாடமாக வெளிவந்திருக்கும் படம்தான் "சாட்டை". ஆசிரியர் பணி புனிதமானது. அதில் அலட்சியர்கள் இருக்கக்கூடாது என்பதைப் பக்குவமாகப் போதித்திருப்பதற்காகவே அதைப்பாராட்டலாம்.

கதைப்படி, அன்பும் பண்பும் நிறைந்த கண்டிப்பான ஆசிரியர் சமுத்திரக்கனி.. மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய தேர்ச்சி தரும் அந்த ஊர் பள்ளிக்கூடத்திற்கு இயற்பியல் ஆசிரியராக அடியெடுத்து வைத்ததுமே திருத்தவேண்டியது அந்தப்பள்ளி மாணவர்களை அல்ல, ஒழுக்கக்கேடான ஆசிரியர்களை... என்பதை உணர்ந்து அதிரடியில் இறங்குகிறார். அவரால் பெரிதும் பாதிக்கப்படுவது அந்தப்பள்ளியிலேயே பல வருடங்களாக



டிரான்ஸ்பர் இல்லாமல்' பழம் தின்று கொட்டைபோட்டுவரும் உதவி தலைமை ஆசிரியர் தம்பி ராமையாதான். தம்பி ராமையாவும் அவரது சகாக்களும் சமுத்திரக்கனிக்கு எதிராகப்போடும் சதிராட்டங்களையும் சதி ஆட்டங்களையும் சமுத்திரக்கனி, தலைமை ஆசிரியர் ஜூனியர் பாலையா மற்றும் யுவன், மகிமா,பாண்டி உள்ளிட்டமாணவ, மாணவிகளின் உதவியோடு தவிடு பொடியாக்கி, பள்ளியின் தரத்தை உயர்த்துவதும் தேர்ச்சியிலும் ஏனைய பயிற்சிகளிலும் மாவட்டத்திலேயே முதன்மையான பள்ளியாக அந்த அரசு பள்ளியை மாற்

சமுத்திரக்கனி சமூதாய அக்கறை நிரம்பிய கண்டிப்பான ஆசிரியராக அதேசமயம் கடைசி இருக்கை மாணவர்கள் வரை கனிவு நிரம்பிய ஆசிரியராக கச்சிதமான பாத்திரத்தில் பொருந்தி நடித்திருக்கிறார். கடைநிலை மாணவர்களையும்கூட அவர்கள் வழியில் போய் முதல்நிலை மாணவனாக மாற்றும் இடங்களில் சபாஷ் போட வைக்கும் சமுத்திரக்கனி அலட்சியர்களாகிப்போன ஆசிரியர்களுக்கு பாடம் புகட்டும் காட்சிகளிலும் பலே சொல்லவைக்கிறார். அதேநேரம் அடிக்கடி புதிய விஷயங்களை திணித்து போதனையிலேயே பொழுதைக் கழிப்பதும் போரடிக்கிறது. மாணவி ஒருவரின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு யாரோ ஒருவர் செய்த பாவத்திற்குதான் பழி ஏற்று அடி உதைபட்டு பொலிஸ் நிலையம் செல்வதும் சமுத்திரக்கனி மீது பச்சாதாபத்தை ஏற்படுத்துவதோடு நமக்கு இப்படி ஒரு நல்லாசிரியர் வாய்க்கவில்லையே என ஏங்க வைக்கிறது.

சமுத்திரக்கனி மாதிரியே ரகளையான மாணவனாக வரும் யுவனும் நச் என்று நடித்து பல இடங்களில் உச் கொட்டவும் சில இடங்களில் இச்இச் கொடுக்கவும் வைத்திருக்கிறார். வீட்டில் படிபடி என அப்பா படுத்தும் பாட்டிற்குப் பதிலடியாக பள்ளியில் வெடி, வெடி என வெடிக்கும் பாத்திரத்தில் பச்சக்கென்று ஒட்டிக்கொள்ளும் படி நடித்திருக்கும் யுவன், மகிமாவுடனான இன்பாட்சுவேஷன் காதல் காட்சிகளிலும் கலக்கியிருக்கிறார்.

மகிமாவை ஒரு தலையாக காதலிக்கும் யுவன் ஒரு கட்டத்தில் மகிமா தன்னை காதலிக்கஆரம்பித்ததும் ஒதுங்கிக்கொள்வதும் அதற்கு அவர் தரும் பொறுப்பான பொருள் விளக்கமும் யுவன் மீது இன்னும் மரியாதையை ஏற்படுத்திவிடுகிறது.

யுவன் மாதிரியே மகிமாவும் நடிப்பில் கலந்து கலக்கிவிடுகிறார். தாவரவியல் ஆசிரியர் அவரிடம் தரங்கெட்டதனமாக நடக்கமுயலும் காட்சியில் அவரிடமிருந்து விடுபட்டு வெளியேற நினைக்கும்,துடிக்கும் சீன்களில் அவர் காட்டும் பரபரப்பும் விறுவிறுப்பும் போதும்.

மகிமாவின் நடிப்பாற்றலை பறைசாற்றுவதற்கு மிகப்பெரிய நடிகைகளே தடுமாறும் அதுமாதிரி காட்சிகளில் மகிமா பிரமாதப்படுத்தி இருக்கிறார். அவருக்கு பேஷ்பேஷ்!

சுவாசிகா, ஜூனியர் பாலையா, குண்டு பாண்டி, தம்பிராமய்யா, பாவா லட்சுமணன் உள்ளிட்ட நட்சத்திரங்கள் படத்தின் பெரும்பலம். அதில் தம்பி ராமய்யாவும் பாவாலட்சுமனனும் சில இடங்களில் பெரிய பலவீனமும் கூட.

இமானின் பின்னணி இசை, ஜீவனின் யதார்த்தமான ஒளிப்பதிவு உள்ளிட்ட ப்ளஸ் பொயிண்டுகளுடன் எம்.அன்பழகனின் இயக்கத்தில் சாட்டை ஒருசில குறைகள் இருந்தாலும் அரசுப்பள்ளிகளின் அவல நிலையையும் அதன் ஆசிரியர்களின் அலட்




# பசங்க பார்ட் - 2

இயக்குநர் பாலாஜி சக்திவேலின் ஆஸ்தான ஒளிப்பதிவாளரான எஸ்.டி.விஜய் மில்டன் தமிழில் நிறைய படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார்.

காதல் படம் தொடங்கி சமீபத்தில் வெளிவந்த வழக்கு எண் 18/9 படம் வரைக்கும் இவர்களது வெற்றி கூட்டணி தொடர்ந்தது.

ஒளிப்பதிவாளராக மட்டுமல்லாமல் மில்டன் சிறந்த படைப்பாளியாகவும் திகழ்ந்துள்ளார்.

அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது என்ற படத்தை இயக்கிய மில்டன் தற்போது தன்னுடைய சொந்த தயாரிப்பில் பசங்க படத்தின் இரண்டாம் பாகமாக பசங்க பார்ட் -2 வை இயக்கவுள்ளார்.

பசங்க படத்தின் இயக்குநர் பாண்டியராஜன் இந்தப் படத்திற்கு வசனம் எழுத உள்ளார். இந்தப் படத்துக்காக சமீபத்தில் பசங்க படத்தில் நடித்த அதே கதாபாத்திரங்களை வைத்து டெஸ்ட் ஷீட்டு எடுத்துள்ளார். அவர்களும் சிறப்பாக நடிக்க மில்டனுக்கு ரொம்பவே பிடித்து போய்விட்டது. இதனையடுத்து படப்பிடிப்பை இம்மாத இறுதியில் ஆரம்பிக்கலாம் என்று கூறியுள்ளாராம்.







# விசாலுக்கு விபத்து

சுந்தர் சி.இயக்கத்தில் விஷால் மதகஜ ராஜா என்ற படத்தில் நடித்து வருகிறார். இதன் படப்பிடிப்பு சென்னையில் நடைபெற்று வருகிறது. வில்லன்களுடன் விஷால் மோதும் சண்டைக்காட்சி ஒன்று சமீபத்தில் படமாக்கப்பட்டது.


இந்த சண்டைக்காட்சி படப்பிடிப்பில் கலந்து கொண்ட விஷால் தடுமாறி தலை குப்புற விழுந்தார். இதனால் விஷாலுக்கு தலையில் பலத்த அடி ஏற்பட்டது. பதறிய படக்குழுவினர் உடனடியாக தனியார் மருத்துவமனை ஒன்றில் அவரை சேர்த்தார்கள்.

விஷாலுக்கு பயப்படும் படி எதுவும் இல்லை என்றும் அவர் நன்றாக இருக்கிறார் என்றும் டாக்டர்கள் தெரிவித்தார்கள். தலையில் அடி பட்டிருப்பதால் சில நாட்கள் ஓய்வு எடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் கூறியதால் விஷால் தற்போது ஓய்வு எடுத்து வருகிறார். படப்பிடிப்பும் சில நாட்கள் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்து முன்னாள்வீரர் ஷேன் பொன்ட்- அணியின் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராக




நியூசிலாந்து அணியின் பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளாக நியூசிலாந்து அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஷேன் பொன்ட் நியமிக்கப் பட்டுள்ளார். ஷேன் பொன்டின் நியமனம் தொடர்பான விபரங்கள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளன.

நியூசிலாந்து அணி சார்பாக 18 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றிய ஷேன் பொன்ட் 87 விக்கெட்டுக்களையும் 82 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 147 விக்கெட்டுக்களையும் இருபது-20 சர்வதேசப் போட்டிகளில் 25 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தார்.


9 வருடத்திற்கும் மேலாக நியூசிலாந்து அணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றிய ஷேன் பொன்ட் உடல் உபாதைகள் காரணமாக மிகக்குறைவான போட்டிகளில் மாத்திரம் பங்குபற்றியிருந்தாலும் அண்மைக்காலத்தில் உலகில் தோன்றிய மிகச்சிறந்த வேகப் பந்து வீச்சாளர்களில் ஒருவராகக் காணப்படுகிறார்.

2010ஆம் ஆண்டு அனைத்து வகையான போட்டிகளிலிருந்தும் ஓய்வுபெற்ற ஷேன் பொன்ட் அதன் பின்னர் பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தார். அதன் விளைவாகவே அவருக்கு இந்தப் புதிய பதவி வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த ஷேன் பொன்ட் நியூசிலாந்துக்காக போட்டிகளில் பங்கு பற்றியமை தனது தொழில் முறையான வாழ்வில் மிக முக்கியமானதொன்று எனத் தெரிவித்ததோடு, கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றதும் கிரிக்கெட்டில் ஏதாவதொன்றில் ஈடுபடவேண்டும் என்பது தனது எண்ணமாக அமைந்ததாகத் தெரிவித்தார்.

புதிய பதவி மூலம் தனக்கு ஏற்கெனவே பரீட்சயமான வீரர்களுடன் இணைந்து சிறப்பான பெறுபேறுகளை கொண்டுவர முயலவுள்ளதாக தெரிவித்த ஷேன் பொன்ட் நியூசிலாந்து அணிலுள்ள வீரர்களிடம் அவர்களின் சிறப்பான பெறுபேறுகளை பெறுவதே தனது நோக்கம் என தெரிவித்தார்.

# கிரிக்கெட் வீரர் அப்துல் ரஷாக்கிற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அபராதம்




பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் அப்துல் ரஷாக்கிற்கு பாகிஸ்தான் கிரிக் கெட் சபை ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

பாகிஸ்தான் அணியின் இருபது-20 அணித்தலைவர் மொகமட் ஹபீசுக்கு எதிரான பகிரங்க விமர்சனத்திற்காகவே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் நேற்று முன்தினம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷாகா அஷ்ரப் மற்றும் பாகிஸ்தான் இருபது-20 அணியின் தலைவர் மொகமட் ஹபீஸ் ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய அப்துல் ரஷாக், தனது கருத்துக்களுக்காக மன்னிப்புக் கோரியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும், ஒழுக்கவியல் கோவைகளை மீறியமைக்காக அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

# அணித்தலைவர் பதவி கிடைக்காதது ஏமாற்றமே-ஷேன் வோட்சன்




அவுஸ்திரேலியாவின் சகல துறைவீரரான ஷேன் வோட்சன் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் சிறப்பாக செயற்பட்டு வருகிறார். இவர் இருபது-20 போட்டியில் சகல துறை வீரர்கள் வரிசையில் முதலிடத்திலுள்ளார்.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து அவர் இதுவரை மூன்று நிலைகளிலும் (டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டி 142 போட்டிகளில் 6 ஆயிரத்து 330 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

சராசரி 41.10 ஆகும் இதில் 7 சதமும் 48 அரைச்சதமும் அடங்கும். 150 சிக்ஸர்கள் அடித்துள்ள இவர் 20 முறை ஆட்டநாயகன் விருது பெற்றுள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் சம்பின்ஸ் லீக் போட்டியில் சிட்னி சிக்ஸர் அணியில் வோட்ஷன் சிறப்பாக ஆடிவருகிறார்.

தென்னாபிரிக்காவிற்கு எதிராக டெஸ்ட் தொடருக்காக நாடு திரும்புமாறு அவரை அந் நாட்டு கிரிக்கெட் வாரியம் அழைத்துள்ளது.

இதனால் அவர் சம்பியன்ஸ் லீக் போட்டியில் இருந்து பாதியில் திரும்புகிறார். இந் நிலையில் இருபது-20 போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் அணித்தலைவர் பதவி கிடைக்காதது தனக்கு ஏமாற்றமளித்தது என்று வோட்ஷன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், என்னைப் பொறுத்தவரை காலிஸ் சிறந்த சகல துறை வீரராவார். எனக்கும் தற்போது அந்த வாய்ப்பு கிடைத்தது அதிர்ஷ்டமே. துடுப்பாட்டத்தில் சிறப்பாக ஆடி ஓட்டங்கள் குவிப்பதையே அதிகமாக விரும்புகிறேன்.

இருபது-20 போட்டிகளில் அவுஸ்திரேலிய அணியின் அணித்தலைவர் பதவி கிடைக்காதது எனக்கு மிகுந்த ஏமாற்றமே என்றும் ஆனால் அணித்தலைவராக இருக்கும் பெய்லி சிறப்பாகவே செயல்படுகிறார் எனவும் கூறியுள்ளார்.

சமீபத்தில் நடந்து முடிந்த இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாக விளையாடிய வோட்ஷன் தொடர் நாயகன் விருது வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர்கள் மத்தி...

ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மாகாண சபைகள் முறைமைக்கு ஒரு தரப்பு ஆதரவளிக்கின்ற அதேவேளை ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி போன்ற இனவாத கட்சிகள் 13வது திருத்தத்தை உடனடியாக இல்லாதொழிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருவதாக அரசின் உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாகாண சபை முறையை ஒழிப்பதற்கான நேரம் வந்துவிட்டதாக பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் கூறியிருந்தார்.

அதேவேளை, இலங்கை அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய கூட்டாளிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி போன்றன 13வது திருத்தத்தை நீக்கக் கூடாது என்றும் அப்படி நீக்கினால் நாட்டில் வன்முறை, மோதல்கள் என்பன ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமையும் எனவும் வலியுறுத்தி வருகின்றன.

மேலும் மாகாண சபை முறைமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய தயாராகி வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இதற்கிடையே மாகாண சபை முறைமை மற்றும் 13-வது திருத்தத்தின் எதிர்மறை காரணிகள் தொடர்பாக தேசிய சுதந்திர முன்னணி ஏற்கெனவே பரப்புரைகளை தீவிரப் படுத்தியுள்ளது. (ந-11)

# தமிழருடனான இணக்கப்பாட்டுக்கு...

அவுஸ்திரேலியாவைத்தளமாகக் கொண்ட ஒன்லைன் ஒப்பினியன் இணையத்தளத்திற்கு இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முடிபுக்கு கொண்டு வரப்பட்ட இலங்கையின் நீண்டகால உள்நாட்டு யுத்தமானது, பிராந்திய சக்தியாக வளர்வதற்கான சந்தர்ப்பத்தை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

அங்குள்ள மொத்த மக்கள் தொகையில் 75 சதவீனமானவை சிங்கள பெரும்பான்மை சமூகத்தவர்களாவர். இதேபோன்று சிறுபான்மை சமூகத்தவர்களான தமிழர்கள் 20 சதவீதமாகும்.

அங்கு அரசாங்கத்தை எதிர்த்து தமிழ் மக்களின் ஆதரவுடன் கிளர்ச்சி அமைப்பானது 25 ஆண்டுகளுக்கு மேலாக யுத்தம் புரிந்தது.

இதன் காரணமாக 80ஆயிரத்திற்கும் அதிகமான உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன.

சிங்கள பெரும்பான்மை சமூகத்தவர்களால் தாம் ஓரம் கட்டப்படுவதாக 1970 மற்றும் 1980 களில் தமிழ் மக்கள் நம்பினர். இந் நிலையில் தமிழ்ச் சமூகமானது சிங்கள ஆட்சியை எதிர்க்க முற்பட்டனர். இவ்வாறு தொடங்கப்பட்ட குருதி தோய்ந்த யுத்தமானது 2009இல் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது.

இறுதிக்கட்ட யுத்தத்தில் இரு தரப்புக்களாலும் பல்வேறு குற்றங்கள் புரியப்பட்டமை தொடர்பில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன. முகாம்களில் அடைக்கப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் புலிகள் உள்ளனரா என்பதை அடையாளம் கண்டுகொள்வதில் அரசாங்க அதிகாரிகள் ஈடுபட்டனர்.

அதிலிருந்து இலங்கையானது மீள் இணைக்கப்பட்டு மற்றும் மீள்கட்டுமானம் போன்றவற்றில் ஈடுபடத் தொடங்கியது. முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர். புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களில் சேர்ந்த மக்கள் மீள் குடியேற்றப்பட்டனர்.

யுத்தத்தை வெல்வதற்காக எதிர் கொண்ட சவால்களை விட இலங்கை அரசாங்கத்தை பொறுத்தவரை நாட்டில் சமாதானத்தை வெல்வதென்பதில் மிக முக்கியமானதாகும். முதலாவதாக, முன்னைய யுத்த வலயங்களில் நிறுத்தப்பட்டுள்ள படையினர் வெளியேற்றப்பட்டு ஜனநாயகம் மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

தமிழ் பிரதேசங்கள் சந்திக்கும் பொருளாதார நெருக்கடிகளை முறியடிப்பதற்கு அங்கு முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் இங்கு முதலீடுகளை மேற்கொள்வதற்கான உந்துதல்களை வழங்க வேண்டும்.

இரண்டாம் உலக மகா யுத்தம் நடந்து முடிந்த பின்னர், முன்னைய எதிரி நாடுகளுக்கு அமெரிக்காவானது பல பில்லியன் டொலர்களை உதவியாக வழங்கியது. இதே போன்று இலங்கையின் எதிர்கால செழுமைக்கும் தமிழ் மக்கள் பொருளாதாரப் பங்காளிகளாக இணைக்கப்படுதல் முக்கியமானதாகும். தமிழ் மக்கள் தாம் நாட்டின் பொருளாதாரத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டுள்ளதாக நினைக்கக் கூடாது.

கடந்தகாலத்தில் தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக தமிழ் மக்கள் மீண்டும் நினைக்காதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக நம்பகமான விசாரணைகள் மேற்கொண்டு இவ்வாறான குற்றங்களில் ஈடுபட்டவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டும். இது மிக முக்கியமானதாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

# முன்னாள் போராளி...

களின் பின்னர் நீதிமன்ற உத்தரவிற்கமைய புனர்வாழ்வுப் பயிற்சி பெற்றவர்களில் 33 பேரில் 27 பேர் நேற்று சனிக்கிழமை விடுதலை செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

மிகுதி 6 பேர் இம்மாதம் 30ஆம் திகதி அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப் படுவர். (ந-11)

# காணாமல்போன...

செய்யப்பட்டுள்ளதாகவுமே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு காணாமல்போனோர் மற்றும் கடத்தப்பட்டோரின் உறவினரும் இதில் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் பெயர்களையும் வெளியிடுமாறும் காணாமல் போனவர்கள் தொடர்பாக சுயாதீன ஆணைக்குழு விசாரணை ஒன்றையும் ஏற்படுத்துமாறு வலியுறுத்தப்படவிருப்பதாகவும் அந்த அமைப்பினால் கூறப்பட்டுள்ளது. (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம் தரம் 6, 7, 8, 9, 10, 11

(தனி/குழு) தரம் 11 மாணவர்களுக்கு துரித மீட்டலுடன்
கடந்த கால வினாக்கள் செய்து விடப்படும்

தொடர்புகளுக்கு: 077 4205426

(786)


## 29 ஆயிரம் கோடி...

நிலையில் அதன் வருமான எதிர்பார்ப்பு 1.2 ரில்லியன் ரூபாய்களாகவே உள்ளன.

இதன்படி 2013 வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை 1.3 ரில்லியன் ரூபாய்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இதனைச் சமாளிப்பதற்காக எதிர்வரும் 8-ம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரிச் சுமைகள் அறிமுகப்படுத்தப் படலாம் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

இதனால் அத்தியாவசிய பொருட்கள் உட்பட்ட பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் என்று எதிர்க்கட்சிகள் எதிர்வு கூறியுள்ளன.

இதேவேளை வரவு செலவுத் திட்டத்தில் வடக்குக் கிழக்கின் மீள்குடியமர்வு தொடர்பிலான ஒதுக்கீடுகள் 50 மில்லியன்ரூபாயால்குறைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பொது போக்குவரத் துத்துறை மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றுக்கான ஒதுக்கீடுகள் 6 மற்றும் 20 பில்லியன்களால் குறைக்கப்பட்டுள்ளன. (ந-11)


மாபெரும் விசேட விலைக்கழிவு

## Jet D Express Courier Service

உங்கள் உறவுகளுக்கு நீங்கள்
அனுப்பும் பொருட்கள்
5 நாட்களில் சென்றடைய

(சி-1289)



விரைவு
பாதுகாப்பு
உத்தரவாதம்

| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 kg 1100/= | |
| Canada | Over 5 kg 1200/= | |
| Norway | Over 5 kg 1100/= | |
| Italy | Over 5 kg 1100/= | |
| France | Over5kg 1000/= | Over11kg 750/= |
| Germany | Over5kg 1000/= | Over 11kg 850/= |
| London | Over 5kg 1000/= | Over 11kg 750/= |
| Australia | Over 5kg 1000/= | Over 11lg 850/= |
| Netharland | Over 5kg 1000/= | Over 11kg 850/= |
| Swiss | Over 5kg 1100/= | Over 11kg 950/= |
| Denmark | Over 5kg 1100/= | Over 11kg 850/= |

Germany Over 5 kg 1000/=
Swiss Over 5 kg 1300/=
Australia Over 5 kg 1000/=



Note: 25kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு

உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக் கொள்ளலாம்.

Note : * கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும் வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

இல 27, முதலாம் மாடி,
நவீன சந்தை. (தனம்ரெக்ஸ் மேல்)
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 221 9150, 0772187 301

No: 77E. Manning Place,
Wellawatta, Colombo 06,
T.P:- 0112363873
0776509909



"தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்த கூலி தரும்"

## அலுவலக திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

இன்று காலை 9.02-10.30 மணிவரையுள்ள சுப வேளையில் எமது நிறுவனங்களான

வழிகாட்டி V4Educational Consultancy

V2 Travels & Tours Vex courier

நெல்லியடியில் மங்களகரமாக திறந்து வைக்கப்படவுள்ளன. இம் மங்கள நிகழ்வுக்கு தாங்களும் வருகை தந்து நிகழ்வை மேலும் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



நன்றி
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
Vகுழும அங்கத்தவர்கள்

முடக்காட்டுச்சந்தி,
பருத்தித்துறை வீதி
நெல்லியடி
யாழ்ப்பாணம்.
Tel: 0773867257

(சி-1353)



## பணியாளர்கள் தேவை

- Room boy
- வரவேற்பாளர் (ஆங்கில அறிவு இருப்பது விரும்பத்தக்கது)
- சமையலாளர்
- தோட்ட வேலை செய்பவர்

தொடர்புகளுக்கு:

பிருந்தாவன் விருந்தினர் இல்லம்
நீதிராசா வீதி, கேணியடி, கொக்குவில்.
(கொக்குவில் ஞான பண்டித வித்தியாலயம் அருகாமை)
T.P.:- 0212052077, 0777352165

(சி-1356)



## ALLIANCE FRANCAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna

Learn French The French Way

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரேஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய "Alliance Francaise de Jaffna" ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ்சு பேசப்படும் நாடுகளுக்குச் செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்.

ஆறு மாத கற்கைநெறியின் பின் தரமான Certificate வழங்கப்படுகிறது.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.....

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்

61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone-0212228093/நேரில்வரவும்

E-mail: alliancejaffna@yahoo.com

(முக்கா வீதியும் கச்சேரி- நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடம்)

(777)



GlaxoSmithKline

சூடான, குளிரான, இனிப்பான அல்லது உவர்ப்பான ஏதேனும் ஒன்றை உட்கொள்ளும் சமயங்களில் பற்களில் உணரப்படுகின்ற வலி கூர்உணர்ச்சியினாலேயே ஏற்படுகின்றது.

இது பற்களின் ஆழமான உட்பகுதியிலிருந்து தோற்றுவிக்கப்படுகின்றது






பற்களில் எனாமல் கீழே உள்ள மென்மையான பகுதியாகிய டென்ரின் வெளிப்படுவதால் பற்களில் கூர்உணர்ச்சி தோற்றுவிக்கின்றது. சென்சொடைன் பற்களின் அடிப்பகுதிக்குள் ஆழமாகச் சென்று கூர்உணர்ச்சி கொண்ட பற்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது. சென்சொடைன் உபயோகித்து தினசரி இருதடவைகள் பல்துலக்குவதால் கூர்உணர்ச்சிக்கு தொடர்ச்சியான நிவாரணம் கிடைக்கின்றது.

50 கிராம் - ரூபா 220 100 கிராம் - ரூபா 420

(சி-1287)

தொடர்ச்சியான பலனுக்கு தினசரி இருதடவைகள் சென்சொடைன் பற்பசையை உபயோகித்து பல்துலக்கவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.